www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ஒக்டோ.31 - நவம்.06.1993
ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 23



## புத்தாண்டில் போர் மூளுமா? யாழ் நகருக்குள் படைகள் செல்லுமா?

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## படையெடுப்பால் எட்டமுடியவில்லை பத்திரிகையாளர்கள் சென்று வந்தனர்

அரசியல் அலசல்

குரங்கின் இருதயத்தோடு வாழும் மனிதன்

மருத்துவ விந்தை



உலக ரவுண்டப்

பெனாசிரால் முடியுமா?

தையல்

சமையல்

லேடீஸ் ஸ்பெசல்

இலக்கிய நயம்

கண்ணே மதுமிதா

பாப்பா முரசு

ஸ்போர்ட்ஸ்

## புத்தம் புதிய சினிமாச் செய்திகள் சித்தம் வியக்கும் அதிசய நிகழ்வுகள்!

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
தமிழ் நாட்டிலிருந்து
வருகின்ற சஞ்சிகைகளைக் கண்டு
நமமவர்கள் வியந்ததுண்டு.
தமிழகத்தில் பல நணபாகள்
தினமுரசைக் கண்டு
வியந்து பாராட்டியிருக்கிறார்கள்.
மனம் திறந்து வாழ்த்தியும் இருக்கிறார்கள்.
கவிஞா வைரமுத்து,
கவிஞா காமராசன,
எழுததாளா பாலகுமாரன்
இபபடி பல இலக்கிய நண்பர்கள்
மகிழ்வு காட்டி வரவேற்றுள்ளார்கள்.
தமிழக சஞ்சிகைகளில் சில
முரசில் வந்த
சினிமாச் செய்திகளை
மறுபிரசுரம் செய்துள்ளமையும்
மற்றொரு செய்தி.
அந்தளவுக்கு-முரசின்
தமிழக நிருபரும்
சினிமாச் செய்தியாளரும்
முந்திக்கொண்டு அங்கிருந்து
செய்திகளைத் திரட்டி அனுப்பிவிடுகிறார்கள்.
உங்கள் சார்பில்
அவர்களுக்கு இனிய பாராட்டுக்கள். ■

25வது வெள்ளிவிழா வார
வெற்றிப் படியில்
உங்கள் முரசு தடம் பதிக்கப் போகிறது.
அந்த சந்தோசத்தை
உங்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டாமா?
ரசிகன் எழுதும் குறுநாவல் ஒன்று
25வது முரசோடு
உங்களுக்கு அன்பளிப்பாய் கரம் வரும்.
என்ன சநதோசமதானே!
இது- ஆரம்பம்தான்,
உங்கள் முரசு
மேலும் ஏற்றம் பெறும்போது
இன்னும், இன்னும்
இனிய ஆச்சரியங்களைத் தரும். ■

தேன் கிண்ணம் பகுதிக்கு
தேடி வரும் கவிதைகள்
தாங்கிவரும் தரமான கருத்துக்களால்
நெஞ்சில் வியப்பை விதைக்கின்றன.
எரியும் பிரச்சனைகளால்
வெப்பத்தை தக்க வைத்துக்கொண்டிருக்கும் பூமியில்
தென்றலின் சுகத்தை தேடுவது எப்படி?
அதுதான்- இங்கே எழுதுகின்றவர்களும்
நெஞ்சில் உள்ள
நெருப்பைக் கொட்டுகிறார்கள்.
கவிதை ஒரு கைவாள்.
அரக்கத்தனங்கள் மீது
அது குறிவைத்து வீசப்படும்போது
வேகமும்- வெப்பமும், வீரியமும்
இருக்கத்தானே செய்யும்!
இருக்கட்டும். ■

எழுதுவது- உணர்வு பூர்வமாய் எழுதுவது
அப்படி ஒன்றும் சுலபமான வேலையல்ல.
சிலர் அப்படித்தான் நினைத்துக்கொள்கிறார்கள்.
அதுதான்- தாங்கள் எழுதுவதை எல்லாம்
பிரசுரிக்க வேண்டும் என்று பிடிவாதம் செய்கிறார்கள்.
என்றாலும் ஒன்று சொல்வேன்.....

திருட்டு எழுத்தாளர்களை விட
இவர்கள் மேலானவர்களே!
எழுதுங்கள். தொடர்ந்து எழுதுங்கள்.
பிரசுரமாகவில்லையே என்று
தளர்ந்து போகாதீர்கள்.
உண்மையான எழுத்து என்பதும்
ஒரு யாகம்தான்.
உணர்வுகளை நெய்யாக ஊற்றி
செய்யப்படும் யாகம்தான். ■

மாற்றுக் கருத்துக்களை
வெறுப்புடன் நோக்குவது.
சொல்லப்படும் கருத்திலே தவறு கண்டால்
பொருத்தமான கருத்துச் சொல்லி மறுக்காமல்
துள்ளுவது, துடிப்பது, ஆத்திரமாய் வெடிப்பது
ஆக்கபூர்வமான முறையாக இருக்காது.
இன்று- தமிழ் பேசும் மக்களின்
அரசியல் அரங்கின்
இருள் சூழ்ந்த நிலைக்கும்
உணர்வுபூர்வமான சக்திகள் இழக்கப்பட்டதற்கும்
அப்படியொரு
தவறான முறைதானே தலையாய காரணம்!
முரசில் வந்த ஒரு சில
சமகால பிரச்சனை பற்றிய கதைகள்
சிறு சலசலப்பை எங்கோ
ஏற்படுத்தியிருக்கிறது.
'யார் அந்த எழுததாளா?
எங்கே இருக்கிறார்?'
முகவரி சொல்லுங்கள், என்று
'வீரமாய்' சிலர் மடல் எழுதினார்கள்.
படித்தபோது சிரிப்பே வந்தது.
முகம் மறைத்து துள்ளுவது கோழைத்தனம்.
தம்மையே தாம் ஏமாற்றிக்கொள்ளும்
கையாலாகாத்தனம்.
மறுகருத்து உண்டா சொல்.
தவறு என்று நிரூபிக்க நினைக்கிறாயா?
ஆதாரத்தோடு மறு.
ஆணித்தரமாய் கருத்துச் சொல்லு.
அது இங்கே அங்கீகரிக்கப்படும்.
எழுதுகின்றவனை கிழிப்பேன், என்று
கையாலாகாத்தனமாய் கத்துவது
சினம் கூட தராது. சிரிப்பே வரும்.
முரசில் எழுதுகின்றவர்களின் கருத்துக்களோடு
முரசு சகல விசயங்களிலும் உடன்படாமல் போகலாம்.
ஆனால்,
எழுதுகின்றவர்களின் சுதந்திரத்தை
காயப்படுத்துவதை முரசு அனுமதிக்காது.
எழுதுகின்றவனுக்கு பேனா மட்டும்தான்
தெரியும் என்று நினைத்துக்கொண்டால்
அது நினைப்பவர்களின் தவறு.
அன்புக்கும், ஆணித்தரமான கருத்துக்கும்
முரசு எப்போதுமே முன்னுரிமை கொடுக்கும்.
மிரட்டல், துள்ளல், கத்துதல்
இங்கே சரிப்பட்டு வராது.
அவற்றுக்குரிய முகவரி முரசல்ல!
பக்கம் சாராமல் தக்க கருத்து
சொல்லும் போது
எதிர்வரும் சவால்களை
ஏற்பதும், எதிர்த்து நிற்பதும்
இனிப்பானது. எமக்கு விருப்பமானது.
எனவே- அன்பு நெஞ்சங்களே
எழுதுங்கள்- எழுதுவோம்.
இருட்டுகள் விலகட்டும்.
இனிய புதிய உதயமே
உங்கள்
இலக்காக இருக்கட்டும்.
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை.....

அன்புடன்
ஆசிரியர்.

---

**தினமுரசு
போன்: 820265**

## கவிதைப்போட்டி இல-20

களம்தேடி வந்தவற்றில் வெற்றிமுகம் கண்டதுவும் - வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

சாந்தி-சமாதானம்
கொலுவேற
காந்தியே
கழுவேறினாரா?

எ.சசிகலா
அனிவத்த
கண்டி.

### வியக்கப்பட்டவைகள்

அராஜக
முட்கம்பிகளினால்
காயப்பட்டு
நிற்கிறது
ஜனநாயகம்

யூலி
றாகம.

**சுதந்திரம்**
முட்கம்பி வேலிக்குள்
முடங்கிவிட்ட
மனித சுதந்திரம்

ச.மகாலிங்கம்
வெளிமடை

**விளம்பரம்**
கட்டுண்டது மனிதம்
இரும்பானது இதயம்
மலிவானது மரணம்
அதற்கிங்கே விளம்பரம்

மன்னனூர் மதுரா
புசல்லாவ.

**தீர்ப்பு**
ஓ-சமுதாயமே
ஒரு சத்திய
சகோதரனுக்கு
சமாதி தான்
சமாதானமா?

ஏ.எம்.றாசிக் பரீத்
முள்ளிப் பொத்தானை.

**நிச்சயம்!**
ஆயுதக்களைகள்
அகற்றப்படும்வரை,
அமைதிப் பயிர்களின்
அழிவு நிச்சயம்!

கே.கோவிந்தராஜ்
வாழைச்சேனை.

வதை பாதி
வறுமை பாதி
இணைந்ததுவோ
இன்றைய நீதி....?

எஸ். சிராஸா பானு
கெக்கிராவை.

ஆ.....!
இது என்ன
இன்னும் ஒரு
குட்டிமணியா?

அழகானந்தம் அரவிந்தன்
கொழும்பு-15.

**அத்தாட்சி**
துஷ்டர்களால்,
கட்டப்பட்டு
துப்பாக்கிக்கு
பலியான
அப்பாவி
மனிதனின்
அஸ்தமனதோற்றம்
சிலையாகியதோ?

சுப்பிரமணியம் வாணீஸ்வரி
கலஹா.

**தியாகச்சின்னம்**
இது
எங்கள் தேசத்தின்
தியாகச் சின்னம்!
சித்திரவதைகளால்
'மனிதம்'
வரையறுக்கப்படும்
புதிய கோட்பாட்டின்
பீறப்பிடம்!
அடுத்த சந்ததி
அடிபணிதற்பொருட்டு
இது
அங்கீகரிக்கப்படுகிறது!
சிலை நிறுவுவதற்காக....

மாவை-வரோதயன்.

**"இதுவும் ஒரு வதை"!**
சிலுவையில்-
அறையப்பட்டார்....
"தேவன் மகன்"-
அன்று!
கம்பியில்
முடியப்பட்ட....
"மனித மகன்"
இன்று!

வாஹிட் ஏ.குத்தூஸ்
மட்/கோட்டைமுனை.

## கவிதைப் போட்டி இல-23



*உங்கள் உணர்வுகளில் உருவாகும் எண்ணங்களைத் தபாலட்டையில் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 06.11.93.*

-முகவரி-
கவிதைப் போட்டி இல:23
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

அஸ்தமனம் போலே
இரத்தமயமான
போரின்
அற்புதமோ!

திதக்ஷலா
திருமலை.

**என்ன (அ)நியாயம்?**
பயங்கரவாத முட்கம்பிகளுக்குள்
கட்டுண்டு கிடக்கும்
நம் நாட்டின் நிலையோ இது?

பெனிட்டா லொயோலா
கொழும்பு-13.

**தீர்ப்பு**
இந்நிலை கண்டால்
கர்ப்பத்திலிருக்கும் குழந்தையும்
மண்ணுலகு காண மறுக்குமல்லவா!

நிஷார்தீன்
கிண்ணியா.

**"சமாதானம்"**
எம்மையாவது
வாய்திறந்து
பேசுவதற்கு
அனுமதிகொடு!
இல்லையேல்....
நீயாவது
பேசி
எம்மை
சிறையெடு!

து. கலைவாணி
எந்தளை-வத்தளை.

மனிதம் தோற்றுவிட
ஆயுதம் வெல்கிறது!

கே. ஸ்ரீரஞ்சனி
மட்டக்களப்பு.



**சு(தந்திரம்)**
சுதந்திரம்
மறுக்கப்பட்டு
மரணத்தின்
வாசலுக்கு
வழங்கப்பட்ட
சுதந்திரம்!

இ.ஸ்ரீதர்
பேராதனை வளாகம்.

**வதை**
சிறையில்
விதைத்து விட்ட
வதையின்
வடிவங்கள்

எம்.ஏ.புகாரி
திருகோணமலை.

**அ(எ)து**
அட.....இது என்ன
சிதையா
சிலையா

செல்வி வஸீலா சலாகுடீன்
பொல்வதுர.

**ஓவியம்**
சித்திரவதையின்
திறந்த வெளியரங்கு
இறந்து விட்ட
மனிதத்துவத்தின்
உயிரோவியம்

எல்.கே. நாதன்

**வழி வேண்டும்!**
செத்தவனுக்கு
சிலை வைப்பதில் பயனில்லை!
உயிருடன் இருக்கும் எமக்கு
உரிமை வாழ்வு வாழ
வழி வேண்டும்!

க. பரமானந்தராஜா
கல்குடா.

**முடிவு**
விதைப்பதெதுவோ விளைவததுவே
பதை பதைக்க பலி எடுத்தேன்
கதை முடிவு எனக்குமதே-

செல்வி. வை.யுவதர்சினி
வாழைச்சேனை.

**சிலுவை**
கலியுகத்தின்
சிலுவை
இதுவோ!

சு.மஞ்சு
மாத்தளை.

மனித உயிர்ப் பறிப்புக்கு
இப்படியும் பரீட்சையா?

ஜெ. பரமேஸ்வரி
கொழும்பு-14.

---

# வாசக(ர்)சாலை

முரசு தரும் அரசியல் அலசலும், எக்ஸ்ரே ரிப்போட்டும் பக்க சார்பின்மைக்கு தெளிந்த சான்றுகளாகும். தொடரட்டும் பணி.

வீ. சதாசிவம்-கொழும்பு-6.

•

ஏதாவது ஒரு சார்பு நிலை நின்று தவறுகளை மறைக்காமல் யார் தவறு செய்தாலும், சுட்டிக்காட்டத் தவறாத துணிச்சலுக்கு என்றும் வரவேற்புக் கூறுகிறோம்.

எம். நிலாம்தீன்- புத்தளம்.

•

தேன்கிண்ணம் தரும் கவிதைகள் காலத்திற் கேற்ற படைப்புக்களாக, எம் கருத்தைக் கவர்கின்றன. படைப்பவர்களுக்கு பாராட்டுக்கள்.

எஸ்.லோகினி-வாழைச்சேனை.

•

கண்ணே மதுமிதா தொடர் சூப்பர். ரசிகனுக்கு கைகுலுக்கி வாழ்த்துக்கள். அஸ்வதியும் அசத்துகிறார்.

ஆ.சோதி-குருநாகல்.

•

**ஒரு விண்ணப்பம்**

வளர்ந்து வரும் இளம் முஸ்லிம் எழுத்தாளர்களின் ஆக்கங்களை, அதுவும் சிறுகதைகளை தினமுரசு மூலமாகப் படிக்கக்கிடைக்கின்றது. மகிழ்ச்சி.

இருப்பினும் மனதில் சிறு உறுத்தல். அதாவது, இவ்வெழுத்தாளர்களின் கதைகளில் வசந்தனும், மாலதியும் மட்டும் தான் வரமுடியுமா? வஹாப்பும், ஜரீனாவும் வரமுடியாதா?

இது சிறு உதாரணம்தான்.

நீண்ட காலமாக நான் அவதானித்து வரும் இந்தக் குழறுபடிக்கு தினமுரசு முற்றுப்புள்ளி வைக்குமா? நன்றி.

எம். மகேஸ்வரன்-கொழும்பு-6.

திரு. மகேஸ்வரனின் கேள்விக்கு இளம் முஸ்லிம் எழுத்தாளர்கள் விடை தந்தால் அதற்கும் முரசு இடம் தரும். (ஆ.ர்)

•

வாரத்தில் ஒருமுறை வலம் வந்து எங்கள் இதயத்தை கொள்ளை கொண்ட முரசே, உன் பணி மேலும் தொடர்ந்து சுடர்விட்டுப் பிரகாசித்து வளர என் இனிய வாழ்த்துக்கள்.

கே. மதி-ஹேவாஹெட்டை.

•

முரசு என்றால் முகத்தில் ஒரு வனப்பு. அதில் உள்ள மதுமிதா என்றால், கண்ணில் ஒரு மயக்கம். தெவிட்டாத தேன்கிண்ணத்தைக் கண்டால் மறக்காத ஒரு இனிப்பு. சிந்தியாவின் பதில்களைக் கண்டால் சிந்தனைக்கு ஒரு சிகரம். மொத்தத்தில் முரசே ஒரு இமயம்.

சிலாவத்துறை-ஓ.எஸ்.ஸாஹிர்.

•

மானிலத்தில் மானிடரை கவர்ந்துவிட்ட எம் அன்பு மாமலரே! உன்னில் பொதிந்துள்ள செந்தமிழ் வண்ணக் களஞ்சியங்கள் ஆடவரையும், பெண்களையும் கவர்கின்றன. தேன்சுரக்கும் சினிவிசிட். செய்திகள், தெவிட்டாத சிறுகதைகள். மனதுக்கு இனிய கவிதைகள் மற்றும் பல்சுவை அம்சங்களும் வெகு பிரமாதம். உன் சேவை மென்மேலும் தொடர எங்கள் வாழ்த்துக்கள்.


வாழ்க வளம் பெற.

செல்விகள். கே. சித்ராதேவி, ஜீ. நிர்மலாதேவி-பாரதெக்க.

•

அன்பு மலரே!

வாரா வாரம் நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம்! குறிப்பாக எக்ஸ்ரே ரிப்போர்ட் மூலம் இன்றைய அரசியலில் நிலைமையை அலசி ஆராய்ந்து தெட்டத் தெளிவாக துணிச்சலுடன் வெளியிடும் விதம் அருமையிலும் அருமை! நீ வாழ்க! நீ வளர என் வாழ்த்துக்கள்!



எஸ்.கே. தங்கதுரை-அவிசாவளை.

•

அன்பின் முரசே!

பத்திரிகைக் களத்திலும், வாசகர்களது உள்ளத்திலும், சமாதானத்தின் நலத்திலும் நாட்டம் செலுத்தும் புதிய ஓட்டம் செலுத்தும் உனது உளப்பாடுகளும், வெளிப்பாடுகளும் கண்டு என்னுள்ளம் பூரிக்கின்றது. அதுமட்டுமின்றி, முரசினை உரசும்போது புரிகின்றது முரசுக்கோ, அரசுக்கோ தொடர்பில்லாத பண்பு. அடுத்தவருக்கோ, நாட்டைக் கெடுத்தவருக்கோ தலைகுனியாது. பத்திரிகை சுதந்திரத்தை பேணி வளர்க்கும் பாணி. இவைகளே உன் வளர்ச்சிப் பாதைக்கு ஏணி வாழ்த்துக்கள் பல!

கல்லூர் சாந்தி-மட்டக்களப்பு.

•

அன்பின் முரசே

நீ வாரந்தோறும் வழங்கும் கவிதைப்போட்டிகள் மூலம் முடங்கிக் கிடக்கும் மாணவர்களின் சிந்தனையாற்றலைத் தூண்டி, ஈழத்திலே எத்தனையோ கவிஞர்களை உருவாக்கப் போகிறாய். வளர்க உனது சேவை. வாழ்க கவிதை.

நா.திவாகரன்-தோப்பூர்.

•

**அவியலோ அவியல்**

கடந்த 17.10.93 தினமுரசில் வெளியான (பின்பக்கம்) அவியல் உணவை செய்து சோற்றுடன் சாப்பிட்டோம். அட....டா பிரமாதமான சுவை! எங்கள் குடும்பத்தினர் சௌந்தரி அன்ரி, வாணி, லதா, சுசி, விசாலாட்சி, லட்சுமி அன்ரி, அப்பா, சீனியப்பா சிவலிங்கம், சுதா, சுதாகரன், குட்டி சந்துரு, பிளக்மதீஸ் டயானா, மதிமீனா ,மதியூரதன், பேபி சந்திரபானு ஆகியோர் சுவையிலே தமை மறந்து, மகிழ்ச்சியுடன் இதனை எமக்களித்த திருமதி சிவபாக்கியம் தியாகராஜாவை வாழ்த்துகின்றார்கள்.

சமைத்துப் பகிர்ந்தவர்-
திருமதி பத்மா முத்து மாதவன்-வாழைச்சேனை.

•

வாரம் தோறும் அள்ளி வந்து வாரி வழங்கும் தினமுரசின் அனைத்து அம்சங்களும் சிந்தனை ஆற்றலைத் தூண்டி விடும். கவிதை போட்டி இனிமையை தருகின்ற இதுதினமுரசின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாகும். என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சியானா ஜவாட்-அக்குறணை.

•

**விழிப்புடன் இருங்கள்**

காப்பி அடி "மாஸ்டர்களுக்கு ஒரு பலத்த அடி" தினமுரசு

ரயிகம-ஸ்ரீகாந்தன்-இங்கிரிய.

•

9.10.93 அன்றைய "தினமுரசில்" எம்.சுரேஷ் எழுதிய "மாற்றம்" என்னும் சிறுகதை ஓர் புதுமையான கருத்தை எடுத்துக் காட்டி, ஆணுக்கும் பெண்ணுக்கும் சம நியதி என்பதைப் புரியவைக்கிறது. இப்படியான புதிய கருத்துக்களை முரசில் இடம் பெறச் செய்யும் கதாசிரியர் சுரேஷுக்கு வாழ்த்துக்கள் பல.

அ.ஆத்திகா-இரத்தினபுரி.

•

**பிற மலர்களில் இல்லாத புதுமணம்**

என் இனிய முரசே!

உனது பெயரிலே அரிய கருத்துக்களைப் புதைத்துள்ளாயே. "மு என்றால் முருகு எனவும், "ர" என்றால் ரசனை எனவும், "சு" என்றால் சுவை எனவும் பொருள் கொண்டுள்ளாய். அதுவே உனது புதுமணம்.

க. மதிசீலன்-களுவாஞ்சிகுடி.

•

**முரசொலியின் மகிமை**

ஈழத்தின் தாயப்பா, இளைஞர்களின் இணைபிரியா தோழியப்பா,-உனை

இமைக்காது பார்க்கையிலே புதுமையான தமிழ்மொழியில் இலக்கிய வர்ணங்கள், காவியச் சிற்பங்கள், கவிபாடும் புத்துணர்வு.

ஈடிணையற்ற முரசொலியின் மகிமையோ பார். இல்லத்திலிருந்து கொண்டு யாவரையும் வியக்க வைத்து பூரித்துக் கொட்டுகின்றாயே, திறமான தமிழ் மொழியாய்! நீடுழி வாழ்க, வளர்கவென்று வாழ்த்துகிறேன் வாசகனாய்.

பொ.நாராயணன் சித்ரா-இரம்பொடை.

•

வாரம் தோறும் பவனி வந்து எம் இதயங்களில் இடம்பிடித்த ஒரே பத்திரிகை தினமுரசே. அதில் வரும், சிறுகதை, சினிமா, அரசியல், கவிதை அனைத்து அம்சங்களும் எம் இதயத்தை குளிரச் செய்கிறது.

செல்வி. ரஞ்சனா வடிவேலு-சாமிமலை.

•

# விரைந்து தாக்குதல் நடத்த விசேச படையணி! இராணுவத் தளபதியின் தலைமையில் செயற்படும்!!

## யாழ்ப்பாணத்தில் புலிகள் கூறுகின்றனர்

வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளின் போது விரைந்து தாக்குதல் நடத்தக்கூடிய படையணி யொன்று (ஆர்.டி.எஸ்) இரகசியமாக அமைக்கப்பட்டு வருவதாகப் புலிகள் அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளனர்.

கொழும்புத் தகவல் ஒன்றை ஆதாரம் காட்டி புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் அந்தச் செய்தி தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ண தலைமையில் அந்த புதிய பிரிவு செயற்படும் என்றும், அந்த பிரிவில் ஒரு பகுதியினர் ஏற்கனவே வட பகுதி இராணுவ முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் புலிகள் கூறியுள்ளனர்.

திறமையின் அடிப்படையில் கஜபாகு, சிங்க படைப்பிரிவுகளில் இருந்து புதிய பிரிவுக்கு வீரர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளதாகவும் புலிகள் மேலும் கூறியுள்ளனர்.

இதே வேளையில் வடபகுதியில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் புலிகள் ஊர்வலங்களை நடத்தி வருகின்றனர்.

சமீபத்தில் வடமராட்சிப் பகுதியில் "போர்க்கால தீவட்டி ஊர்வலம்" ஒன்று நடத்தப்பட்டது.

ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் தீவட்டிகளோடு சென்றனர்.

'போராடப் புறப்படுவோம்' என்று கோசமிட்டபடி ஊர்வலத்தின் முன்பாக புலிகள் அமைப்பினர் சென்று கொண்டிருந்தனர்.

"எங்கள் தலைவர் பிரபாகரன்", "புக்காரா குண்டு, விளையாட்டுப் பந்து" போன்ற கோசங்களும் எழுப்பப்பட்டன.

வடமராட்சியில் உள்ள பலியான புலிகள் அமைப்பு உறுப்பினர்களின் நினைவுத் தூபியில் ஊர்வலம் முடிவடைந்தது. போர்க்காலக் கருத்தரங்கும் அங்கு நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் போர்க்கால கருத்தரங்குகள் புலிகளால் நடத்தப்பட்டு வருகின்றன.

'பொறுத்தது போதும்' என்ற வீதி நாடகமும் நடைபெற்று வருகிறது.

கடந்த 21ம் திகதி யாழ் வைத்திய சாலை ஊழியர்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்து கடமை யாற்றினார்கள்.

யாழ் பொது மருத்துவமனைமீது இந்தியப் படையினர் தாக்குதல் நடத்திய 6வது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

## இனப்பிரச்சனை இல்லை என்று சொல்வதா? இம்மானுவேல் அடிகளார் கண்டனம்!

இனப்பிரச்சனையைத் தீர்க்க இலங்கை அரசு நிதானபோக்கையும், உயர்ந்த இலட்சியங்களையும் கடைப் பிடிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ் மறை மாவட்ட பிரதம ஆயர் இம்மானுவேல் அடிகளார் கூறியுள்ளார்.

யாழ் புனித பத்திரிசாரியார் குருத்துவக் கல்லூரியின் விழா ஒன்றில் அவர் உரையாற்றினார். மேலும் அவர் தனது உரையின் போது,

"யாழ் குடாநாடு துண்டிக்கப்பட்ட நிலையில் இங்கு வாழ்வது கடின மானதாகவும், சவால்கள் நிறைந்ததாகவும் உள்ளது. எம்மைப் போன்ற கல்வி சார்ந்த சமூகத்துக்கு இது இடர் நிறைந்ததாக உள்ளது.

அதிகாரம் தேடும் அரசியலுக்கும், பாதுகாப்பு நிறைந்த இராஜதந்திரத்திற்கும் இடம் கொடாமல், மனிதத் தன்மையுடனும், உயர் பண்புடனும் நடந்து கொள்ளுமாறு அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் துணிவு எமக்குண்டு.

எமது அடிப்படை மனித உரிமை களுக்காக பல்லாண்டுகாலம் போராடி சாவுக்கும், அழிவுக்கும் உள்ளாகிய தமிழ் மக்களாகிய எம்மைப் பார்த்து இலங்கை ஜனாதிபதி இனப்பிரச்சனை இங்கு இல்லை என்று கூறியுள்ளார்.

சிங்களவரோ, தமிழரோ, முஸ்லிமோ இந்த நாட்டின் சுய மதிப்புடைய எந்தக் குடிமகனோ இதை உண்மை என்று ஏற்கப் போவதில்லை.

இனப்பிரச்சனையை மறுத்து பயங்கரவாதம்தான் இங்குள்ள ஒரே பிரச்சனை என்று கூறுவதால் அரசுக்கு நிதியுதவியும், போருக்கு ஆயுதங்களும் கிடைக்கும். ஆனால் சிங்களப் படை வீரர்களுக்கும், தமிழ் பொது மக்களுக்கும் இது மேலும் அழிவுகளையே கொண்டுவரும்."

இவ்வாறு இம்மானுவேல் அடிகளார் தனது உரையில் தெரிவித்தார்.

## கண்ணிவெடி பரிசோதனைக்கு கைதிகள்! கிளாலிப் பகுதியில் புலிகளின் உத்தி!!

கிளாலியில் மீண்டும் படகுச் சேவை ஆரம்பித்ததையடுத்து பெருந்தொகையான பயணிகள் வந்து காத்துநிற்கின்றனர்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது புதைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகளுக்குப் பயணிகள் சிலர் தமது கால்களை இழந்தனர்.

அதனையடுத்து நிலக்கண்ணி வெடிகளைக் கண்டுபிடித்து அப்புறப் படுத்துவதில் புலிகள் அமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

நிலக் கண்ணிவெடிகள் இருக்கக்கூடும் என்று கருதப்படும் பாதைகளில் தம்மிடமுள்ள கைதிகளை விட்டு புலிகள் அமைப்பினர் பரிசோதனை நடத்துகின்றனர்.

புலிகள் அமைப்பினரின் சிறைகளில் உள்ள ஏனைய தமிழ் அமைப்புக்களின் உறுப்பினர்கள், மற்றும் புலிகள் இயக்கத் திற்கு விரோதமானவர்கள் என்று கருதப் படும் தமிழர்கள் ஆகியோர் அவ்வாறு கண்ணிவெடிகளைக் கண்டறியும் வேலை களில் ஈடுபடுத்தப்பட்டனர்.

சிரமதானப் பணிகள் என்று கூறப்பட்டு கைதிகள் நிலக்கண்ணி வெடிகள் உள்ள பகுதிகளில் வேலைகளில் ஈடுபடுத்தப்படு வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் மனித உரிமைகளுக்கு முற்றிலும் மாறானதாகும்.

முன்னர் ஆடு மாடுகளையே கண்ணி வெடிகளை கண்டுபிடிக்கப் பயன்படுத்துவ துண்டு. கண்ணிவெடிகள் இருந்தால் அவை சிக்கிக்கொள்ளும்.

## யாழ்தேவி புலிகளுக்கே வெற்றி! சிங்களப் பத்திரிகை பாராட்டு!!

கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகை ராவய.

அந்தப் பத்திரிகையின் நிருபர்கள் 17 நாட்கள் வட பகுதியில் தங்கி இருந்து, அங்குள்ள நிலமைகளை அவதானித்துவிட்டு கொழும்பு திரும்பியுள்ளனர்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை நடை பெற்ற போது அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தனர். அரசாங்கம் இராணுவத் தீர்வையே விரும்புகிறது. அடுத்த ஆண்டில் ஆசியா விலேயே பாதுகாப்புக்காக அதிக செலவிடும் நாடாக இலங்கை மாறும். பாடசாலைகள் இராணுவ பயிற்சி மையங்களாக மாறும் என்று அவர்கள் யாழ்ப்பாணத்தில் பேட்டியளித்திருந்தனர்.

கொழும்பு திரும்பியபின் அவர்கள் இலண்டன் பி.பி.சி வானொலியின் சிங்கள சேவைக்கும் நீண்ட பேட்டியொன்றை வழங்கியிருந்தனர்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தோல்வி என்றே அவர்கள் விபரித்தனர்.


யாழ் வைத்திய சாலையின் பிரேத அறைப்பக்கம் செல்ல முடியாமல் உள்ளது. துர்நாற்றம் வீசுகிறது. பிரேத அறைக்கு மின்சார வசதியோ, குளிரூட்டும் வசதியோ இல்லை என்பதால் அவ்வாறு துர்நாற்றம் 'வீசுகிறது, என்றும் 'ராவய' பத்திரிகையாளர்கள் தமது பேட்டியில் தெரிவித்துள்ளனர்.

## "தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபட வேண்டும்!" சொல்லுகிறார் அமைச்சர் தொண்டா!!

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கும் முடிவை சிங்கள மக்கள் எதிர்க்கிறார்கள் என்று சொல்வது பொய்யாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க சிங்களத் தலைவர்கள் விரும்பவில்லை.

இனப்பிரச்சனைத் தீர்வைப் பொறுத்தவரை சகல சிங்கள அரசாங் கங்களும் ஒரே விதமாகவே உள்ளன.



வேறுபட்ட தமிழ் அமைப்புக்களின் உண்மையான ஒற்றுமையில்தான் இதற்கான பரிகாரம் தங்கியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் இலண்டனில் இருந்து வெளிவரும் தமிழ் நேசன் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## 'பீதியை ஏற்படுத்த புலிகள் திட்டம்' நம்ப வேண்டாம் என்று படையினர் அறிவுறுத்தல்!!

புலிகள் அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் பீதியை ஏற்படுத்தும் வகையில் பிரச்சாரங்களை மேற்கொள்வதாக பாதுகாப்புப்படைத் தலைமை கூறியுள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள பிரசுரம் ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது:

சமீபகாலத்தில் வன்னியிலும், கிழக் கிலும், புலிகள் தமது பெருந்தொகையான உறுப்பினர்களை இழந்திருக்கிறார்கள்.

இது தெரிந்தால் வடக்கில் உள்ள இளைஞர்கள் தம்மோடு இணைந்து கொள்ளமாட்டார்கள் என்பதனைப் புலிகள் அறிவார்கள்.

எனவே, யாழ் குடாநாட்டில் பாரிய தாக்குதல் ஒன்று நடைபெறப்போகிறது என்னும் பீதியினை ஏற்படுத்துகின்றனர். இதற்காக இளைஞர்கள் தயாராக வேண்டும் என்று கூறுகின்றனர்.

இவ்வழியில் வடக்கில் உள்ள இளைஞர்களை கவர முடியும் என்று புலிகள் நம்புகின்றனர்.

புலிகளின் தலைவர்களது ஏமாற்று களுக்குப் பலியாகிவிடாதீர்கள்.

அவர்களுக்கு வேண்டியதெல்லாம் தமது நிலையினைப் பலப்படுத்தலாகும்.

தமது சொந்த ஆதாயங்களுக்காக எத்தனை உயிர்களை வேண்டுமானாலும் பலியிட அவர்கள் தயாராக உள்ளனர்.

அவர்களது ஆசைகளுக்காக உங்களை பலிக்கடாக்கள் ஆக்காதீர்கள்.

இவ்வாறு அந்தப் பிரசுரத்தில் படையினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினர் புதிய உறுப்பினர்களை திரட்டி வருவதை யடுத்தே படையினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

'வடக்கில் உள்ள வாலிபர்களுக்கு ஒரு வேண்டுகோள்' என்ற தலைப்போடு அந்தப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

## அகதிகளாகி மூன்று ஆண்டுகள் நிறைவு! அகதி வாழ்வுக்கு இல்லையா முடிவு!

(மன்னார் நிருபர்)

வட பகுதியிலிருந்து முஸ்லிம்கள் அகதிகளாக வெளியேற்றப்பட்டு இம்மாதம் 23ம் திகதியுடன் 3 ஆண்டுகள் நிறைவடைந் துள்ளது.

சென்ற 1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ம் திகதி முதல் 30ம் திகதி வரை வட பகுதியில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்த ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த 15,000 குடும்பங்களுக்கும் மேற்பட்டவர்களாவர்.

தற்போது வவுனியா, மாவட்டத்தில் சில பகுதிகளிலும், மன்னார் தீவின் சில பகுதிகளிலும் முஸ்லிம் அகதிகள் மீளக் குடியேறியுள்ளனர்.

சென்ற ஆண்டு ஒக்டோபர் 23ம் திகதியினை கருப்பு வெள்ளிக்கிழமையாக பிரகடனம் செய்யப்பட்டு நாடளாவிய ரீதியில் துக்கம் அனுஷ்டித்ததும், மருதானை ஜும்ஆப் பள்ளியில் ஆர்ப்பாட்டத்தின் போது ஒருவர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## வாந்திபேதிக்கு ஆறுபேர் பலி

யாழ் மாவட்டத்தில் வாந்திபேதியினால் இதுவரை 368பேர் பாதிப் படைந்துள்ளனர்.

பாதிப்புக்குள்ளான நோயாளிகளில் பெரும்பாலானவர்கள் பெண்கள்.

அரியாலை, குருநகர், நாவாந்துறை பகுதிகளில் வாந்திபேதியின் பாதிப்பு அதிகமாக இருக்கிறது.

இதுவரை 6 நோயாளிகள் மரணமாகியுள்ளனர்.

## திருமலையிலும் சிறப்பான கொண்டாட்டம்!

(திருகோணமலை நிருபர்)

நவராத்திரி விழா திருகோணமலையில் பல்வேறு நிறுவனங்கள், ஆலயங்கள் பாடசாலைகள் என்பனவற்றில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கும்பத்துமால் நடுமாரியம்மன் ஆலயத்தில் வழமை போல இம்முறையும் சிறப்பாக நவராத்திரி விழா அனுஷ்டிக்கப்பட்டது.

ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் நீண்ட நாட்களின் பின் இம்முறை ஒன்பது நாள் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிறப்புப் பேச்சாளர்கள் அழைக்கப்பட்டு சிறப்புரைகள் ஆற்றப்பட்டதுடன், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

ஏனைய பாடசாலைகளிலும் காரியாலயங்களிலும் கலை நிகழ்ச்சிகளோடு வாணி விழா இடம் பெற்றது.

## மஸ்கெலியாவில் மாபெரும் கும்பாபிஷேகம்

மஸ்கெலியா ஸ்ரீஷண்முகநாத ஸ்வாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிவஸ்ரீ டி.எஸ்.சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் அவர்களும், சிவஸ்ரீ.எஸ். முத்துக் குமாரசாமிக் குருக்கள் (கொழும்பு) சிவஸ்ரீ வை.சிவசுப்பிரமணியக் குருக்கள் (இணுவில்) ஸ்ரீதரக்குருக்கள், (நோவூட்) சிவஸ்ரீ இ. பிரேமகாந்தக் குருக்கள் இவர்களுடன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. சி.சிவசங்கர குருக்கள் அவர்களும் சேர்ந்து இக்கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்தி வைத்தனர் என்று ஆலய அறங்காவலர்கள் தெரிவித்தனர்.

## கருணாநிதியைக் கொல்ல புலிகள் சதியா? மறுத்துச்சொல்லி ம.பொ.சி. அறிக்கை!

(தமிழ் நாட்டிலிருந்து ஏழுமலை)

"தி.மு.க தலைவர் கருணாநிதியைக் கொலை செய்ய புலிகள் சதி செய்கிறார்கள் என்பதை நான் நம்பமாட்டேன்" இவ்வாறு முதுபெரும் தமிழறிஞரும், தமிழரசுக்கழகத் தலைவருமான சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் கூறியுள்ளார்.


தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னை யில் அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை யில் பின்வருமாறு கூறியுள்ளார்.

முதலமைச்சர் ஜெயலலிதா தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழ்கிறது என்று கூறிவருகிறார்.

இதுதான் உண்மை நிலை என்றால் நானும் மகிழ்ச்சி அடைவேன். தன்னைத் தானே திருப்திப்படுத்தவே ஜெயலலிதா அப்படிக் கூறிவருகிறார்.

தமிழகம் அமைதிப் பூங்கா என்பது பழைய கதை. தமிழகம் புலிகள் வாழும் காடாகிவிட்டது.

கலைஞர் ஆட்சியில்தான் புலிகள் இங்கு சர்வசாதாரணமாக வந்து செல்ல வழி ஏற்பட்டது.



ம.பொ.சி.

புலிகளுக்கு பரிந்து பேசிய கலைஞரை அந்த அமைப்பினரே கொலை செய்வார்கள் என்பதை நான் நம்பவில்லை.

தனது ஆட்சி கலைக்கப்படும் அளவுக்கு புலிகளுக்கு ஆதரவாக இருந்தவர் கலைஞர் கருணாநிதி. அப்படிப்பட்டவரை புலிகள் கொலை செய்வார்கள் என்ற செய்தியை நான் நம்பவில்லை. புலிகள் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, பத்மநாபா ஆகியோரை படுகொலை செய்துள்ளனர்.

இப்படிக் கொலை வெறிச் செயல்கள் புரிந்தவர்கள் மீது இந்தியர்கள் யாரும் அனுதாபம் காட்ட மாட்டார்கள். அப்படி அனுதாபம் காட்டுவோர் தேசத்துரோகிகள்.

ராஜீவ் காந்தி கொலையை வைத்து இலங்கைத் தமிழரை இந்தியா வெறுப்பது நியாயமல்ல. இலங்கைத் தமிழ் மக்கள் இன்று "இருதலைக்கொல்லி எறும்பாக" தவிக்கின்றனர். அவர்களுக்காக மத்திய அரசு ஐ.நா சபையில் குரல் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு ம.பொ.சிவஞானம் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


## விளம்பரப் பகுதி

உங்கள் இல்லத்தின் தீபமான
"மெய்கண்டான்" '94
கலன்டர்-டயறிக்ள் இப்பொழுது தயார்!




நவீன "லெமினேற்" கவசத்தால் அணி செய்து பளிங்கு போல் பளிச்சிடும் அனைத்து மத / பல வித கண்கவர் வண்ணப் படங்களுடன் ...! ஒன்றின் விலை ரூ. 73/-
மெய்கண்டான் திருக்குறட் கலன்டர்

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு / ஏற்றுமதி வியாபாரிகளுக்கு விசேட கழிவு
தொடர்பு கொள்க: THE MEIHANDAN PRESS LIMITED,
161, SEA STREET, COLOMBO 11, SRI LANKA ☎ : 329345



### புதிய ஓடியோ கஸட்டுகளுக்கு

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புது திரைப்படப் பாடல் ஓடியோ கஸட்டுகளை நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும், பழைய-புதிய பாடல்களைத் தரமாக ஒலிப்பதிவு செய்யவும் இன்றே நாடுங்கள்.

ஜனனி றெக்கோடிங் சென்டர்
இல.221/11, ஆட்டுப்பட்டித்தெரு
முதலாவது மாடி (ஆதமலி பில்டிங்)
(ஐந்து லாம்புச் சந்தி)
கொழும்பு–13.
போன் 432035


## மாகாண சபை கவனித்தால் என்ன? பாலத்தின் நுழைவாயிலில் தமிழின் கோலம்!

(கண்டி நிருபர்)

"மஹாவெலி ஆரு" "மகாவலிஆறு" இவ்விரண்டிலும் எது சரி? இப்படிக் கேட்கிறார்கள் தமிழ் பேசும் மக்களும், பாடசாலைச் சிறுவர்களும்.

பள்ளேகல மத்திய மாகாண சபைக்குச் செல்லும் மகாவலி பாலத்தின் நுழைவாயிலுக்கு முன்பாக பொருத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகையில் "மஹாவலி ஆரு" என தவறாக பெயர் எழுதப்பட்டிருப்பதால் இந்தத் தமிழ் கொலை குறித்து தமிழ் பேசும் மக்கள் வெறுப்பும், வேதனையும் கொண்டுள்ளனர்.

இந்த நுழைவாயிலின் ஊடாகவே மோட்டார் வாகனங்களில் தமிழ் பேசும் இரு அமைச்சர்களும் 14 தமிழ் பேசும் உறுப்பினர்களும் மத்திய மாகாண சபைக்கூட்டங்களுக்கு அடிக்கடி செல்கின்றனர். - பளிச்சென்று கண்களுக்கு எட்டக்கூடிய நிலையில் இந்தப் பெயர்ப் பலகையில் காணப்படும் தவறை இவர்களுக்கு சொல்லித் திருத்தி எழுதிவைக்க இயலாதா என்று அதனைத் தாண்டிச் செல்லும் தமிழரும் முஸ்லிம்களும் அடிக்கடி அங்கலாய்க்கின்றனர். மாகாண சபைதான் இந்தப் பிழையைத் திருத்த வேண்டுமென அவர்கள் மேலும் வலியுறுத்திக் கூறுகிறார்கள்.

## மேடை ஒன்று! துருவங்கள் இரண்டு

(நிந்தவூர் நிருபர்)



கிழக்கிலங்கையின் அரசியல் வானில் இரு துருவங்களாகத் திகழும் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜனாப். ஏ.ஆர். மன்சூரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃபும் ஒரே மேடையில் புன்முறுவல் பூக்க வீற்றிருக்கும் காட்சியையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடக்கு, கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின் சாகித்திய விழாவில் அமைச்சர் மன்சூர் பிரதம அதிதியாகவும், அல்-ஹாஜ் அஷ்ரஃப் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்ட போதே ஒரே மேடையில் இருவரையும் காணும் சந்தர்ப்பம் கல்முனைப் பிரதேச மக்களுக்குக் கிடைத்தது. எமது நிருபரும் இந்தக் காட்சியைத் தமது கமராவுக்குள் புகுத்திக் கொண்டார்.

இவர்கள் இருவருக்கும் மத்தியில் டாக்டர் திரு.எம். முருகேசபிள்ளை காணப்படுகின்றார்.

அரசியலில் இரு துருவங்களாகத் திகழும் இவர்கள் கிழக்கிலங்கையின்-குறிப்பாக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்தியில் ஒருங்கிணைந்து செயல்பட முன்வரமாட்டார்களா? எனப் பலரும் அங்கலாய்த்ததையும் அறியமுடிந்தது. எளிதில் நடக்கக் கூடிய காரியமா இது?

## புகார் பெட்டி

### கல்முனையில் மின்சாரத் தடை

கல்முனையில் கடந்த சில வாரங்களாக முன் அறிவித்தல் எதுவுமின்றி அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுகிறது.

இது பற்றி பத்திரிகையிலோ, வானொலியிலோ அல்லது இப்பகுதியில் ஒலிபெருக்கி மூலமோ எதுவும் அறிவிக்கப்படுவதில்லை.

இதனால் மின் பாவனையாளர்களும், தொழிலகங்களும் பலவித இன்னல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

மின்சாரம் தடைபட்டு திடீரென அவை மீண்டும் வழங்கப்படுவதால் பாவனையில் உள்ள குளிர்சாதனப் பெட்டி, தொலைக் காட்சிப்பெட்டி, மின் விசிறி போன்றவை மின்சாரத் திடீர் தாக்கத்தினால் செயல் இழந்து போகின்றன.

இப் பகுதியில் போதிய மின்மாற்றிகள் இருந்தும் ஏன் இடையிடையே மின்சாரத் துண்டிப்பு? சம்பந்தப்பட்டவர்களை சாடுகின்றார்கள் பொதுமக்கள்.

எம்.சி.கலீல்
கல்முனை–05.

### செய்தி கேட்க முடியவில்லை!

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் ஒவ்வொரு நாளும் காலையில் வானொலியில் 6 மணிக்கு ஒலிபரப்பாகும் செய்தியறிக்கையைக் கேட்க முடிவதில்லை. FM,MW,SW இம்மூன்று அலைவரிசைகளுமே காலை 7 மணிக்குப் பின்புதான் வேலை செய்கின்றன. அதுவும் SW அலைவரிசை மாத்திரமே பிடிபடுகின்றது. இவ்வாறு செய்தியறிக்கையைக் கேட்காது விடுவதனால் அரசியல், பொருளியல் கற்கும் மாணவர்கள் தமது பாடத்துடன் சம்பந்தப்பட்ட பல பயனுள்ள தகவல்களைப் பெறமுடியாதுள்ளது.

அதே வேளை காலை 6 மணிக்கு வெரித்தாஸ், இந்தியா ஆகிய ஒலிபரப்புக்கள் தெளிவாக உள்ளன. எனவே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பொறியியல் பிரிவினர் இதற்குக் கவனம் செலுத்த வேண்டும்.

மா. யோகராஜன்–அக்கரைப்பற்று–08.

### சுயாதீன தொலைக்காட்சிக்கு- ஏன் இந்த அசிரத்தை?

ஐ.ரி.என். ஒரு அரசாங்க ஒளிபரப்பு நிலையம் தானே? இதன் நடைமுறைகள் ஏன் இவ்வாறு கீழானதாக இருக்கின்றன.

மிகக் குறுகிய நேரமே ஒளிபரப்பப்படும் தமிழ் நிகழ்ச்சிகள் ஏன் ஞாயிற்றுக் கிழமை தோறும் இவ்வாறு நேரம் மாறி ரூபவாஹினி தமிழ் நிகழ்ச்சிகளை குறுக்கீடு செய்யும் நோக்கோடு ஒளிபரப்பப்படுகின்றது. தமிழ் மக்கள் மீது இத்தனை வெறுப்புணர்ச்சியா? அல்லது நிர்வாகச் சீர்கேடா? அல்லது நேரந்தவறாமை பற்றி அறியாததாலா? உள்ளூர் மக்கள் மட்டுமின்றி உள்ளூரில் இருக்கும் வெளிநாட்டவர்களும் உல்லாசப் பிரயாணிகளும் ஐ.ரி.என்.னின் நேர ஒழுங்கைக்கண்டு மூக்கில் விரலை வைக்கிறார்கள்.

முத்துச்சரம் ஞாயிறு ஒரு மணிக்கு என்று விளம்பரப்படுத்தப்படுகின்றது. ஆனால் ஒளிபரப்பப்படுவதோ 1.30மணிக்கு. அதே நேரம் –1.30 மணிக்கு போடும் விளம்பரம் 1.30க்கு ரசிகர் அரங்கம் என்று போட்டுவிட்டு அந்த நேரம் தான் 1 மணிக்கு ஒளிபரப்பப்பட வேண்டிய முத்துச்சரத்தைப் போடுகிறார்கள். இது முடிய 2 மணியாகி விடுகின்றது.

இதே நேரம் ரூபவாஹினியில் வேறு தமிழ் நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதால் 1.30க்கு ஆரம்பமாகவேண்டிய ரசிகர் அரங்கம் விழலுக்கிறைத்த நீராகின்றது. இதை நிர்வாகிகளும் தயாரிப்பாளர்களும் அறிவார்களா?

'தமிழ்மக்கள் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை நாங்கள் போடும் நேரம்தான் போடுவோம்' என்று நிர்வாகம் அடம் பிடித்தால் பரவாயில்லை. நேரத்தை 1.30க்கு முத்துச்சரம் என்றும் 2.00 மணிக்கு ரசிகர் அரங்கம் என்றும் மாற்றிப் போட்டு ஒரு இலங்கை ஸ்தாபனத்தின் நற்பெயரைக் காக்கும்படி வேண்டுகின்றோம்.

விளம்பரதாரர்கள் எதற்காக இந்த நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப ஏற்பாடு செய்கிறார்கள் என்று நிர்வாகம் சிந்திக்காது போனாலும் விளம்பரதாரர்களாவது தங்கள் நலன் கருதி கவனத்தில் எடுப்பார்களா?

வே. சண்முகநாதன்.
கொழும்பு–11.


### மலையாள மாந்திரீகம்



உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட்டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex, NUWARA ELIYA.**
**Dial: 052-2508 & 3093**
**Celltel. 072-26088, 078-61933**

**COLOMBO BRANCH:**
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. FAX: 0094-523093

*ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம்.*


### பரீட்சை திணைக்களம் கொஞ்சம் கவனிக்க வேண்டும்

இலங்கையில் பரீட்சைத் திணைக்களம் ஆற்றிவரும் பணிகள் மிகவும் பெறுமதிவாய்ந்ததாகும். பல பரீட்சைகளை திறம்பட நடாத்தி வருவது, இதற்கோர் சான்றாகும். ஆயினும், பரீட்சை முடிவுகளை கூடிய விரைவில் வெளியிடுவதன் மூலம், ஊழல்களை இயன்றவரை தடுக்க முடியும். அத்தோடு, பரீட்சாத்திகளின் விரக்தி நிலையையும் போக்க முடியும் என்பதை வினயமாக தெரிவித்துக் கொள்கிறோம்.

1993-05-29ந் திகதி காரியாலய காரிய சேவகர் (கே.கே.எஸ்) பதவிக்கு பரீட்சை நடைபெற்று 4 1/2 மாதங்கள் கழிந்துவிட்டன. இதுவரை பரீட்சை முடிவுகள் வெளியிடப்படவில்லை. குறித்த பதவிக்கு விண்ணப்பித்த பரீட்சாத்திகள் பெறுபேற்றை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றனர். எனவே, பெறுபேற்றைக் கூடிய விரைவில் வெளியிட ஆவன செய்ய வேண்டும்.

அத்துடன், வெளிக்களப் போதனாசிரியர் பதவிக்கு 1993-04-23ந் திகதி வெளியான இலங்கை வர்த்தமான பத்திரிகையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. எனினும், 5 மாதங்கள் முடிவடைந்தும் கூட இதுவரை போட்டிப் பரீட்சையோ, நேர்முகப் பரீட் சையோ நடைபெறவில்லை. இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சாத்திகள் பலரும் மிகவும் ஏமாற்றமடைந்த நிலையில் காணப்படுகின்றனர். எனவே, இந்த பரீட்சையை நடத்த பரீட்சைத் திணைக்களம் தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

-சம்மாந்துறை ஏ.சஹாப்டீன்-

### பாதை இருந்தும் பயணிகள் இருந்தும்.....

கேகாலை மாவட்டத்தில் புலத்கொபிட்டிய என்னும் நகரில் இருந்து ஏழு கட்டை தொலைவிலிருக்கும் தேதுகலை எனும் இடத்திற்கு பஸ் போக்குவரத்து சீர்கேடான நிலையில் உள்ளது. இதனால் அங்கு வாழும் மக்கள் பெரும் அவல நிலைக்கு உள்ளாகி உள்ளனர். காலை தொடக்கம் பிற்பகல் வரை ஒரேயொரு பஸ் சேவையில் ஈடுபடும். அதுவும் சுமார் ஒரு மணியளவில் நின்றுவிடும். பின்னேரம் ஐந்து மணிக்கு புலத்கொபிட்டியிலிருந்து தேதுகலைக்கு ஒரு பஸ் சேவையில் ஈடுபடும். அதுவும் சில நேரங்களில் தான் சேவையில் ஈடுபடும். இதனால் அங்கு பஸ் சேவை மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளது. எனவே இப்பகுதி பிரதேச சபை இதை கவனத்திற்கொண்டு இந்நகருக்கு (தேதுகலை)சீரான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

ஜே.பீலிக்ஸ் சிம்சன்–தேதுகல.

### சின்னப் பாலமுனையில் ஒரு சின்னக் குறை!

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்திருக்கும் சின்னப்பாலமுனை கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்படாதது ஒரு குறையாகவுள்ளது.

சென்ற ஆண்டு இப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சுமார் 2 இலட்சம் ரூபாயினை ஒதுக்கீடு செய்தது.

எனினும் நிதிப் பற்றாக்குறையினால் மின் வழங்கும் வேலைகள் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இங்குள்ள அரபுக்கலாசாலை உட்பட ஊரின் பல பகுதிகள் மின்சாரம் இல்லாததால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

உடனடியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இங்குள்ள மக்கள் தினமுரசு மூலமாகக் கேட்டுக் கொள்கின்றனர்.

டி.எம். நப்ஹான்.


SARIKA TEX
Ladies Tailoring
24 மணிநேரத்தில்
சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்
உங்கள் உடலமைப்புக்கேற்றபடி நவீன முறையில் தைத்துக்கொள்ள
*Hewa Shopping Complex*
*No. 69/5-1/1, 1st Floor,*
*Galle Road,*
*Dehiwela South.*

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

இப்போதெல்லாம் அரச தரப்பில் இருந்து முன்னுக்குப் பின் முரணான குரல்களை கேட்கக் கூடியதாக இருக்கிறது.

இனப்பிரச்சனையே இல்லை என்று ஜனாதிபதி முதலில் சொல்லியிருந்தார்.

பின்னர் அவரே வடக்கு கிழக்குப் பிரச்சனைக்கு அரசியல்தீர்வு காணவேண்டும் என்றும் கூறியிருந்தார்.

அமைச்சரே அரசியல் தீர்வு பற்றிப் பேசியபின், இங்கே நம் நாட்டு சபையிலே சமீபத்தில் நிர்மாணத்துறை இராஜாங்க அமைச்சர்-விடிய விடிய இராமர் கதை கேட்டுவிட்டு, ராமன் யார்- சீதை யார் முறை என்ன? தலை-என்னவென்று கேட்பது போலப் பேசி பாய்ச்சலாமா? பாய்ச்சியிருக்கிறார்.

அமைச்சரது பேச்சைப் பார்க்கும் போது சிறில் மத்தியூக்களின் பேச்சுக்களே மீண்டும் நினைவுக்கு வருகின்றன.

மறுபடியும் மத்தியூக்கள் அவதாரம் எடுத்துக்கொண்டிருக்கிறார்களா? என்ற கேள்வியும் எழுகிறது.

யாழ்ப்பாணத்தில் தமிழர் இராச்சியம் தாயகக் கோட்பாட்டுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப் பட்டபோது சிங்களத் தலைவர்களே நாடு பிரியும் அபாயத்தை பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். நேரம் உள்ளபோது அமைச்சர் பழைய குறிப்பேடுக்ளை புரட்டிப் பார்க்கலாம். சரித்திர அறிவுக்கு உபயோகமாக இருக்கும்.

இனப்பிரச்சனையின் தோற்றம், வளர்ச்சி பற்றியெல்லாம் பொறுப்பான இராஜாங்க என்று சொல்ல நினைப்பவர்களும் லிங்கங்களின் தலைகளை உருட்டுகிறார்கள். அதுதான் சுவாரசியமான விசயம்.

எப்படியோ தீர்வுகளை விட சிக்கல்களே உருவாகிக்கொண்டிருக்கின்றன.

■

எதிர்வரும் புத்தாண்டில் படையினர் ஒரு பெரும் தாக்குதலை நடத்தப் போவதாகச் சொல்லி இயக்கத்திற்கு புதிய உறுப்பினர்களை சேர்க்கும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

போர்க்காலச் சூழலை சித்தரிக்கும்



# புத்தாண்டில் போர் மூளுமா? படைகள் யாழ் நகருக்குள் செல்லுமா?



ஜனாதிபதி தன் கருத்தை மாற்றிக் கொண்டபோதும் ஆளும்கட்சியில் உள்ள சில மதிப்புக்குரியவர்கள் இன்னும் கொஞ்சம் மேலே போய் எள் என்றால் எண்ணெய் என்று நிற்கிறார்கள்.

இங்கு இனங்களே கிடையாது என்று சொன்னாலும் சொல்வார்கள் என்பதுபோல அவர்களின் பேச்சுக்கள் இருக்கின்றன.

ஜனாதிபதியை திருப்தி செய்ய நினைக் கிறார்களோ என்று சந்தேகமும் வருகிறது.

என்றாலும் வெளியுறவுத்துறை அமைச்சர் எ.சி.எஸ். ஹமீட் அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையில் பேசும்போது அரசியல் தீர்வின் அவசியத்தை கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அரசியல் தீர்வு காண அரசு தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

ஐ.நா. சபையில் நின்று வெளியுறவுத்துறை யிருக்கிறார்.

வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு காரணம் என்னவென்றும் அவர் கண்டுபிடித்துக் கூறியிருக்கிறார்.

தமிழர்கள் தாயகக் கோட்பாட்டை வலியுறுத்துகிறார்களாம். அதுதான் பிரச்சனைக்குக் காரணமாம்.

சர்வகட்சி மாநாடும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் நீண்டபல மாதங்களாக கூடிக் கலந்து ஆராய்ந்த பிரச்சனைக்குச் சுலபமான காரணம் கண்டுபிடித்துவிட்டார்.

நிர்மாணத்துறை இராஜாங்க அமைச்சர் எல்லாவற்றையும் உடைத்துப் போட்டுவிடுவார் போலவே தெரிகிறது.

பொறுப்பான பதவியில் இருப்பவர். மரியாதைக்குரியவர். அதுவும் பொறுப்பான சபையில் நின்று வெந்த புண்களில் வேலைப்



இருந்தது. சிங்கள மன்னர்கள் அதனை வென்றனர். என்றெல்லாம் சரித்திரம் சொல்லியிருக்கிறார்.

இன்றைய சரித்திரமே தரித்திரமாக மாறிக்கொண்டிருக்கிறது. அமைச்சர் பழைய சரித்திரம் பேசியிருக்கிறார்.

இனங்களை நெருங்கிவரச் செய்து இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணவேண்டிய காலகட்டத்தில் இனப்பெருமை பேசப் பட்டுள்ளது. இன்னொரு இனத்தின்மீது "உன் முன்னோர்களை வென்றவர்கள் எம் முன்னோர்களாக்கும்" என்ற தொனியில் கூறப்படுகிறது.

கண்டியை ஆண்ட கடைசி மன்னனும் தமிழர்தான் என்பதை அமைச்சர் வசதியாக மறந்துவிட்டார்.

இலங்கை முழுவதும் சோழர்களின் ஆட்சியில் இருந்தது என்ற சரித்திரமும் அவருக்குத் தெரியாமல் போய்விட்டது. பழைய சரித்திரம் பேச ஆரம்பித்தால் பேசிக்கொண்டே இருக்கலாம்.

பரணில் கிடக்கும் பழைய சான்றுகளை எல்லாம் கொண்டுவந்து தூசு தட்டி வாத, விவாதம் நடத்திக்கொண்டும் இருக்கலாம்.

ஆனால் இன்றைய பிரச்சனையைத் தீர்ப்பதற்கு சிங்கள மன்னர்களோ, தமிழ் மன்னர்களோ மீண்டும் எழுந்து வரப் போவதில்லை.

அந்தக் காலப் பெருமைகளை மட்டுமே பேசிக்கொண்டிருப்பதால் தற்காலப் பிரச்சனைகளுக்கு தீர்வுகள் கிடைத்துவிடப் போவதும் இல்லை.

எந்த இனம் பெருமைக்குரியது என்று வரிந்துகட்டிக்கொண்டு வாதம் செய்வது இன ஒற்றுமைக்கே சேதம் விளைவிக்கும்.

துட்டகைமுனுக்கள் பற்றி முன்னர் பேசப்பட்டது.

ஒரு பக்கம் கடல். மறுபக்கம் தமிழர்கள் என்று கைமுனு சொன்னதாகக் கூறிக் கொண்டார்கள்.

இவ்வாறான பேச்சுக்கள் தமிழ் பேசும் மக்களிடம் நம்பிக்கையீனங்களையே உருவாக்கின. தமது பாதுகாப்பு குறித்த சந்தேகங்களையும் தோற்றுவித்தன.

இவையும் கசப்பான வரலாறுகள்தான். பாடம் கற்றுக்கொண்டு கடந்தகால தவறுகளை மீண்டும் செய்யாமல் இருப்பதற்கான வரலாறுகள்.

என்ன செய்ய வேண்டுமோ அதனைச் செய்வதில்லை. எதையெல்லாம் செய்யக் கூடாதோ அதைச் செய்வது என்பதுதான் நம் நாட்டின் இன்றைய சோகங்களுக்கு காரணம்......

கற்றுக் கொள்ள வேண்டிய கசப்பான வரலாற்றை அமைச்சர் கவனிக்கத் தவறிவிட்டார்.

தேவையற்ற விசயத்தை வெளியே கொட்டி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியிருக்கிறார்.

இங்கு இனப்பிரச்சனை தோன்றியதற்கும், அமைச்சருக்கே ஆரம்பத்தில் இருந்து சொல்லித்தர வேண்டியிருக்கிறது.

இந்த இலட்சணத்தில் இனப் பிரச்சனைக்கு தீர்வு காண்பது என்பது சுலபமான வேலையா என்ன? கஷ்டம்தான். சந்தேகம்தான்.

தமிழர்கள் சிலர் உயர் பதவிகளில் இருப்பது யாரும் இரங்கிக் கொடுத்த வரம் அல்ல. அவர்களிடம் திறமை இருக்கிறது. அதனால் அந்தப் பதவிகளுக்கு உயர்ந்தார்கள். தமிழர்கள் என்பதற்காகவே சிலர் திறமை இருந்தும் பதவி உயராமலும் இருக்கிறார்கள்.

ஆங்கிலேயர் ஆட்சியில் சிங்களவர்களுக்கு, தமிழர்களுக்கு, முஸ்லிம்களுக்கு பதவிகள் கிடைத்தன. பின் எதற்காக ஆங்கிலேயரை வெளியே போகச் சொன்னோம்?

ஆக, உயர் பதவிகளில் சிலர் இருப்பதோ, தமது கடின உழைப்பால் தமிழ் பேசுவோர் வர்த்தகத்துறைகளில் முன்னேறியிருப்பதோ இனப்பிரச்சனை இங்கே இல்லை என்பதற்கு சான்றுகள் ஆகாது.



இராணுவத் தளபதி

ஏதோ திரு. பாஸ்கரலிங்கம் குற்றம் செய்தது போலவும், தமிழர் என்பதால் அவரை விசாரிக்கவில்லை என்பது போலவும் அமைச்சரின் பேச்சில் அர்த்தம் வருகிறது.

அரசாங்கத்தில் உள்ள சிறந்த திறமைமிக்க அதிகாரி திரு. பாஸ்கரலிங்கம். அவரது திறமையால் நாடு பலன் அடைந்தும் உள்ளது.

திறமை உள்ள ஒருவர் மேலே உயர யாரது கருணையும் தேவையில்லை.

என்றாலும் ஒரு விசயத்தில் அரசாங்கம் திரு. பாஸ்கரலிங்கத்திற்கு நன்றி சொல்ல வேண்டும்.

உதாரணம் காட்டிச் சொல்லக்கூடிய உயர்ந்த பதவியில் அவர் இருப்பதால்தான் அடிக்கடி சுட்டிக்காட்ட முடிகிறது.

இனவாதிகளும் லிங்கங்களின் தலைகளை உருட்டுகிறார்கள். இனப்பிரச்சனை இல்லை

நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள், கருத்தரங்குகள் என்று யாழ்ப்பாணத்தில் ஒரு பரபரப்பும் தெரிகிறது.

வடக்கில் உள்ள முக்கிய நகர் ஒன்றைப் பிடிப்பதே படையினரின் நோக்கம் என்று புலிகள் கூறுகின்றனர்.

அது எந்த நகரம் என்று கூறப்பட வில்லை.

கிளாலிப் பகுதிக்கு சென்றுவிட்டு படையினர் திரும்பி வந்த வேகத்தைப் பார்க்கும் போது வடக்கே முக்கிய நகர் ஒன்றை கட்டுப்பாட்டில் வைத்திருக்க படையினரால் முடியுமா என்று யோசிக்க வைக்கிறது.

உடனடியாக அது சாத்தியமில்லை என்றே தெரிகிறது.

இராணுவத்துக்குப் புதியவர்கள் திரட்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

புதியவர்களுக்கு பயிற்சி கொடுத்து, ஆயுதவசதிகள் அளித்து இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்த குறிப்பிட்ட கால அவகாசம் தேவைப்படும்.

எனினும் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கான சாத்தியத்தை மறுப்பதற்கில்லை.

படைத்தளபதிகள் இப்போது தீவிரமான வர்களாக மாறத் தொடங்கிவிட்டனர்.

இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்ன உற்சாகமூட்டும் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு இராணுவத் தளங்களுக்கு அடிக்கடி சென்று ,படையினரை உற்சாக மூட்டி வருகிறார்.

அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்களும் குறைந்து போயுள்ள நிலையில் இராணுவ நடவடிக்கைக்குரிய சாதக நிலைகள் ஆராயப்படுகின்றன.

புலிகளும் முந்திக்கொள்ளவே பார்க்கிறார்கள்.

புத்தாண்டில் இராணுவ நடவடிக்கை என்ற செய்தியை முக்கியப்படுத்தி யாழ்ப்பாணத்தில் போர்க்கா சூழ்நிலைக்குரிய ஏற்பாடுகளை செய்யத் தொடங்கிவிட்டனர்.

இராணுவம் வரப்போகிறது. அதனால் போர்காலச் சூழல் அவசியமே என்ற கருத்தை புலிகள் ஏற்படுத்துகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இளைஞர்களது எண்ணிக்கை குறைந்துள்ளதால், மாணவர்கள் மற்றும் பெண்கள் மத்தியில் இருந்தே புதிய உறுப்பினர்களைப் புலிகள் திரட்ட வேண்டும்.

அதனால் பெற்றோர்கள் மத்தியில் ஏற்படும் கவலைகளை போர்கால சூழலின் பரபரப்பு மறைத்துவிடும் என்றே புலிகள் கருதுகின்றனர்.

படையினர் யாழ் நகருக்குள் பிரவே சித்தால் அழிவுகள் ஏற்படும் என்பதே புலிகளின் முக்கியமான பிரச்சாரமாகும்.

புத்தாண்டில் போர் என்பது புலிகளின் பிரச்சாரத் தந்திரம் என்றே படையினர் தரப்பில் கூறப்படுகிறது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை இரு தரப்பிலும் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தி இருப்பதால், இரு தரப்புமே தம்மை வலுப்படுத்திக் கொள்வதில் கவனம் கொண்டுள்ளன.

ஆட்பலத்தை அதிகரிப்பதன்மூலம் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை தக்க வைப்பது புலிகள் அமைப்பின் யுக்தியாக இருக்கிறது.

ஆக, மொத்தத்தில் போர் தொடர்வது நிச்சயம். பாரிய போர் எப்போது மூளும் என்பது வேண்டுமானால் நிச்சயமற்ற விசயமாக இருக்கலாம்.

சமாதானக் கதவுகளை அரசு மூடி விட்டது. பேச்சுக்கள் மூலம் பிரச்சனைகளை தீர்ப்பது என்பது வெறும் கனவே என்று புலிகள் அறிவித்தும் விட்டனர்.

மூன்றாண்டுகளில் நாடு பிரியும் என்றும் புலிகள் யாழ்ப்பாணத்தில் பரவலாகச் சொல்லி வருகின்றனர்.

வடக்கு-கிழக்கில் புலிகளை தோற் கடிப்பது நிச்சயம் என்று இராணுவத் தளபதியும் கூறியிருக்கிறார்.

இந்தப் பலப்பரீட்சையில் பாதிக்கப்படப் போவது பொதுமக்களே என்பதுதான் பரிதாபம்.

பாரிய மோதல் முடிந்த பின்னர் இரு தரப்புக்களும் தமது சாதனைகளைப் பற்றிப் பேசிக்கொள்ளுவார்கள்.

பாதிக்கப்பட்ட, பலியான பொதுமக்கள் ப்ற்றி யாரும் அக்கறைப்படப் போவதில்லை.

சோகம் அதுதான்.

## அதிரடி அய்யாத்துரை



போசாக்கு அவசியம் என்று எங்கள் தொலைக்காட்சி திருப்பித் திருப்பி சொல்லுது. அவசியம்தான். யார் இல்லை என்டது. யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிற பால்மா பழுதடைஞ்சதா அனுப்பப்படுற விசயத்தை கேள்விப்படேக்கைதான் உதைக்குது.

போசாக்குக் கொடுத்தா போருக்கு வருங்கள் என்று பழுதான பால்மா அனுப்புகினமோ தெரியேல்லை.

கொழும்பு தங்கு விடுதிகளில் ஒரு பரவலான கதை. அதிலை வாறவைக்கு எவ்வளவு கொடுத்தா இரண்டெழுத்து எண்டு மாட்டாமல் தப்பலாம் எண்டு ஒரு ரேட் பட்டியலே கதைகளில் அடிபடுகுது. இரண்டெழுத்தைச் சொல்லி நாலு காசு சம்பாதிக்கிறதாலே தானே எல்லாம் பிழைக்கிறது. உயர் மட்டங்கள் கவனித்தால் என்ன?

வாகன விபத்தொன்று கொழும்பில் நடந்தது. சாரதிகள் காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டினம். ஒருவர் பெரும்பான்மை இனச் சாரதி. மற்றவர் எங்கட மொழிப் பேர்வழி. அவரைக் கேட்டினமாம் 'கொட்டியாவோ' எண்டு. விபத்தான வெறுப்பில் இருந்தவர் ஓம் எண்டாராம். ஆயுதம் இருக்கோ? இது அடுத்த கேள்வி. அதுக்கும் 'ஓம்' கேட்டவைக்கு யோசனை. பிறகுதான் தெரிஞ்சதாம் அவர் ஒரு தமிழ் இயக்க உறுப்பினர் எண்டு. தமிழ் சத்தம் கேட்டால் 'கொட்டியாவோ' என்று நினைக்கிற விசயம்தானே எல்லாரையும் வெறுப்பேத்துறது. அந்தச் சாரதி இயக்கக்காரர் எண்டபடியா அப்படிப் பேசினார். வேறயாரும் சாதாரண ஆள் எண்டா பிரச்சனைதான். அது சரி கேட்டவுடன் இரண்டெழுத்துக்காரர் உண்மை சொல்லுவினம் எண்டு அப்பிடிக் கேட்கினமோ? அல்லது கிண்டலோ? எனக்கு விளங்கேல்லை.

வங்கிகள் என்றால் என்ன பாருங்கோ அர்த்தம்? வாடிக்கையாளர்களுக்கு சிரமம் இல்லாமல் சுலபமாயும், வேகமாயும் பரிமாற்றங்களை முடிச்சுக் கொடுக்கவேணுமல்லோ. எங்கட வங்கியள் வடக்கு-கிழக்கு வாடிக்கையாளர்கள் விசயத்திலை அதை மறந்து போனதா தெரியுது. யாழ்ப்பாணம் எண்டாலும் முன்னே பின்னே ஆகும் எண்டு சொல்லலாம். அரச கட்டுப்பாட்டில் உள்ள மட்டக்களப்பு, திருமலை, வவுனியா காசோலைகள் கொழும்பு வங்கிகளில் தேங்கிக் கிடக்குதெண்டு பலர் சொல்லக் கேள்வி. கொம்பியூட்டர் யுகத்தில் ஏனுங்கோ கால தாமதம்? வடக்கு-கிழக்கெண்டா கொம்பியூட்டரும் கோவிக்குதாமோ? கவனியுங்கோ.

யாழ்ப்பாணத்திற்கு போட்டு வந்தனாங்கள். பின்னி எடுத்துப் போட்டினம் இரண்டெழுத்துக்காரர். அட்டகாசமான சண்டை, எண்ட மாதிரி சிங்கள வார இதழ் ஒண்டு எழுதியிருக்குது. எங்கட ராஜதந்திரி யாரும் பேனை பிளந்து கட்டிப்போட்டுது எண்ட மாதிரி எழுதியிருக்கிறார். இரண்டெழுத்துக்காரர் அந்தப் பத்திரிகைக்காரரை அனுமதிச்சதே உப்பிடி ஒரு பிரச்சாரத்திற்குத்தானே. கொழும்பு தமிழ் பத்திரிகைகளை தங்கட தடைமுகாம் தாண்டவே இரண்டெழுத்துக்காரர் அனுமதி கொடுக்கிறேல்லை.

இராஜதந்திரியார் வேணுமெண்டா ஒருக்கா போட்டு வந்து பார்க்கட்டும். அப்ப தெரியும் அங்கை பேனைக்கு இருக்கிற மதிப்பு. அதுவும் தமிழ் பத்திரிகையாளர் எண்டா உரிமையோட பிடிச்சு உள்ளுக்கை போட்டுப் பூட்டுவினம். எங்கை போனாலும் தமிழன் எண்டால் இழப்பம் தான். இரண்டெழுத்துக்காரரிட்டையும் அதுதான் கதை. ராஜதந்திரி கோவிக்கக்கூடாது. கையைக்குடும். கருத்துக்கள் மட்டும் மோதட்டும்.

நீலக்கட்சிக்காரர் கூட நெளிவு சுழிவாய் பேசத் தொடங்கிப் போட்டினம். ச்சைக்குள் சிலர் மட்டும் மத்தியூ ஸ்ரைலில் பேச நினைக்கினம். யாழ்ப்பாண ஆட்களும் இலங்கையர் எண்டு நீலக்கட்சி பிரதிநிதி சொன்னதும், மேலும் அவர் சபையில் பேசிய விசயங்களும் வரவேற்கலாம். எண்டாலும் உந்த விசயத்தை பதவியில் இருந்த காலத்திலை அவையாவது நினைச்சுத் தொலைத்திருக்கலாம். பிரச்சனை இப்படி வாட்ட சாட்டமாய் பெருத்திருக்காது.

மழைக்காலம் எண்டபடியால் அடிக்கடி தும்மலும் வருகுது பாருங்கோ. தும்மல் எண்டவுடனைதான் வள்ளுவர் சொன்னது நினைவுக்கு வருகுது. வள்ளுவர் பொல்லாத ஆள். தும்மலை கொண்டு போய் எதோடு தொடுத்திருக்கிறார் பாருங்கோ.

"நினைப்பவர் போன்று நினையார் சொல்
நினைப்பது போன்று கெடும்" -தும்மல்

தும்மல் வரும் போல இருந்ததாம். பிறகு இனப்பிரச்சனை தீர்வு மாதிரி வராமலே இருந்திட்டுதாம். ஏனாம் தெரியுமோ? தன் காதலன் தன்னை நினைப்பவர் போல் இருந்து நினையாமல் இருந்து போட்டாராம். என்ன கற்பனை பார்த்தியளோ! ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## உலக ரவுண்டப்

# அச்சுறுத்தலுக்கு அடிபணியாத புதுமைப் பெண் பெனாஸிர்!

-பிரபஞ்சன்-

திருமதி பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தானின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருமதி பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி கடுமையான அரசியல் பிரயத்தனங்களின் பின்னர் தற்போது பாகிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. திருமதி பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தானின் பிரதம மந்திரியாக 1989ம் ஆண்டுக்குப் பின்னர் இரண்டாவது தடவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருமதி பெனாஸிர் பூட்டோ அரசியல் ரீதியாகவும், குடும்ப ரீதியாகவும் பாகிஸ்தானில் மிகவும் செல்வாக்கு மிக்க பின்னணியைக் கொண்டவராக விளக்குகின்றார்.

கல்வியிலும் இவர் ஏனைய பாகிஸ்தானிய பெண்களைவிட மேம்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றார்.

அமெரிக்காவின் பிரபல பல்கலைக் கழகமான ஹாவார்ட், இங்கிலாந்தின் புகழ்மிக்க பல்கலைக்கழகமான ஒக்ஸ்போர்ட் ஆகியவற்றில் பெனாஸிர் கல்விபயின்றிருந்தார்.

பாகிஸ்தானில் இஸ்லாமிய கோட்பாடுகள், பெண்களை மிகவும் கட்டுப்பாடான ஆசாரங்களுக்குட்படுத்தி வைத்திருந்தது. ஆனால் பெனாஸிர் அவரது தந்தையாரான திரு.சுல்பிகார் அலி பூட்டோவின் வழிகாட்டலின்படி ஒரு நல்ல பாரம்பரியங்களுடன் கூடிய இஸ்லாமியப் பெண்ணாக வளர்க்கப்பட்டிருந்த போதிலும் உயர்கல்வி விடயத்தில் பரந்த கண்ணோட்டத்துடன் மேற்கத்தேய பாணியிலேயே வழிநடத்தப்பட்டிருந்தார்.

இவ்வாறு, கல்வி மற்றும் உலக விவகாரங்கள் என்பவற்றில் அவர் ஒரு முன்மாதிரியான பாகிஸ்தானியப் பெண்ணாக விளங்கியிருந்த போதிலும், தமது வாழ்க்கையில் பெனாஸிர் எதிர்கொண்ட சவால்கள் உலகில் எந்தவொரு பெண்ணும் முகங்கொடுத்திராத கசப்பான அனுபவங்களைப் பெரிதும் கொண்டதாக விளங்கியிருந்தன.

பெனாஸிரின் தந்தையார் சுல்பிகார் அலி பூட்டோ பாகிஸ்தானில் ஒரு பிரபலம் மிக்க அரசியல்வாதியாக விளங்கியிருந்தார்.

அந்நாட்டின் பிரதம மந்திரியாகவும் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

பாகிஸ்தான் பிரிட்டிஷாரிடம் இருந்து சுதந்திரம் பெற்றதையடுத்து அதன் முதலாவது பிரதம மந்திரியாக முகமது அலி ஜின்னா விளங்கினார். ஆனால் அதன் பின்னர் பாகிஸ்தான் பெரும்பாலும் இராணுவ ஆட்சியாளர்களினாலேயே ஆளப்பட்டு வந்தது.

இராணுவத்தளபதிகளே ஆட்சியாளர்களாக மாறி நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றி வந்தனர். அத்துடன் அவர்களே பாகிஸ்தானின் சகல நிர்வாக விடயங்களையும் நிர்ணயிக்கும் உரிமையைக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஸ்தாபகரான அலி பூட்டோ, பாகிஸ்தானில் பொதுத்தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவான முதலாவது பிரதமராக விளங்கியிருந்தார்.

ஆயினும் 1977ம் ஆண்டில் பூட்டோவின் விசுவாசத்துக்குரிய இராணுவத்தளபதியான ஜெனரல் ஸியாவுல் ஹக்கினால் திரு.பூட்டோ ஆட்சி கவிழ்க்கப்பட்டார்.

இதனையடுத்து பூட்டோ மீது இராணுவ ஆட்சியாளரான ஜெனரல் ஹக் பல குற்றச்சாட்டுக்களை சுமத்தி அவரை சிறை வைத்தார். இறுதியாக கொலைக்குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் பூட்டோவை 1979ம் ஆண்டு ஜெனரல் ஹக் தூக்கிலிட்டார்.

இதன் பின்னரே பூட்டோ குடும்பத்துக்கு சோதனை காலம் ஆரம்பமாகியிருந்தது. தந்தையார் தூக்கிலிடப்பட்டதையடுத்து பெனாஸிர் பாகிஸ்தான் மக்கள் கட்சியைப் பலப்படுத்தும் பணியில் தம்மை ஈடுபடுத்தினார்.



பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் ஆதரவாளர்கள் மத்தியில் பெனாஸிர் பூட்டோ

ஆனால் ஜெனரல் ஹக்கின் இரும்புக்கரம் பெனாஸிரின் அரசியல் நடவடிக்கைகளை முழுமையாக நசுக்கி விட்டிருந்தது.

பெனாஸிரும், அவரது தாயாரான நஸரத் பூட்டோவும் பல தடவைகள் சிறைவைக்கப்பட்டனர். பெனாஸிர் மட்டும் சுமார் ஆறு தடவைகள் சிறைவைக்கப்பட்டிருந்தார். அவரது தாயார் எட்டு முறை தடுத்து வைக்கப்பட்டார்.

ஆயினும் பெனாஸிர் தமது உறுதிப்பாட்டை இழந்து விடவில்லை. இங்கிலாந்து சென்று அஞ்ஞாதவாசம் மேற்கொண்டதுடன், சர்வதேச ரீதியாகவும் அவர் ஜெனரல் ஹக்கிற்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டிருந்தார்.

பெனாஸிர் அவரது பிரியத்துக்குரிய சகோதரரான ஷா நவாஸையும் 1985ம் ஆண்டு இழந்தார். ஷா நவாஸ் மர்மமான முறையில் பிரான்ஸில் தமது இல்லத்தில் இறந்திருக்கக் காணப்பட்டார்.

தந்தையின் இழப்பினாலும், தமது குடும்பம் மீதான ஜெனரல் ஹக்கின் அடக்கு முறையினாலும் மிகவும் வேதனைக்குள்ளாகியிருந்த பெனாஸிர், சகோதரரான ஷா நவாஸின் இழப்பினால் மிகவும் துவண்டு போயிருந்தார்.

ஆனால் அவர் மனந்தளராது உறுதியுடனேயே பாகிஸ்தான் மக்கள் கட்சியின் நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு, தமது குடும்ப கௌரவத்தையும் பாதுகாத்து வந்தார்.

இருந்தபோதிலும் ஜெனரல் ஸியாவுல் ஹக்கின் கெடுபிடிகள் பெனாஸிரையும் அவரது தாயாரான நஸரத் பூட்டோவையும் நிழலாகவே தொடர்ந்திருக்கக் காணப்பட்டன.

ஒரு தடவை பெனாஸிரும் அவரது தாயாரும் ஓய்வாக கிரிக்கெட் பந்தயமொன்றைப் பார்வையிட பாகிஸ்தானின் கிரிக்கெட் விளையாட்டரங்கொன்றிற்குச் சென்றிருந்தனர்.

ஆனால் அங்கு ஜெனரல் ஹக்கின், பொலிசார் கூட்டத்தினர் மீது தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம் என்பவற்றை மேற்கொண்டு பெனாஸிர் மற்றும் அவரது தாயாரான நஸரத் பூட்டோவையும் தாக்கினர்.

இதனால் பூட்டோவின் தாயார் தலையில் இரத்தம் வழிந்தோடும் நிலையில் காயமடைந்தார்.

இவ்வாறு பல அவஸ்த்தைகளுக்கும், அவமானங்களுக்கும் முகங்கொடுத்த பெனாஸிர் பூட்டோவுக்கு 1988ம் ஆண்டிலேயே விடிவு ஏற்பட்டது. அந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பாகிஸ்தானின் சர்வாதிகாரியாக விளங்கிய ஜெனரல் ஸியாவுல் ஹக், அவர் பயணஞ் செய்த விமானம் குண்டு வெடித்துச் சிதறிய நிலையில் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து 1988ம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பெனாஸிர் பூட்டோ உலகில் வயதில் குறைந்த பிரதம மந்திரியாக - 35வது வயதில் தெரிவாகியிருந்தார்.

இளவயதில், அதுவும் ஒரு பெண்ணாக, தமது கொள்கையை எந்தவொரு அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் விட்டுக் கொடாதவராக பெனாஸிர் பூட்டோ விளங்கியிருந்தார்.

பெனாஸிர் 1988ம் ஆண்டு பிரதமராகத் தெரிவாகியிருந்த போதிலும் 1990ம் ஆண்டில் பாராளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றின் மீது பதவி கவிழ்க்கப்பட்டார்.

தொடர்ந்து பாகிஸ்தானின் பிரதமராக நவாஸ் ஷெரீப் தெரிவாகியிருந்தார்.

இன்று பாகிஸ்தானின் பலம் மிக்க அரசியல்வாதியாக இருந்த நவாஸ் ஷெரிப்பையும் தோற்கடித்து தமது 40வயதில் மீண்டும் பாகிஸ்தானின் பிரதம மந்திரியாக திருமதி பெனாஸிர் பூட்டோ தெரிவாகியுள்ளார்.

தந்தையாரை சிறைக்கைதியாகக் கண்டார். அத்துடன் அவர் தூக்கிலிடப்பட்டதையும் பெரும் மன உறுதியோடு பெனாஸிர் சகித்துக்கொண்டார்.

பின்னர் பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டார். சகோதரனைப் பறி கொடுத்தார். தொடர்ந்து தமது கணவரான அஸிவ் ஸர்தாரியையும் சிறைக் கைதியாகக் கண்டார். நவாஸ் ஷெரிப்பின் ஆட்சிக்காலத்தில் அஸிவ் ஸர்தாரி பல மாதங்கள் சிறைவைக்கப் பட்டார்.

பெனாஸிர் பூட்டோ தமது வாழ்க்கையின் அனுபவங்களை கிழக்கின் புதல்வி (Daughter of the East) என்ற தமது சுயசரிதையில் விரிவாக எழுதியுள்ளார். இந்நூல் அவர் முதல் தடவையாக பிரதம மந்திரியாகத் தெரிவானபோது வெளியிடப்பட்டிருந்தது.

பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும், தமது தந்தையாருமான சுல்பிகார் அலி பூட்டோவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டபோது, அவருடன் இறுதி நேரத்தில் சிறைக்கூடத்தில் வைத்து உரையாடியவைகளைப் பற்றி அந்த சுயசரிதையில் விரிவாக எழுதியுள்ளார்.

பெனாஸிரின் தந்தையாருடனான அந்த இறுதி நேர அனுபவம் பற்றிய தகவல்கள் படிப்போர் மனதை நெகிழச் செய்வதாக இருக்கின்றன.

1979ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ந்திகதி அதிகாலை சுல்பிகார் அலி பூட்டோ ராவல் பிண்டி சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டார். அப்போது பெனாஸிரும் அவரது தாயாரான நஸரத்தும் சிகாலா என்ற இடத்தில் உள்ள வேறொரு சிறைச் சாலையில் சிறைவைக்கப் பட்டிருந்தனர்.

தந்தையார் தூக்கிலிடப்பட்ட சமயம் தமது உடல் முழுவதும் நடுக்கமுற்று தாயின் மடியில் தந்தையாரை "பப்பா, பப்பா" என்று உரக்கக் கத்தி அழைத்தபடி அழுது புரண்டதைப் பற்றி அவர் எழுதியுள்ளவை எந்தவொரு கல் நெஞ்சத்தையும் உருகச் செய்வதாகவே இருக்கின்றது.

பெனாஸிர் பாகிஸ்தானின் பிரபலம் மிக்க, அரசியல் செல்வாக்கு மற்றும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆயினும் அவர் முகங்கொடுத்த கஷ்டங்கள் எந்தவொரு ஏழைப்பெண்மணி கூட அனுபவித்திராதவையாகவே விளங்கியிருந்தன.

இன்று அவர் மீண்டும் பாகிஸ்தானின் பிரதமராகியுள்ளார். பெனாஸிரால் பாகிஸ்தானின் பிரதமராக நீடிக்க முடியுமா? என்பதே அரசியல் அவதானிகளின் கேள்வியாகும்.

பெனாஸிரின் குடும்பத்திற்குள்ளும் பிரச்சனைகள் தலைதூக்கியுள்ளன. தாயாரும், சகோதரரும் பெனாஸிருக்கு எதிராகக் கொடி உயர்த்தியுள்ளனர்.

சவால்களைச் சந்தித்துப் புதுமைப் பெண் பெனாஸிர் தன்னால் முடியும் என்று நிரூபிக்க வேண்டும். ■

## ஆயுதம் குவிப்பதில் ஆர்வம்!

# ஆயுதக் குறைப்பு பேச்சுக்கள் வேசம்!!

ஆசிய நாடுகள் இப்பொழுது ஆயுதங்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுகின்றன. ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் ஏற்கனவே பாவனைக்குட்படுத்தப்பட்ட ஆயுதங்கள் தேங்கிக் கிடக்கின்றன.

இவற்றை வாங்கிச் சேர்ப்பதிலும் ஆசிய நாடுகள் போட்டி போடுகின்றன. ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் தொடர்ந்து உற்பத்தி செய்யப்படும் ஆயுதங்களுக்கும் அதனால் சந்தை கிடைக்கிறது.

தைவான் அமெரிக்காவிடமிருந்தும் பிரான்சிடமிருந்தும் யுத்த விமானங்களை வாங்குகிறது. கப்பல்களைத் தாக்கும் ஏவுகணைகளையும் ஏராளமாக வாங்கியிருக்கிறது.

ரஷ்யாவிலிருந்து பெறப்பட்ட நவீன யுத்த விமானங்கள், குண்டு வீச்சு விமானங்கள் ஆகியவற்றையும் விமானங்களைக் குறி வைக்கும் ஏவுகணைகளையும் சீனா கொள்வனவு



செய்துள்ளது.

ரஷ்யத்தயாரிப்பான மிக் 29, மற்றும் அமெரிக்க எஃ 18 யுத்த விமானங்களையும் மலேசியா வாங்கியிருக்கிறது.

இதேவேளை இந்தோனேஷியா ஜேர்மனியிடமிருந்து 38 கடற்படைக்கான கப்பல்களைப் பெற்றிருக்கிறது.

அமெரிக்காவிடமிருந்து ஜப்பான் விமானத்தாக்குதலை எச்சரிக்கும் பல சாதனங்களை வாங்கியுள்ளது.

சீனாவின் ஒத்தாசையுடன் பர்மா தனது இராணுவத்தளங்களை நவீனப் படுத்தியிருக்கிறது.

இவ்வாறானால் அமைதி என்பதை எங்கே தேடுவது?

ஆயுதக் குறைப்புப் பற்றிய பேச்சுக்களுக்கு குறைவில்லை. பேசிக்கொண்டே ஆயுதங்களை உற்பத்தி செய்து குவிக்கிறார்கள். பேசிக்கொண்டே ஆயுதங்களை வாங்கியும் குவிக்கிறார்கள்.

உலக சமாதானம் தூரத்துக் கனவாக இருக்கிறது. ■

## காதில் விழுந்ததும் நேரில் கேட்டதும்

நகர ரவுண்டப்

-ஒற்றன்-

*மழைக்குளிர்- போர்வைக்குள் சுருண்டிருக்க ஆசை. வெளியே வர ஆசை கிடையாது. அடிக்கடி லீவு போட்டால் கோபம் வரும். அதனால் டயறியின் சில பக்கங்களை கிழித்து கவருக்குள் போட்டு அனுப்பி வைத்திருக்கிறேன்.*

### 20.10.93

இரவு 7 மணி. கொழும்பு கோட்டை பஸ் நிலையம் அருகே நின்றோம். நமது மொழிக்காரர் இருவர் நமது காதுபடப் பேசியதில் மனதில் உறுத்திய விசயம். "முன்பு இரவு 10-11 மணியென்றாலும் கொழும்பில் பயமில்லாமல் நடமாடமுடியும். இப்போது ஏழு மணியானால் போதும். தெருவில் கால் வைக்கவே உதறல் எடுக்கிறது".

மற்றவர் கவலையோடு சொன்ன பதில் "அந்த மனுசன் இல்லாத குறை இப்போதுதான் தெரிகிறது." அவர்கள் சொன்னது முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவை.

### 21.10.93

கொழும்பு காலி முகத்திடலில் காதலர்கள் முகத்தில் முகம் பார்க்கும்போது குடைதானே மறைப்பு. வர்ணக் குடைகளுக்குள் சின்ன-சின்ன ஆசைகளை பரிமாறிக்கொள்ளுகிறார்கள். அதனால் குடைகளுக்கு நல்ல மரியாதை. சில ஜோடிகள் குடை ஒன்று இல்லாமல் திடலுக்கு வருவதுண்டு. மற்ற ஜோடிகளைப் பார்த்து விட்டுத்தான் அடடே நாமும் ஒரு குடை கொண்டு வந்திருக்கலாமே என்று கவலைப்படுவதும் உண்டு. விவரம் அறிந்த ஆள் ஒருவர் திடலில் குடைகள் வாடகைக்கு விடும் தொழில் தொடங்க ஐடியா கேட்டார். செய்யுங்கள். ஒரு சேவையாகவும் இருக்கும். கையில் நாலு சில்லறையும் சேரும் என்று ஊக்குவித்தோம்.

### 22.10.93

கொழும்பில் நடைபெற்ற நட்சத்திர இரவுகள் பற்றி ஒரு நண்பர் நம் காதில் போட்ட விசயம். பிரபல வர்த்தகர்கள் சிலர் முன்கூட்டியே பதிவு செய்துவிடுவார்களாம். யாருக்கு யார் என்று பட்டியல் போட்டு நட்சத்திர ஓட்டலில் விருந்து. இதற்கு மேல் சொன்னால் அது நாகரிகமில்லை விடுங்கள்.

### 23.10.93

கிளாலியில் மீண்டும் படகுச் சேவை ஆரம்பம். நண்பர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து விடுதியில் தங்கியிருந்தார். சென்று பார்த்து நலம் விசாரித்தோம். ஊர்ப் புதினங்களை கிளறினோம். மனுசன் வாய்திறக்கப் பயப்பட்டார். ஊர்ப்பழக்கம் அப்படி. இன்னும் பயம் போகவில்லை. எப்படிப் போகும். இங்கும் ஒன்றும் மேலான நிலை இல்லையே.

பின்னர் நேரம் ஆக, ஆக சில விசயங்களை காதுக்குள் மெல்லப் போட்டார். படகுகள் பலவற்றை படையினர் பஸ்பமாக்கிவிட்டதால் ஒட்டைப்படகுகளும் சேவைகளில் ஈடுபடுகிறதாம். பயணிகளிடம் ஒரு வாளி கொடுத்தார்களாம். படகுக்குள் வரும் தண்ணீரை அள்ளி வெளியே கொட்டவேண்டுமாம். "சீ... என்ற சீவியம்." அலுத்துக்கொண்டார்.

ஒட்டை விழுந்தது படகில் மட்டுமோ? வாழ்க்கையிலும்தான். நினைத்துக்கொண்டு பெருமூச்சு விட்டோம். வேறென்ன செய்வதாம்.

ஒப்பரேஷன் யாழ்தேவி பற்றிக் கேட்டோம். அறையைச் சுற்றிப் பார்த்துவிட்டு அவர் சொன்னது "கிளாலியைச் சுற்றியுள்ள பகுதியில் வீடுகள் பல தீக்காயங்களுடன். சுருக்கமாகச் சொன்னால் வெண்கலக் கடைக்குள் யானை போய்வந்த கதைதான்." அதற்கு மேல் நாம் எதுவும் கேட்கவில்லை.

### 24.10.93

இரவு- தொலைக்காட்சியில் ஐ.ரி.என் அழகு ராணிகளை கண்ணுக்குக் காட்டியது. குளோசப்பில் பிரமிக்க வைத்தார்கள். உலக ,நாடுகளில் இருந்தெல்லாம் அந்தந்த நாட்டு அழகிகளை கூப்பிட்டு கோலாகல விழா நடத்தியிருக்கிறார்கள். ரஷ்யாவில் கம்யூனிசம் கவிழ்ந்த பின் அழகுராணிப் போட்டிகள் அங்கும் அரங்கேற்றம். ரஷ்ய அழகி இங்கும் வந்திருந்தார்.

'செக்ஸ்' என்று முகம் சுளிப்போர் அழகுராணிப் போட்டிகளிலும் நாகரிகமான, நளினமான செக்ஸ் இருப்பதை எப்படி ஜீரணிப்பார்களோ? வளர்ந்துவரும் உலகில் அவர்கள் காவி கட்ட வேண்டி வருமோ?

செக்ஸ் வக்கிரங்களை ஒழிக்க வேண்டுமானால் ஆரோக்கியமான செக்ஸ் பற்றிய அறிவு அவசியம்தான்.

### 25.10.93

கொழும்பில் நேற்றிரவும் நல்ல மழை. இடியோடு பொழிந்து பூமியை ஒரு பாடுபடுத்திவிட்டது. இன்று காலையில் தலைநகரம் குளித்து முடித்து தலை துவட்டாமல் நிற்கும் பெண்போல ஈரத்துடன் இருந்தது.

நமது சாலைப் பராமரிப்புக்கு பாராட்டுச் சொல்வது போல வெள்ளம் அங்கங்கே போகமாட்டேன் என்று அடம்பிடித்துக்கொண்டிருந்தது.

■

அனுப்பி வைத்த பக்கங்கள் இவ்வளவு மட்டுமே.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# வாளின் கூர்மையைவிட பேனாவின் கூர்மை வலிமைமிக்கது!

## அலசுவது – இராஜதந்திரி

'ராவய' என்ற பிரபல சிங்கள வாரப்பத்திரிகை கடந்தவாரம் யாழ்குடா நாட்டின் இன்றைய நிலவரம் குறித்து அரிய பல தகவல்களை வெளியிட்டிருந்தது.

தென்னிலங்கையில் இன்று பல்வேறு சிங்களப் பத்திரிகைகள், பல்வேறு அரசியல் சித்தாந்தங்களைக் கொண்டவையாக வெளிவந்தவண்ணமிருக்கின்றன. இப்பத்திரிகைகளின் எண்ணிக்கை பெருமளவில் காணப்படுகின்றது. அத்துடன் கைக்கடக்கமாக இன்றைய அவசர உலகில் நடமாடும் வாசகர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற வகையில் கட்டுரைகள், செய்திகள் மற்றும் விமர்சனங்கள் என்பவற்றை இரத்தினச் சுருக்கமாக இப்பத்திரிகைகள் கொண்டிருப்பதுடன், நவீன அச்சுயந்திரங்களின் 'ஜாலங்களை'யும் தாங்கியவையாக நல்ல தரமான கட்டமைப்புடன் வெளிவருகின்றன.

இத்தகைய பத்திரிகைகள் அரசியல் ரீதியிலான கட்டுரைகளைக்கூட துணிச்சலாக வெளியிடுவதுடன், சர்ச்சைக்குரிய விடயங்களையும் ஒளிவு மறைவின்றி வாசகர்கள் முன்பாக சமர்ப்பித்து வருகின்றன.

இதன்காரணமாக இன்று இலங்கையின் முன்னணிப் பத்திரிகைக் கரியாலயங்களால் வெளியிடப்படும் சிங்களப் பத்திரிகைகளையும் மிஞ்சியதாக தென்னிலங்கையின் மூலைமுடுக்குகளிலெல்லாம் புதிய சிங்களப் பத்திரிகைகள் பெருமளவில் பிரபலமடைந்து வருகின்றன.

சிங்கள வாசகர்கள் கைக்கடக்கமான நிருபர்களின் போர் முனைச் செய்திகளை அரிய புகைப்படங்களுடன் தாங்கி வந்தமையினாலேயே கடந்த வாரம் தென்னிலங்கையில் அது பெருமளவில் களைகட்டியிருந்தது.

போர்முனையில் நின்றபோது காயமடைந்து உயிருக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் சிலரையும் இந்த ராவய பத்திரிகையாளர்கள் தமது கைகளால் சுமந்து சென்று வாகனங்களில் ஏற்றியிருந்தனர்.

மோதல்கள் மும்முரமடைந்தவேளை காயமடைந்தவர்களை ஏற்றியிறக்குவதற்கு ஆள்உதவி தேவைப்பட்ட நிலையிலேயே ராவயப் பத்திரிகையாளர்களும் காயமடைந்த புலிகள் இயக்கப் போராளிகளைச் சுமப்பதில் உதவிக்கரம் நீட்டியுள்ளனர்.

இந்த உதவி அவர்களது ஜீவகாருண்யப் பண்பை வெளிப்படுத்துவதாகவும் , சிந்திக்கத் தெரிந்தவர்கள் இரத்தஞ் சிந்தப்படும்போது கைகட்டி நிற்கமாட்டார்கள் என்பதனைப் பறைசாற்றுவதாகவும் விளங்கியிருந்தது.

புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு.அன்டன் பாலசிங்கத்தையும் இந்த ராவய பத்திரிகையாளர் குழாம் சந்தித்திருந்தது.

யாழ்குடாநாட்டில் தாம் நேரில் கண்டவை மற்றும் தமது அறிவுக்கு எட்டியவை அனைத்தையும் தொகுத்து ஒரு தொடர்கட்டுரையாக ராவய பத்திரிகையாளர்கள் பிரசுரித்துள்ளனர்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு இனப்பிரச்னை குறித்து முறிவடைந்துவிடுகின்றன. அத்துடன் இம்முறிவுகள் ஒரு புதிய முயற்சியைக் கூட உருவாக்குவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தாதவையாகவும் விளங்குகின்றன.

இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளும் தோல்வியில் முடிவடையும் போது, அத்தோல்வியில் தோன்றிய இழப்புக்கள் புதிய நடவடிக்கைகளை உடனடியாகத் தொடருவதற்கு ஊக்கமளிக்கக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்காதவையாகவே இருக்கின்றன.

இந்நிலையில் ஆட்சியிலிருப்போர் சந்தர்ப்பத்துக்கேற்றவகையிலேயே ஒரு தடவை அரசியல் தீர்வை வலியுறுத்தியும், மறுதடவை இராணுவத் தீர்வை முதன்மைப்படுத்தியும் தமது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனரே தவிர, பிரச்னையை விரைந்து தீர்ப்பதற்கான எந்தவொரு வழிவகையையும் உண்மையான விசுவாசத்துடன் முன்னெடுப்பவர்களாகக் காணப்படவில்லை.

அரசாங்கம் அரசியல் ரீதியாகவோ, அல்லது இராணுவ ரீதியாகவோ ஆரோக்கியமான தீர்வு எதனையும் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து விரைவில் எட்டப் போவதில்லை என்பதனை நாட்டுமக்கள் நன்குணர்ந்தவர்களாக இருக்கின்றார்கள்.

இந்நிலையில் அரசியல் ரீதியாக அல்லது இராணுவ ரீதியாக இடம்பெறும் நடவடிக்கைகள் குறித்து அரசு தரப்பினர் கூறுவதையும் ஏற்றுக்கொள்ளத் தயாரற்ற நிலையிலேயே நாட்டு மக்கள் காணப்படுகின்றனர்.

இதன் வெளிப்பாடாகவே 'ராவய' பத்திரிகையாளர் குழாத்தின் யாழ்குடா நாட்டு விஜயமும் விளங்கியிருந்தது.

'சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; பலரைப் பலகாலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக்காலமும் ஏமாற்றமுடியாது' என்பது ஒரு முதுமொழி.

ஆட்சியாளர்கள் கூறுவதையும், அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள், மற்றும் ஏனைய பொதுசனத் தொடர்புசாதனங்கள் வெளியிடும் தகவல்களையும் நம்பியிருந்த காலம் படிப்படியாக மாறிவருவதையே குறிப்பதாக ராவய பத்திரிகையின் பணி விளங்கியுள்ளது.

நாட்டில் பிரச்னைகள் இருக்கின்றன; ஆனால் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் மேலும் பிரச்னைகளை அதிகரிப்பனவாக இருக்கின்றன என்பதனைச் சுட்டிக்காட்டுவதாகவே அப்பத்திரிகைகளின் போக்கு விளங்கியிருக்கின்றது.

அரசியல் மற்றும் இன, மத வட்டங்களுக்கு அப்பாற்பட்டவகையில் தம்மை இனங்காட்டிக் கொள்ளும் 'ராவய'வின் நிருபர்கள் வடக்கே தாமாகவே சென்றமை ஒரு துணிச்சலான நடவடிக்கையாகும்.

இது தவிர 'ஒப்பரேஷன் யாழ்தேவி' மும்முரமடைந்திருந்த வேளை 'ராவய' நிருபர்கள் மோதல் இடம் பெற்ற பகுதியில் நடமாடி நிலைமைகளை நேரில் அவதானித்துள்ளனர்.

அவர்களது இத்தகைய நடவடிக்கை அவர்கள் கொண்டிருந்த துணிச்சலுக்கு முன்பாக 'அபார' என்ற சொல்லைச் சேர்க்கத் தூண்டுவதாக இருக்கின்றது.

உலகில் நீண்ட பெரும் யுத்தங்கள் இடம் பெற்ற பகுதிகளில் பத்திரிகையாளர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகவே இருந்துள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் வியட்நாமின் யுத்த நிலவரத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்ட 'கில்லிங் பீல்ட்ஸ்' (Killing Fields) அதாவது கொலைக் களங்கள் என்ற திரைப்படம் சர்வதேசக் கவனத்தைப் பெற்றிருந்தது.

இத்திரைப்படம் அமெரிக்காவின் அதி உயர் சினிமா விருதாக வர்ணிக்கப்படும் 'ஒஸ்கார்' (Oscar) விருதுகள் ஐந்தினைத் தட்டிச் சென்றிருந்தது.

இத்திரைப்படமும் பத்திரிகையாளர் ஒருவரின் உண்மையான நேரடி அனுபவத்தை மையமாக வைத்தே தயாரிக்கப்பட்டிருந்தது.

இப்படத்தின் கதாநாயகனாக நடிக்கும் பத்திரிகையாளர் வியட்நாம் நாட்டைச் சேர்ந்தவர். அங்கு வியட்நாம் கெரில்லாக்களின் கெடுபிடி மற்றும் ஏனைய யுத்த நிலைமைகளுக்கு முகங் கொடுத்தவராக அந்த பத்திரிகையாளர் காணப்பட்டார்.

ஒரு தடவை, இருதடவை மட்டுமல்ல பல தடவைகள் அப்பத்திரிகையாளர் பயிரிழையில் யுத்தக் கெடுபிடியிலிருந்தும் உயிர்தப்பி இறுதியாக வியட்நாமில் இருந்து வெளியேறியிருந்தார்.

யுத்தத்தை மேற்கொண்டிருந்தபோது அங்கு அதன் இராணுவ நடவடிக்கைகள் மற்றும், இராஜதந்திர இழுபறிகள் குறித்தே பெரிதும் பிரசாரஞ் செய்யப்பட்டிருந்தது.

ஆனால் வியட்நாமில் நிலவிய யுத்தக் கெடுபிடியினால் அங்கு வாழ்ந்த எதுவு மறியாத அப்பாவிப் பொதுமக்கள் அனுபவித்த கஷ்டங்கள், தொல்லைகள் என்பன பற்றி மிகச் சிறிதாகவே வெளி உலகுக்குத் தெரிந்திருந்தது.

இந்நிலையில் 'கில்லிங்பீல்ட்' ஒரு சிறந்த திரைப்படமாகவும், ஒரு பத்திரிகையாளனின் உண்மையான நேரடி அனுபவத்தை மையமாகக் கொண்ட தாகவும் வெளிவந்து, வியட்நாமின் யுத்தக் கொடுமைகளை நன்கு புலப்படுத்தியிருந்தது.

இன்று யாழ்குடாநாட்டுக்கும் தென்னிலங்கையின் 'ராவய' பத்திரிகையாளர்கள் தாமாகவே விஜயம் செய்து அங்கு மக்கள் அனுபவிக்கும் கஷ்டம், மற்றும் யுத்தக் கெடுபிடிகள் பற்றி கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

அரசியல், மற்றும் இராணுவ கெடுபிடிகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் வடக்கிற்கும் தெற்கிற்குமிடையே ஒரு பிணைப்பை ஏற்படுத்த கூட்டமொன்று முனைப்புடன் நிற்பதையே 'ராவய' நிருபர்களின் யாழ்குடாநாட்டு விஜயம் உணர்த்தி நிற்கின்றது.

"வாளின் கூர்மையைவிட, பேனாவின் கூர்மை வலிமைமிக்கது" (Pen is Mightier than a sword) என்பது முது மொழி.

இந்த வகையில் துப்பாக்கி ஏந்தியவர்களால் செல்லமுடியாத தூரங்களைச் சென்றடைந்தவர்களாகவே பேனாவை ஏந்திச் சென்ற ராவய நிருபர்கள் விளங்குகின்றனர்.

ஒரு சிறந்த ஜனநாயகச் சின்னமாகப் 'பேனா' விளங்குகின்றது. 'ராவய' நிருபர்கள் அதைத் தாங்கிச் சென்றதால் அவர்களுக்கு உரிய வரவேற்பும் கௌரவமும் வடக்கே கிடைத்திருந்தது.

எனவே ஆட்சியாளர்களும் இதனை ஒரு முன்மாதிரியாக வைத்து ஜனநாயக நடைமுறைகளை முன்னெடுக்க வேண்டும். இதன்மூலமே வடக்கே அவர்களால் காலூன்ற முடியுமெனக் கருதலாம்.

ஆட்சியாளர்கள் சர்வதேச அரங்குகளில் மட்டும் இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர்.



புலிகளின் அரசியல் ஆலோசகருடன் ராவய பத்திரிகையாளர்கள்

# படையினர் அடைய முடியாத இலக்கில் பத்திரிகையாளர்கள்!

இப்பத்திரிகைகளை பஸ், ரயில் வண்டிகள் மற்றும் காரியாலயங்களில் வைத்துப் படிப்பதை வழக்கமாகக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

அரசியல் விடயங்கள் மட்டுமல்லாது, கலை, இலக்கியம், சினிமா மற்றும் இராணுவ நடவடிக்கைகள், உலக நடப்புகள் என்பன குறித்தும் இப்பத்திரிகைகள் பல்வேறு கோணங்களிலும் விமர்சனங்களை வெளியிடுவனவாகக் காணப்படுகின்றன.

ராவய (RAVAYA) என்ற சிங்களப் பத்திரிகை இலங்கையில் வெளியாகி வரும், சிறிய அளவிலான சிங்களப் பத்திரிகைகளில் முன்னணியில் இருக்கக் காணப்படுகின்றது.

'ராவய' என்பதன் தமிழ் அர்த்தம் குரல் என்பதாகும். இப்பத்திரிகை கடந்த வாரம் சிங்கள வாசகர் வட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

'ஒப்பரேஷன் யாழ்தேவி' யாழ்குடா நாட்டில் இடம்பெற்றிருந்தவேளை, 'ராவய' பத்திரிகையின் மூன்று பத்திரிகையாளர்கள் குடாநாட்டில் தங்கியிருந்தனர். அவர்கள் வெறுமனே யாழ்குடாநாட்டின் நிலைமைகளை மட்டும் ஆராய்வதோடு நின்றுவிடவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரச படையினருக்குமிடையே மோதல்கள் இடம்பெற்ற பகுதிக்கும் சென்று யுத்த நிலைமைகளை நேரில் அவதானித்திருந்தனர்.

விமானங்கள் இடியையொத்த முழக்கத்துடன் குண்டுகளைப் போட்டதையும், புலிகள் தமது மறைவிடங்களிலிருந்து பதுங்கித் தாக்கியதையும் இந்த 'ராவய' பத்திரிகையாளர்கள் போர் முனையிலிருந்தே அவதானித்திருந்தனர்.

கூடவே 'ஒப்பரேஷன் யாழ்தேவி'யின் போது கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் இறுதிச் சடங்குகளிலும் பங்குபற்றி அங்கு நடந்தவற்றையும் தமது புகைப்படக் கருவிகளுக்குள் புகுத்தியிருந்தனர்.

எனவே 'ராவய' பத்திரிகை, யாழ்ப்பாணம் சென்றிருந்த அதன் அரசியல்வாதிகள் பல்வேறுபட்ட கருத்துக்களையும் வெளியிடுபவர்களாக இருக்கின்றனர்.

ஆட்சியாளர்கள் நேரத்துக்கு நேரம் தமது கருத்துக்களையும், கண்ணோட்டங்களையும் மாற்றி வருகின்றனர்.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வுதான் ஒரே வழி. அரசியல் ரீதியாகவே பிரச்னையைத் தீர்க்க முடியுமென்று ஆட்சியார்கள் ஒரு தடவை கூறுவர். பின்னர் தாம் கூறியவற்றை முற்றிலும் மறந்து இராணுவ நடவடிக்கைகள் மூலமாகவே பிரச்னைக்குத் தீர்வுகாண முடியும் எனக் குறிப்பிட்டு அந்த நடவடிக்கையையும் திடுதிப்பென ஆரம்பித்து விடுகின்றனர்.

இதனால் பொதுமக்கள் எதுவு மறியாதவர்களாகக் காணப்படுகின்றனர். ஆட்சியார்களின் 'இரட்டை நாக்குப்' பேச்சுக்களால் அவர்கள் தடுமாற்றமடைந்தவர்களாகவே விளங்குகின்றனர்.

அரசியல் தீர்வுதான் ஒரேவழியென்று கூறிக்கொண்டு அரசியல் ரீதியில் சமரச முயற்சிகளை அரசு ஆரம்பிக்கும்போது அம்முயற்சிகள் குறித்துப் பொதுமக்கள் பெரும் எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கின்றனர்.

அதேபோல இராணுவ நடவடிக்கையை அரசு பெரும் எக்காளமிட்டு ஆரம்பிக்கும் போதும், ஏதாவது ஒரு அனுகூலமான முடிவு கிடைக்கும் என்றே பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் கடந்த காலங்களில் அரசியல் நடவடிக்கைகளோ அல்லது இராணுவ நடவடிக்கைகளோ எதுவித நல்ல முடிவுகளையும் தராதவையாகவே காணப்படுகின்றன. அத்துடன் இந்த அரசியல், மற்றும் இராணுவ நடவடிக்கைகளில் ஏற்படும் தோல்விகள், தொடர்ந்து இந்த இருவேறு துறைகளிலும் ஓர் ஆரோக்கியமான முன்முயற்சிகளை முன்னெடுக்கமுடியாத சூழ்நிலையை உருவாக்கிவிடுகின்றது.

அரசியல் ரீதியாகப் பேச்சுவார்த்தைகளையோ அல்லது ஒப்பந்தங்களையோ மேற்கொள்ளும் போது அவை

இதுவரைகாலமும் இலங்கையில் வெளிவந்த பத்திரிகைகளில் அநேகமானவை அரசியலாளர்களின் குறுகிய கண்ணோட்டங்களுக்கு முக்கியமளிப்பனவாகவும், தூர நோக்கற்ற புத்திஜீவிகளைத் தட்டிக் கொடுப்பனவாகவும் விளங்கியிருந்தன.

ஆனால் அண்மைக்காலங்களில் தென்னிலங்கையில் வெளிவரும் ராவய மற்றும் அதனையொத்த சிங்களப் பத்திரிகைகளில் அநேகமானவை முற்றிலும் புதிய கண்ணோட்டத்தைக் கொண்டனவையாகவே காணப்படுகின்றன.



புலிகளால் தகர்க்கப்பட்ட இராணுவ டாங்கி

எந்தவொரு அரசியல் விடயத்தையும் சித்தாந்தரீதியாக நோக்குவதை விட நடைமுறைச்சாத்தியமாக அணுகுவதிலேயே அப்பத்திரிகைகள் ஆர்வங்காட்டுகின்றன.

இவை பிரச்சனைகளை எந்த வகையிலும் இன, மத வாதக் கண்ணோட்டத்தினுள் வைத்து நோக்காதவையாகக் காணப்படுகின்றன.

பின்னர் தமது நண்பர் ஒருவரின் துணையுடன் அமெரிக்காவுக்கு அவர் தப்பி வருவதாக அத்திரைப்படக் கதை விளங்கியிருந்தது.

அப்பத்திரிகையாளர் தப்பி வந்த கதையை விட, வியட்நாமின் போர்க் கொடுமைகள் அத்திரைப்படத்தில் தெட்டத் தெளிவாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

சேறும் சகதியுமான வயற்பரப்பில் நூற்றுக்கணக்கான மனித உடல்கள் அழுகிக் கிடக்கும் காட்சி.

தமக்கெதிரானவர்களை குறுகிய தூரத்தில் வைத்தே வியட்நாம் கெரில்லாக்கள் மண்டை சிதறச் சுட்டுக் கொல்லும் காட்சி என்பன இத்திரைப்படத்தில் மிகத் தத்ரூபமாக எடுக்கப்பட்டிருந்தன.

இத்தகைய கொடிய சூழ்நிலைகளுக்கெல்லாம் 'கில்லிங்பீல்ட்' கதாநாயகன் நேரடியாகவே முகங்கொடுத்திருந்தார்.

அத்திரைப்படம் அமெரிக்க மக்களுக்கு வியட்நாமில் நிலவிய யுத்தக் கெடுபிடிகளை நன்கு விளக்குவதாக அமைந்திருந்தது.

வியட்நாமில் அமெரிக்கா நீண்ட

ஆனால் உள்நாட்டில் அரசியல் நடவடிக்கை பற்றிப் பேசுவதைவிட இராணுவ செயற்பாட்டிலேயே அரச தரப்பினர் ஆர்வங்காட்டுகின்றர்.

அண்மையில் இராணுவ வீரர்கள் மத்தியில் உரையாற்றிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்யரத்ன, "புலிகள் முறியடிக்கப்பட வேண்டும். அவர்களுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும். புதிய பல அணிகள் உருவாக்கப்படும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

புலிகள் கடந்தகாலங்களில் இராணுவ ரீதியாக மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் உலகறிந்தவிடயம். அவர்களை இராணுவ ரீதியாக முறியடிப்பதற்கு எடுத்த முயற்சிகள் பெரும் ஆட்சேதத்திலும், பொருட் சேதத்திலுமே முடிவடைந்துள்ளன.

வடக்கே இராணுவ அதிகாரிகள், வாரந்தோறும் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து வருகிறார்கள். அத்துடன் புதிய வியூகங்களையும் வடிவமைத்து மோதல்களையும் முடுக்கி விடுகிறார்கள்.

வியூகங்களை அமைப்பதிலும், புதிய யுத்த தந்திரங்களை ஆராய்வதிலும் செலுத்தும் கவனத்தை அரசியல் நடவடிக்கைகளிலும், இராஜதந்திர அணுகுமுறைகளிலும் செலவிட அரச தரப்பினர் தயக்கம் காட்டிவருகின்றனர்.

வியட்நாமில் போர்முடிவுக்கு வந்ததும் பிரபல தமிழ் பயண எழுத்தாளரான திரு. மணியன் அந்நாட்டுக்கு விஜயம் செய்திருந்தார். யுத்தத்தினால் ஏற்பட்ட சேதங்களை ஆராய்ந்து அவர் 'ஆனந்த விகடனில்' எழுதிய கட்டுரையில், "அமெரிக்கா பலகோடிக் கணக்கான ரூபாய்களை வியட்நாமிய யுத்தத்தில் கொட்டிச் சிந்தியுள்ளது. இப்பெருந் தொகைப் பணத்தை வியட்நாமின் அபிவிருத்திக்காக செலவிட்டிருந்தால் அந்த நாட்டில் பல மைல் தூரத்துக்கு தங்கத்தினாலேயே பாதை அமைத்திருக்க முடியும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

எனவே இராணுவ நடவடிக்கைகளில் செலவிடும் பணத்தையும், நேர காலத்தையும் அரசியல் நடவடிக்கைகளில் பயன்படுத்தினால் ஒரு தீர்வை ஏற்படுத்தக்கூடிய ஆரோக்கியமான சூழ்நிலை, நிச்சயம் வழிக்கு வந்தே தீரும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# கூந்தலை வளர்க்க மேலைநாட்டவர் விருப்பம் ஆனால் நாம்?



எங்களிடம் பல்வேறு பாரம்பரியச் சிறப்புக்கள் உண்டு எனப் பிறர் நம்பினாலும் நாங்கள் நம்பத் தயாராக வில்லை என்பது போல, அந்த நல்லம்சங்கங்கள் பற்றிய பிரக்ஞை அற்றவர்களாக, அடுத்தவனிடமுள்ள அசிங்கங்களை எமதாக்கிக் கொள்ளவே நாங்கள் ஆலாய்ப் பறந்து கொண்டிருக் கின்றோம்.

பதிலாக, நேரந் தவறாமையைக் கடைப்பிடித்தல், முதன் முதலாக ஒருவரைச் சந்திக்கும்போது முகமன் கூறி வாழ்த்துதல், அடுத்தவனுக்கு இடையூறு ஏற்படுத்தாது நடந்து கொள்ளல் போன்ற மேற்கு நாட்டவரிடத்து வெளிப்படையாகத் தென்படும் ஏராளமான நல்லம்சங்கள் ஏன் எங்களைக் கவரத்தவறிவிடுகின்றன என்பது புதிராகவே உள்ளது.

பிறசமூகத்தவரின் கலாசாரத்திலுள்ள அற்ப கவர்ச்சிகளுக்கு சுலபமாக ஆட்பட்டுவிடும் நாங்கள், எங்களிடமுள்ள அற்புதமான பண்புகளை இலகுவில் விட்டுக்கொடுத்து, மறந்தே போய்விடு கின்றோம். ஆனால் எங்களிடமிருந்து கற்றறிந்த அந்த நல்ல பண்புகள், பழக்கவழக்கங்களால் மற்றைய சமூகத்தவர்கள் பயன் பெறுகிறார்கள் என்ற உண்மை எங்களுள் பலருக்குத் தெரியாது.

எங்கள் மொழியின் தொன்மையை அறிந்து கொள்ள ஆங்கிலேயர் ஆசைப் படுகின்றார்கள். எங்கள் சமய தத்துவங்களால் கவரப்படுகின்றார்கள். எங்கள் சாஸ்திரிய சங்கீதத்தை விரும்பி இரசிக்கின்றார்கள். எங்கள் நடனக் கலையின் சிறப்பினை அறிந்து அதனை பயின்று கொள்வதில் நாட்டங்காட்டு கின்றார்கள், மாமிச உணவின் கெடுதி களை உணர்ந்த அவர்கள் எங்கள் பாரம்பரியங்களுக்கே உரித்தான சைவ உணவுகளை விரும்பிச் சாப்பிடுகின் றார்கள்; நீண்ட தலைமுடி வளர்ப்பதில் உள்ள உடலியல் பலாபலன்களை உணர்ந்த ஆங்கிலப் பெண்கள் தங்கள் கூந்தலைக் கத்தரிப்பதை குறைத்து வருகின்றார்கள். நெற்றிப் பொட்டு சுட்டிக்காட்டும் அர்த்தங்களை அறிந்து வியப்புறுகின்றார்கள். விரும்பி அணிகின் றார்கள். சேலை உடுத்திக்கொள்ள ஆசைப்படுகின்றார்கள்; கை கொடுத்து வரவேற்பதிலும் வணக்கம் செலுத்து வதிலும் வாழ்த்துச் சொல்லுவதிலும் உள்ள சாதக பாதகங்களைப் பற்றி சர்ச்சைகளே மேற்குலகில் கிளம்பியுள்ள இந்நாட்களில், கைகூப்பி வணக்கம் செலுத்தும் எங்கள் பாரம்பரியத்தை இவர்கள் கைக்கொள்ளும் நாள் வெகு தொலைவில் இல்லை. இவை எல்லாம் எமக்குப் பெருமை தரும் விடயங்க ளல்லவா! எனவே எங்கள் நிலங்களில் களைகளுக்கு இடம் தரமாட்டோம்; எங்கள் பதர்களைப் பயிர்களாக காட்டவும் மாட்டோம் என நாங்கள் எல்லோரும் இனியாவது உறுதி பூண்டு கொள்வோம் இல்லாது போனால், எங்கள் பாரம்பரியச் சிறப்புக்களை ஆங்கிலேயன் வந்து எங்களுக்கே போதிக்கும் துர்ப்பாக்கிய சூழ்நிலையை எங்களால் தடுக்க முடியாமற் போய்விடலாம்!

நன்றி– நான்காவது பரிமாணம்.

## குடும்பப் பெண்களுக்குச் சில குறிப்புகள்

**தவறான செய்கை:**

வீடு தேடி வருபவரிடம் முகங்கொடுத்துப் பேசாமல் இருப்பது தவறு. விவரத்தைச் சுமுகமாகக் கேட்டு நல்ல முறையில் பதில் சொல்லி அனுப்ப வேண்டும்.

**நாலுபேர் வேண்டும்:**

நல்லது கெட்டதற்கு நாலு பேர் வேண்டும், எனவே அக்கம் பக்கத்தாருடன் சுமுகமான பழக்கம் வைத்திருப்பது அவசியம்.

**வாக்குவாதம் கூடாது:**

அடக்க முடியாமல் ஆத்திரம் வந்தால் அந்த இடத்தை விட்டுப் போய்விட வேண்டும். வாக்கு வாதத்தால் வன்மம் வளரும்.

**சமய சந்தர்ப்பம்:**


விருப்பத்தை வேளையறிந்து வெளியிட வேண்டும். சமயம் அறியாது கூறிச் சண்டைக்கு அடி கோலக்கூடாது. புத்திசாலித்தனமாக நடந்து புருஷனிடம் தம் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தெரியாத பெண்கள்தான் திருப்தியடையாத உள்ளத்துடன் வாழ்வார்கள்.

# நீங்களும் தைக்கலாம்

லேடீஸ் ஸ்பெசல்

## சாறி பிளவுஸ்


சட்டை அகலம் 36"÷4=9"+1 10"
சட்டை உயரம் 14"+1 1/2"= 15 1/2"
கழுத்தகலம் 4"÷2= 2"
பின் கழுத்து இறக்கம் 1/2"
முன் கழுத்து இறக்கம் 5"
அக்குள் சுற்றளவு 14"
முன் சட்டை நீளம் 10"+1 1/2"= 11 1/2"
கை சுற்றளவு 14"+2"= 16"÷2"=8"
கை நீளம் 10"+1 1/2"
நுனிக்கை சுற்றளவு 12"÷2"= 6"+1"=7"
இடுப்புச் சுற்றளவு 28"÷4"=7"+1"=8"





சுதா-நீர்கொழும்பு
(மல்லாகம்)

20" அகலமும் 15 1/2" நீளமும் உடைய துணியை எடுத்து இரண்டாக மடித்து A,B,C,D எனக் குறித்துக் கொள்க. A யிலிருந்து 1/2" பதிவாக F வரையும் A யிலிருந்து 2" E வரையும் அளந்து E,Fஐ இணைத்துப் பின் கழுத்து வரைந்து கொள்க. தோள் நீளம் A யிலிருந்து H வரை 7" குறித்துக்கொள்க. B யிலிருந்து 5" G வரை குறித்து H,Gஐ இணைத்து கை வரைந்து கொள்க. H யிலிருந்து 1/2" பதிவாக I வரை குறித்து E,Iஐ சரிவாக இணைத்து வரைந்து கொள்ளவும். D யிலிருந்து 7" அளந்து J வரை குறித்து G,Jஐ இணைத்து இடுப்புச் சற்றளவு வரைந்து கொள்க.

கழுத்து, தோள்நீளம் கை ஆகியவற்றின் பொருத்துக்கு 1/2"உம் பக்கப் பொருத்துக்கு 1" உம் கீழ் பொருத்துக்கு 1 1/2"உம் தையலுக்கு விட்டுத் துணியை வெட்டிக் கொள்க.





வெட்டிய பின் உடம்பை அப்படியே வைத்து வரைந்து கொள்ளவும். பின் உடம்புக்கு உள்ளது போல பக்கப் பொருத்து சரிவாக இல்லாமல் படத்தில் உள்ளது போல நேராக எடுத்துக் கொள்ளவும். A யிலிருந்து 5" F வ்ரை அளந்து E,Fஐ இணைத்து முன் கழுத்து வெட்டிக் கொள்க. கையும் 1/2" உள் நோக்கி




(படத்தில் உள்ளவாறு) வெட்டிக் கொள்க. E யிலிருந்து J வரை 11 1/2"உம் D யிலிருந்து L வரை 4 1/2" உம் C யிலிருந்து M வரை 4" உம் (D,C என்பவை கீழ்மடிப்பு 1 1/2" இல்லாமல்) குறித்து L,J,M என்பவற்றை வளைவா வ்ரைந்து வெட்டவும். L இலிருந்து 3" தள்ளி P வரை அளந்து மடித்து 1" அகலத்திற்கு 2" உயரம் வரை ரக்ஸ் இட்டுக் கொள்க. அதே போல் N என்ற இடத்தில் மடித்து 1/4" அகலத்திற்கு 2" நீளம் வரை ரக்ஸ் இடுக. O என்ற இடத்திலிருந்தும் மடித்து 1/4" அகலத்திற்கு 3" அல்லது 3 1/2" நீளத்திற்கு ரக்ஸ் இடுக.

8" அகலமும் 5 1/2" நீளமுமான 4 துண்டுகளை எடுத்துக் கொள்க. B யிலிருந்து 1/2" குறைத்து E வரை அளந்து A,Eஐ வளைவாக வெட்டிக் கொள்ளவும். தைத்து முடிந்த முன் உடம்பு ஒன்றுடன் வெட்டப்பட்ட துணி இரண்டை வைத்துப் பொருத்தவும்.

16" அகலமும் 11 1/2" நீளமுமான துணியை எடுத்து இரண்டாக மடித்துக் கொள்ளுங்கள் B யிலிருந்து 3 1/2" பதிவாக E வரையும் C யிலிருந்து 1" உள்நோக்கி F வரையும் குறித்து




E,Fஐ இணைத்துக் கொள்க. அதே போல A,Eஐ வளைவாக வளைத்து வரையவும். வரைந்தவற்றை வெட்டி விரித்து வைத்துக் கொள்ளவும். முன் கைக்கு 1/2" உள்நோக்கி வெட்டிக் கொள்ளவும்.

கை பொருத்தும் போது அக்குள் 1/2" திலும் பக்கப் பொருத்தும், கீழ் பொருத்தும் 1" திலும் பிடித்துத் தைக்கவும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (17 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

# சமைப்போம் சுவைப்போம்

## சிக்கன் நகட்ஸ்

**தேவையானவை:**

கோழி இறைச்சி-அரை கிலோ
துண்டாக்கிய ரொட்டி-ஒரு கோப்பை
முட்டை-இரண்டு
உள்ளிப்பூடு-சிறிதளவு
இஞ்சி-சிறுதுண்டு
பச்சை மிளகாய்-சிறிதளவு
மிளகுத்தூள்-அரை தேக்கரண்டி
உப்பு-சுவைக்கேற்ப
எண்ணெய்-அளவாக

**செய்முறை:**

முதலில் கோழி இறைச்சியைக் கழுவிச் சுத்தம் செய்து, சிறு சிறு துண்டுகளாக வெட்டவும்.

இஞ்சி, உள்ளி, பச்சைமிளகாய் ஆகிய வற்றை அரைத்து எடுத்து உப்பு, மிளகுத்தூள் சேர்த்து கோழி இறைச்சியின் மீது பரவலாகத் தூவி வைக்க வேண்டும். அத்துடன் சிறிது தண்ணீர் சேர்த்து அடுப்பில் வேக வைக்கவும். தண்ணீர் வற்றி கறி நன்றாக வெந்ததும் இறக்கி வைக்கவும்.

ஒரு பாத்திரத்தில் முட்டையை உடைத்து ஊற்றி நன்றாக அடித்துக்கொள்ள வேண்டும். அதில் தூளாக்கிய ரொட்டியைக் கலந்து வைக்க வேண்டும். கோழி இறைச்சித்துண்டுகளை முட்டை கலவையில் தோய்த்து எடுத்து தனியே வைக்கவும்.

ஒரு தாச்சியில் எண்ணெய் உற்றி அடுப்பில் வைக்க வேண்டும். எண்ணெய் கொதித்ததும் முட்டையில் தோய்த்து எடுத்த இறைச்சித் துண்டுகளைப் போடவும். சிவக்க வெந்ததும் ஒரு கரண்டியால் எண்ணெயை வடிய விட்டு எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு மூடி வைக்கவும்.

இது சாப்பிட 'கட்லட்' போன்று சுவையாக இருக்கும். இதனை 'சிக்கன் நகட்ஸ்' என்றும் அழைக்கலாம்.

## அன்னாசி ரசம்

**தேவையானவை:**

அன்னாசிப்பழம்- 1
தக்காளிப்பழம்- 6
பச்சைமிளகாய்-4 அல்லது 5
இஞ்சி-2
துவரம் பருப்பு-2 ஸ்பூன்
உப்பு தேவைக்கேற்ப
நெய்- 1/2 ஸ்பூன்
கடுகு- 1/2 ஸ்பூன்
ஜீரகம்- 1/2 ஸ்பூன்

**செய்முறை:**

அன்னாசிப்பழத்தை நன்றாக தோலுரித்து இரண்டாக வெட்டிக் கொள்ளவும். ஒரு பாதியைத் துருவி எடுத்துக் கொள்ளவும். மற்றொரு பாதியைச் சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். துருவிய பழத்தைப் பிழிந்து சாறெடுத்துக் கொள்ளவும். தக்காளிப் பழத்தையும் பிழிந்து கொள்ளவும்.

இரண்டு டம்ளர் தண்ணீரில் துண்டாக்கிய அன்னாசிப்பழத்தை போட்டு வேக விடவும். வெந்த பின் அதோடு உப்பு, பச்சை மிளகாய், இஞ்சி, தக்காளிப் பழச்சாறு ஆகியவற்றை சேர்த்து கேஸில் 'சிம்'மில் வைத்துக் கொள்ளவும்.

பருப்பை தனியே வேக வைத்து எடுத்து அதை அன்னாசிப் பழ ரசத்தோடு கலந்து, ஒரு பொங்குவரும் வரை வைத்திருந்து இறக்கி 1/2 ஸ்பூன் நெய்யில் கடுகு, ஜீரகத்தை தாளித்துக் கொட்டவும். பரிமாறும் முன்பு எலுமிச்சை சாறையும் சேர்த்து விடவும். ருசியும் மணமும் வீட்டையே தூக்கும்.

# வீட்டுக் குறிப்புகள்


குழந்தைகளுக்குக், கோடை காலத் திற்கு ஏற்ற உடை தைக்க வேண்டுமா? உங்களுக்குப் பிடித்தமான, இரண்டு விதமான நிறத்தில் தேவையான அளவிற்கு வாங்கிக் கொள்ளுங்கள். படத்தில் உள்ளதுபோல் பாவாடை, கை இல்லாத சட்டை தைக்கவும். பாவாடை எந்த நிறமோ, அந்த நிறத்துணியை சட்டையின் கை, மற்றும் கழுத்துப் பகுதியில் பைப்பிங் போல் வைத்துத் தைத்து விடவும். வெய்யில் காலத்திற்கு ஏற்ற உடையாக இருப்பதோடு, வசதியாகவும் இருக்கும்.



முகம் வறண்டு காணப்படுகிறதா? கெட்டியான தயிர் எடுத்துக்கொள்ளுங்கள். அதில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் ஊறவைக்கவும். பிறகு நன்றாக மசாஜ் செய்து, வெதுவெதுப் பான நீரில் நன்றாகக் கழுவி விடவும். வாரத்திற்கு இரண்டு முறை செய்தால் போதும், முகம் புதுப் பொலிவுடன் மாறிவிடும்.



குழந்தைகளுக்கு உருளைக்கிழங்கை வேக வைத்துக் கொடுப்பது உடல் நலத்திற்கு மிகவும் நல்லது. உருளைக் கிழங்கை வேக வைத்து, நன்றாக மசித்து ஊட்டி விடுங்கள். சிறிது வளர்ந்த குழந்தையாக இருந்தால் வேகவைத்த உருளைக்கிழங்கைத் துண்டு துண்டாக வெட்டிக் கொஞ்சமாக உப்பு, மிளகுத்தூள் தூவிக் கொடுங்கள். அப்படியும் சாப்பிடாமல் அடம்பிடிக்கும் குழந்தை களுக்கு வேக வைத்த உருளைக்கிழங்குத் துண்டுகள் மீது சோஸ் ஊற்றிச் சாப்பிடக் கொடுங்கள்.



கரண்டிகள், கத்தி என்று எந்தப் பொருளானாலும் உபயோகப்படுத்திய உடனேயே நன்றாகக் கழுவி துணியால் துடைத்து வைத்து விடுங்கள். இதனால் துருப்பிடிக்காமல் நீண்டநாட்களுக்குப் புதியது போலவே இருக்கும்.



கண்ணாடி டம்ளர் மற்றும் வைன் கிளாஸ் போன்றவற்றை எப்போதும் கழுவிய பின்னர் துணியால் துடைத்து வைத்து விடுங்கள். அப்படி வைக்கும்போது தலை கீழாகக் கவிழ்த்து வைக்காமல், நிமிர்த்தியே வைக்கவும். கவிழ்த்து வைப்பதால், டம்ளர் ஓரங்களில் கீறல் ஏற்படும். முனை உடைந்து விடவும் வாய்ப்புள்ளது.



அட்வைஸ்

# தப்பிக்கொள்வது எப்படி?

ஆண்கள் என்றாலும் சரி, பெண்கள் என்றாலும் சரி ஆபத்து என்று வந்துவிட்டால் சட்டென தப்பிக்க என்ன செய்யலாம்?



இதோ சில ஆலோசனைகள். உதவி, உதவி என்று கூச்சலிடாமல் நெருப்பு, நெருப்பு என்று சத்தம் போடுங்கள். மற்றவர்கள் கவனம் எளிதில் உங்கள் பக்கம் திரும்பும்.

எதிரி உங்களைப் பிடித்துக் கொண்டிருந்தால் அவனிடமிருந்து இழுத்துக் கொண்டு ஓட முயற்சிப்பதை விட வளைந்து நெளிந்து, திமிறிக் கொண்டு தப்பிப்பது எளிது.

கைகள், முழங்கை, பற்கள், நகங்கள், கால்கள், முழங்கால், தலை இவைகள் எல்லாம் தற்காப்பு ஆயுதமாய் மாறக் கூடியவை.

பயத்தில் நிதானம் இழக்காமல் புத்தியைப் பாவித்து சமயத்திற்கு ஏற்ப தற்காப்பு ஆயுதங்களைப் பயன் படுத்துங்கள்.

ஒரு அறைக்குள் மாட்டிக் கொண்டால் கதவு, ஜன்னல் என்பவற்றை உதைப்பது மூலம் எதிரியின் கவனத்தை திசை திருப்புவது எளிது.

வீட்டுக்குள் அடைபட்டு போராடு வதைவிட தெருவுக்கு எப்படியாவது வந்துவிடுங்கள். எதிரி தொடருவதற்கு தயங்குவான்.


அறையை இருட்டாக்குவதில் வெற்றி பெறுங்கள். உங்களுக்கு பரிச்சயமான இடம் என்பதால் இருட்டை நீங்கள் சாதகமாகப் பயன்படுத்தலாம்.

திடீரென்று அறை இருட்டானால் எதிரி திணறுவான்.

இவை சில ஆலோசனைகள் மட்டுமே. சூழலுக்கு ஏற்ப செயல்பட்டு உங்களை நீங்கள் பாதுகாக்க முயலுங்கள்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## தேடி வருகிறது கூட்டம் வயிற்றுக்குத்தான் மரியாதை



நம்பிக்கையே வாழ்க்கையின் உந்து சக்தி.

சரியான நம்பிக்கைகளும் இருக்கின்றன. தவறான நம்பிக்கைகளும் இருக்கின்றன.

சில நம்பிக்கைகள் படு முட்டாள் தனங்களாகத் தெரியும். எனினும் அதனால் பயன் உண்டு என்று நம்புகிறவர்கள் அதை முட்டாள்தனமென்று சொன்னால், நம்மைப் பார்த்து முறைப்பார்கள்.

கனடாவிலும் அப்படித்தான் ஒரு சம்பவம்.

'நியூஸ்' என்ற சஞ்சிகை கடந்த மே 28ம் திகதி ஆச்சரியமான செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

படத்தில் படு சுவாரசியமாக படுத்தபடி இருக்கிறார் பாருங்கள் மிஸ்டர் மாமிசமலை. அவரது படத்தையும் பிரசுரித்திருந்தது.

இந்த மாமிச மலையின் வயிற்றைத் தொட்டுக் கொண்டு ஏதாவது ஒரு காரியத்தை நினைத்தால் அது நடக்குமாம்.

நம்பமுடியவில்லையா? நியூஸ் என்ற சஞ்சிகைக்கு பேட்டி கொடுத்துள்ள 31 வயதான பெண் புளோரிடா சொல்வதைக் கேளுங்கள்.

"கணவர் என்னை விட்டுப் பிரிந்து போனவுடன் நான் செய்த தொழிலும் பறி போனது. மூன்று குழந்தைகளும் நானும் கஷ்டப்பட்டோம். வீட்டுக்கு வாடகையும் கொடுக்க முடியவில்லை. இவருடைய வயிற்றைத் தடவினால் அதிஷ்டம் வரும் என்று பலர் சொன்னார்கள். சஞ்சிகையில் பிரசுரமான அவரது படத்தில் வயிற்றை தடவிவிட்டு சூது விளையாட்டில் ஈடுபட்டேன். 5, 500 டொலர் பரிசாகக் கிடைத்தது."

சிக்காகோ நகரில் அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் சோஜனா ஆக்வெஸ் (33) தனது காதலன் தன்னைக் கைவிட்டு விட்டதாக கவலையோடு இருந்தார். அவரது சிநேகிதி மாமிச மலையின் வயிற்றில் உள்ள விசயத்தைச் சொல்லியிருக்கிறார். சரி தடவிப் பார்ப்போமே என்று ஒரு தடவல். சரியாக 12 மணி நேரத்தில் காதலன் வந்து கதவில் டொக்....டொக். கதவைத் திறக்க அவளை அணைத்து மன்னிப்பும் கோரினாராம்.

இப்படி அந்தப் பெண்கள் மட்டுமல்ல வேறு பலரது பேட்டியையும் நியூஸ் சஞ்சிகை அவர்களது படங்களோடு வெளியிட்டுள்ளது.

இப்போது விசயம் பரவிவிட இந்த மாமிச மலையைத் தேடி ஒரு கூட்டமே படையெடுக்கத் தொடங்கிவிட்டது.

மாமிச மலைக்கு பலத்த மரியாதை. அது சரி, நீங்களும் வயிற்றைத் தடவிப் பார்த்துவிட்டு நினைத்த காரியம் நடக்க வில்லை என்று கவலைப்பட்டால் அதற்கு நாம் பொறுப்பல்ல.

வெளிவந்த செய்தியைச் சொன்னோம். நம்பிக்கைகள் பலவிதம். அதில் இது ஒருவிதம்.

## தகவல் பெட்டி

மனிதர்களால் மட்டும்தான் சாதனை படைக்க முடியுமா என்ன?

விஞ்ஞான வளர்ச்சியும், வியத்தகு போக்குவரத்து சாதனங்களின் உருவாக்கமும் உலக நாடுகளை நெருங்க வைத்து விட்டன.

உலகம் சுற்றும் மனிதர்கள் இன்று ஏராளம் பேர்.

ஆனால் ஒரு நாய் உலகைச் சுற்றி சாதனை படைத்த கதை தெரியுமோ?

ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அந்தச் சாதனை படைக்கப்பட்டது.

கதையைக் கேளுங்கள்.

அமெரிக்க நியூயோர்க் நகரில் அல்பனி என்ற இடத்திலுள்ள ஒரு தபால் அலுவலகத்திற்கு 1888ம் ஆண்டு ஒரு நாய்க்குட்டி வந்து சேர்ந்தது.

அதன் மீது தபாலக ஊழியர்கள் பிரியம் கொண்டனர்.

'ஔனி' என்று பெயர் சூட்டி செல்லமாய் வளர்த்தனர்.

தபால் பைகளை ஊழியர்கள் குதிரை வண்டியில் ஏற்றிச் செல்லும் போது நாய்க் குட்டியும் அதில் தொற்றிக்கொள்ளும்.

நாளடைவில் அதற்கு பயணம் செய்யும் ஆசை வந்துவிட்டது.

அமெரிக்க தபால் அதிபர் அந்த நாயின் கழுத்தில் ஒரு பட்டையத்தை கட்டிவிட்டார். அதில் இந்த நாய் அமெரிக்க தபால் ஊழியர்களின் அன்புக்குப் பாத்திரமான பிராணி என்றும், அது போகுமிடமெல்லாம் சிறப்பான உபசாரம் வழங்குமாறும் பொறிக்கப்பட்டிருந்தது.

அதனால் ஔனி போன இடமெல்லாம் சிறப்பான உபசாரம்

1895ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19ம் திகதி 'ரகோமா' என்ற நீராவிக் கப்பலின் மேற்தளத்தில் ஔனியின் உலகச் சுற்றுப் பயணம் ஆரம்பமானது.



## குண்டாக இருந்ததால் உருவான காதல்

### "சத்தியமாய் உன் மேலே பைத்தியமானேன் சீக்கிரமே எடையைக் குறைக்காதே"

குண்டாக இருக்கிறோமே என்று அல்லும் பகலும் கவலைப்பட்டுக்கொண்டு இருப்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால் குண்டாக இருப்பது கவலைக்குரிய விசயமல்ல. அமெரிக்காவில் உள்ள ஜென்னி ஃபிரிமான் என்பவள் சிறுமியாக இருந்தபோதே நல்ல குண்டு. "ஐயோ குண்டாக இருக்கிறேனே" என்று ஜென்னியும் கவலைப்பட்டதுண்டு.

மருத்துவமனையில் சேர்ந்து உணவுக் கட்டுப் பாட்டாலும், மருந்துகளாலும் எடையில் 60 இறாத்தல் குறைத்துக்கொண்டாள்.

எல்லோரும்போல என்னால் இருக்க முடியவில்லையே என்று, ஜென்னி ஏங்கியபோதுதான் அவள் வாழ்வில் பீட்டர் என்ற வாலிபன் காதல் வசந்தத்தை வீசினான்.

"கவலைப்படாதே ஜென்னி. நான் உன்னை விரும்புவதற்கு காரணம் என்னவென்று கேளேன்."

"ஏனாம்"

"சத்தியமாய் சொல்கிறேன் ஜென்னி. உன் பருமனான தோற்றமே உன் மேல் பைத்தியம் கொள்ள வைத்தது. ஒரு விண்ணப்பம்."

"என்ன" ஜென்னி கேட்டாள்.

"தயவு செய்து பருமனைக் குறைத்துக் கொள்ளாதே" என்றான் பீட்டர்.

காதல் கல்யாணத்தில் முடிந்தது. ஆனால் திருமணத்தின் பின் ஜென்னியின் எடை 210 இறாத்தலாக குறைந்து விட்டது. கணவன் பீட்டர் கவலைப்பட்டான். அதை அறிந்து ஜென்னி எடையை அதிகரிக்க, விரும்பியதை எல்லாம் மூக்கு முட்ட ஒரு பிடி பிடித்து தன் எடையை 280 இறாத்தலுக்கு கொண்டுவந்துவிட்டாள். ஜென்னிக்கு வயது 27. ஜென்னியின் தற்போதைய அளவுகள் 42-43-48. பீட்டருக்கு பெரும் மகிழ்ச்சி. வண்ண ஆடைகளை அணிந்து வலம் வரும் ஜென்னி உணவுக் கட்டுப்பாடு பற்றி பேசினால் 'மூச்' என்கிறார்.

தூர கிழக்கு நாடுகளுக்கூடாக ஔனி சுற்றுப் பயணம் செய்து, மீண்டும் அமெரிக்கா வந்துசேர 132 நாட்கள் பிடித்தது.

## உலகம் சுற்றிய நாய்க்குட்டி! சென்ற இடமெல்லாம் சிறப்பான வரவேற்பு!!




அப்போதிருந்த சீன அரசரும், ஜப்பானின் சக்கரவர்த்தியும் ஔனிக்கு உலோகத் தகடுகளில், பயணத்துக்கான உத்தரவுகளைப் பொறித்து அதன் உடம்பில் கட்டித் தொங்கவிட்டிருந்தனர். அல்ஜியர்ஸ் மற்றும் அஸோரஸ் நாட்டு அரசாங்கங்களும் ஔனிக்கு சிறப்பு விருதுப் பதக்கங்களை அணிவித்திருந்தன.

ஔனி சுகதேகியாக, 1897ல் அமெரிக்காவை வந்தடைந்தது. இருப்பினும் வயதாகி தளர்ச்சியுற்றுக்காணப்பட்டது. ஒஹையோ மாநிலத்தில் ரொலெடோவி தபால் ஊழியர் ஒருவரை ஔனி கடித்துவிட்டது. இதனால் அந்த அலுவலக ஊழியர்கள் பொலிசாரை அழைத்துவிட்டனர். ஔனியை விட்டு வைத்தால் அது பலரைக் கடித்துக்குதற வேண்டிய நிலை உருவாகும் என்று பொலிசார் எச்சரித்தனர். விளைவு ஔனியின் உயிரைப் பறித்து விட்டார்கள்.

அமெரிக்காவின் பல பாகங்களிலுமுள்ள தபாலகங்களுக்குத் தகவல்கள் பறந்தன. அனுதாபச் செய்திகளும் குவிந்தன. (அடேங்கப்பா)

இறந்து போன ஔனியை இன்றும் தத்ரூபமாகப் பார்க்கலாம். நியூயோர்க்கிலுள்ள சிமித்சோனியன் நிறுவனத்தின் காட்சி அரங்கில் அது நிமிர்ந்து நிற்கிறது. அதற்குக் கிடைத்த விருதுகள் பட்டையங்கள் ஆகிய சகலவற்றையும் தேகத்தில் தாங்கியபடி உயிருடன் இருப்பது போன்ற தோற்றத்தில், உடலைப் பாடம் பண்ணி, என்றும் அழியாச் சின்னமாக வைத்துள்ளனர்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



செல்வா-ரஞ்சனி. படம்- 'அத்தமக ரத்தினமே'



சத்யராஜ்-ரஞ்சனி. படம்-அமைதிப்படை.

## தூள் கிளப்பும் வில்லன்

வித்தியாசமான வில்லனாகப் பெயர் எடுத்தவர் சத்யராஜ்.

கதாநாயகனாக நடிக்கத் தொடங்கியபின் வில்லத்தனங்களுக்கு இடமில்லாமல் போய்விட்டது. என்றாலும் வில்லனாக நடிக்க அவருக்கும் ஆசைதான்.

அமைதிப்படை படத்தில் அந்த ஆசை நிறைவேறுகிறது. வில்லனாக ஆறுவிதமான வேசமாற்றங்களோடு தூள்கிளப்புகிறார்.

அதில் ஒன்று மொட்டைத்தலை சத்யராஜ். மீசையும் கிடையாது.

சத்யராஜ் ரசிகர்களுக்கு அமைதிப்படை திருப்தி கொடுக்கும். விரைவில் திரையிடுவதற்கு வேகமாக படப்பிடிப்பு நடக்கிறது.

சத்யராஜ் ஜோடிகளாக சுஜாதா, ரஞ்சிதா, கஸ்தூரி ஆகியோர் நடிக்கின்றனர். இயக்கம் மணிவண்ணன்.

வோல்டர் வெற்றிவேலுக்குப் பின்னர் அமைதிப்படை சத்யராஜ் படங்களில் பேசப்படும்.

## காதோடு சொல்...

★ தான் எங்கு போனாலு... மொய்க்கிறார்களாம்... அழகுக்கு என்ன கார... பிய்த்தெடுக்கிறார்களாம். ... சொல்லிச் சொல்லிச் ... விசாரித்ததில் மான் ... தெரிந்தது.

★ கா நடிகரும், சுகன்ய நடி... புறப் படப்பிடிப்பில் ... நடந்து கொண்டார்களா... பாடல் காட்சிகளிலும் ... இயக்குநருக்கு மகா சந்...

★ 'கௌ' நடிகை வீட்டில் ... படலம் ஆரம்பம். ஒரு தெ... வலை வீசப்பட்டுள்ளதாக ... பேசிக்கொள்கிறது.

★ இந்தியாவை லவ் ... நாயகி இந்தி திரையுலகில் ... பெயர் போனவர். ... துணிச்சல். தமிழிலும் ... என்கிறார். யார் கலங்கப் போகிறா...

★ தமிழில் நடித்துவரும் ... நடிகைகள் துணி ... மறந்துவிட்டு நடித்த படங்க... நாடுகளுக்கு அனுப்பப்பட... நடிகைகளிடம் கேட்டால் ... இப்பை வைத்து ... என்று சொல்கிறார்கள்.

★ செந்தூரப்பூவே படத்தில் ... நடித்த நடிகை இப்போ... காணவில்லை. துணை ந... சதை வியாபாரம் ... காரணமாம்.

★ சாந்த நடிகை திருமண... விட்டதாக வதந்தி ஒன்... மறுநாளே தீவிர ரசிகர் ... வீட்டுக்குப் போய் அழுத... "திடீரென்று இப்படி பண்ண... என்று அவர் கதறிவிட்டா...

★ விசித்திர மடிப்பு நடிகை... வெளிநாடுகளுக்குப் போய் ... கள் நடத்தி நல்ல வருமான... ராம். நன்றாக சேவை ... காட்டுவதால் வெளிநாடுக... வர ரசிகர்கள் வட்டாரத்... நடிகைக்கு வரவேற்பாம். ...

## அந்த மக ரத்தினம் ரொம்பப் பத்திரம்

இதுதான்டா போலிஸ் புகழ் ராஜசேகரின் தம்பி செல்வா தற்போது நடித்துவரும் படம் 'அத்தமக ரத்தினமே'

செல்வாவோடு கிசு கிசுக்கப்பட்டு வரும் ரஞ்சிதாதான் இதில் ஜோடி.

ஆடு விற்கும் பாண்டியம்மாவாக ரஞ்சிதா நடிக்கிறார்.

கங்கை அமரன் திரைக்கதை அமைத்து பாடல்கள் எழுதி இயக்கி வருகிறார். இசை இளையராஜா. ஒளிப்பதிவு ஏ.சபாபதி.

# சினிவிசிட்

## அசத்தப் போகிறார் ஐஸ்வர்யா

திருமணமான போதும் திரையுலகில் நீடிக்கிறார் ஐஸ்வர்யா. 'பத்ரகாளி மைந்தன்' என்றொரு புதியபடம் பூஜை போடப்பட்டிருக்கிறது.

காடுகளில் ஆடிப் பாடும் நாககன்னி வேசம் ஐஸ்வர்யாவுக்கு. கவர்ச்சிக்கு பஞ்சமில்லாத வேசம். ஐஸ்வர்யாவின் காதலனாக நடிப்பவர் பாண்டியராஜன். மதி ஒளி சண்முகம் கதை வசனம் எழுதி இயக்கப் போகிறார்.

பாண்டியராஜன்-ஐஸ்வர்யா ஜோடி நடித்த "பெறந்தாலும் ஆம்பிளையா பிறக்கக்கூடாது." என்ற படம் இப்போது திரைக்கு வந்திருக்கிறது.

அரங்கம் வந்து ஆடும் அழகுச் சிலையே! யாரைத் தேடியடி கொத்தும் விழியால் வீசுகிறாய் வலை?



ரம்யா கிருஷ்ணன்

## நடிகர்களின் நடன மோகம்

கமலஹாசன், பிரசாந் ஆகியோர் வெளிநாடுகளில் நடனக்காட்சிகளை நடத்தி முடித்துள்ளனர். அதன் பின்னர் வேறு சில நடிகர்களுக்கும் வெளிநாடுகளுக்குப் போய் நடனக் காட்சிகள் நடத்த ஆசை வந்துவிட்டது.

நடனமோக நடிகர்கள் பட்டியலில் ராம்கி, ரகுமான் ஆகியோர் சிறப்பிடம் பிடித்துள்ளனர்.



வண்டிச் சோலை சின்ராசு படத்தில் சத்யராஜ்

## மின்...

★ இதுதான்... பாரதிராஜ... அறிமுகப்ப... போயிவா... படங்களில்... மீண்டும் த... இப்படத்தை...

★ சரத்குமார்... ஹிந்தி நடி... ஆனால் ... மற்றொரு...

★ ரோஜா படத்தில் ... படங்கள் மூலம் பி... இசையமைப்பதற்கு...

★ எம்.ஜி.ஆரை வைத்துப் பல ... மறைவுக்குப் பின்னர் ... தேவர்பிலிம்ஸ் நிறுவனம் ... பேரன் புதிய படமொன்றை...

★ ராஜதுரை படத்தின் மூலம் மீண்டும் வில்... சத்தியராஜ் நடிக்கும் வண்டிச்சோலை சி...

★ பயணங்கள் முடிவதில்லை, வைதேகி காத்... மீது இருப்பதால், படங்களை இயக்குவதை...

★ வள்ளி படத்திற்குப் பின்னர் பிரபுவுக்கு ஜோ... நடிக்க இருக்கிறார்.

★ ஹிந்தித் திரையுலகிலிருந்து வந்து தெலுங்க... தற்போது நடித்து வரும் காதலன் படத்தி...

★ மகளிர் மட்டும், வரவு எட்டணா செலவு பத்... என்று கூறுகிறார்.

★ மறவன் படத்தைத் தயாரித்த ராஜகாளியம்... தெரியவருகிறது.

## தீபாவளிக்கு ரஜனி படம்!

வரப்போகும் தீபாவளிக்கு ரஜனி படங்கள் வெளியாகாது என்று வருத்தப்பட்ட ரசிகர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி.

இந்தியில் ரஜனி நடித்த இரண்டு படங்கள் தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியாக உள்ளன.

ரஜனி தமிழில் புதிய படம் எதிலும் நடிக்காத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியுள்ள தயாரிப்பாளர்கள் படு புத்திசாலிகள்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## சொல்லுகிறோம்





## சின்னக்குஷ்பூ சிவரஞ்சனியிடம் சில கேள்விகள்

மிகவும் குறுகிய காலத்தில் பெரும் புகழும் பெற்று விட்டவர் சிவரஞ்சனி. சென்னையின் புறநகர் பகுதியில் உள்ள தோப்பாக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் நமது சினிமா நிருபர் பி.அருணா சிவரஞ்சனியைச் சந்தித்தார். கேள்விகளுக்கு சரளமாக அவர் தந்த பதில்கள் இதோ:-

**கேள்வி: மிகவும் குறுகிய காலத்தில் புகழ் பெற்று விட்டீர்களே?**

ப: சினிமா என்பது பவர்புல் மீடியா. அதில் புகழ்பெறுவதற்கு அழகு, திறமை மட்டும் இருந்தால் போதாது. அதிஷ்டம் கண்டிப்பாக வேண்டும். அழகு, திறமை அதிஷ்டம் இந்த மூன்றும் இருந்ததால் தான் நான் அவ்வளவு சீக்கிரம் புகழ்பெற்றுவிட்டேன் என்று நினைக்கிறேன்.

**கே: உங்களின் பிளஸ் பாயிண்ட் (பொயிண்ட்) எது மைனஸ் பாயிண்ட் எது?**

ப: இது எனது ரசிகர்களிடம் தான் கேட்க வேண்டும். இருந்தாலும் என்னோட அபிப்பிராயம் என் கண்களாக இருக்கலாம். (சிரிக்கிறார்)

**கே: கல்யாணத்தில் முன் காதல் இதுபற்றிய உங்கள் கருத்தென்ன?**

ப: கல்யாணத்தின் முன் காதல் என்பது இருக்கலாம் ஏன்னா ஒருவரைப் பற்றி மற்றவர் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் மிக அதிகமாக இருக்கிறது. ஆனால் கல்யாணம் பெற்றோர் சம்மதத்துடன் பண்ணிக்கலாம் என்று நினைக்கிறேன்.

**கே: ஒரு திரைப்படத்தில் வரும் கதாபாத்திரத்தைப் பார்த்து அந்த பாத்திரத்தை நான் செய்திருந்தால் நன்றாக செய்திருப்பேன் என்று நினைத்தது உண்டா?**

ப: நான் செய்திருந்தால் நன்றாக செய்திருக்கலாம் என்று எண்ணியது இல்லை; ஆனால் எனக்கு கிடைக்கவில்லை என்று நினைத்ததுண்டு. அது பதினாறு வயதினிலே படத்தில் வரும் மயிலுவின் கதாபாத்திரம். அது என்னை மிகவும் பாதித்துள்ளது.

**கே: சின்னக்குஷ்பு என்று அழைப்பதில் வருத்தப்பட்டதுண்டா?**

ப: இல்லை தமிழில் ஒரு சகாப்தத்தையே உண்டுபண்ணிய அவருடன் என்னை இணைத்துப்பேசுவதில் பெருமைப்படுகிறேன்.

**கே: மிக குறுகிய காலத்தில் கமல் விஜயகாந், பிரபு என்று முன்னணிக் கதாநாயகர்கள்கூட எல்லாம் நடித்து விட்டீர்கள். ஆனால் இவைகளில் உங்களை மிகவும் கவர்ந்த பாத்திரம் எது?**

ப: பொன்விலங்கில் நான் நடித்த பாத்திரம் எனக்கு மிகவும் பிடித்தது அதில பாசமுள்ள தங்கையாக நடித்தேன் எனக்கு அண்ணன் இல்லாத குறைகூட நிறைவேறியது.

**கே: உங்கள் கல்யாணம் எப்படி இருக்கும்?**

ப: இதுபற்றி இன்னும் நினைக்கவே இல்லை இப்போது காதல் எல்லாம் நேரத்தைப் போக்குவது தான். இருந்தும் இன்னும் ஒரு ஐந்து வருடம் போன பின் என்னிடம் இந்தக் கேள்வியைக் கேளுங்கள். நல்ல பதில் சொல்கிறேன் ஓ.கே. என்று அவரது மஞ்சள் கண்களை உயர்த்தினார்.

வளர்ந்து வரும் சாரயில்

நடிகைக்கு தினமுரசு வாசகர்கள் வாழ்த்துக்கூறி விடைபெற்றோம்.

## பிரபுவின் பிரியங்கா

இந்தித் திரையுலகில்
வெற்றிக்கொடி
நாட்டிய திரைப்படம்
டாமினி.
இப்போது டாமினி
தமிழில்
தயாராகிறது.
பிரியங்கா என்று
பெயர்
வைத்துள்ளார்கள்.
பிரபு-ரேவதி ஜோடியாக
நாசர், நிழல்கள் ரவி,
ஜெய்சங்கர்,
டெல்லி கணேஸ்
ஆகியோர் நடிக்கின்றனர்.



## மினி சினி

...ண்டா பொலிஸ் புகழ் ராஜசேகர் பாரதிராஜாவால் தமிழ்த்திரையுலகில் அறிமுகப்படுத்தப்பட்டவர். பின்னர் தமிழில் போதிய வாய்ப்புக்கள் இல்லாததால் தெலுங்குப் படங்களில் நடித்துப் புகழ் பெற்றார். இவர் மீண்டும் தமிழ்ப்படமொன்றில் நடிக்கவுள்ளார். இப்படத்தை பாரதிராஜா இயக்கவுள்ளார்.

...குமார் நடிக்கும் கட்டப்பொம்மன் படத்தில் ...நடிகை பூஜாபேடி நடிப்பதாக இருந்தது. ஆனால் இப்போது பூஜாபேடி நடிக்க வேண்டிய பாடல் காட்சியில் நடித்திருப்பவர் ...ஒரு ஹிந்தி நடிகை பூனம் தான் குப்தா.

...படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகி புதிய முகம், ஜென்டில்மேன் ...மூலம் பிரபலமாகி இருப்பவர் ஏ.ஆர்.ரஹ்மான். அவர் தற்போது ஒரு படத்திற்கு ...8 இலட்சம் சம்பளமாகக் கேட்கிறாராம்.

...படங்களைத் தயாரித்தவர் சாண்டோ சின்னப்பாதேவர். தேவரின் ...தேவர் பிலிம்ஸ் நிறுவனம் கடனில் மூழ்கி இருந்தது. பின்னர் எம்.ஜி.ஆரின் உதவியால் ...நிறுவனம் கடனிலிருந்து மீட்கப்பட்டது. மிக நீண்ட இடைவெளிக்குப் பின் தேவரின் ...படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.

...வில்லனாக நடித்த ஆனந்தராஜ் முன்னணி கதாநாயகர்கள் நடிக்கும் படங்களில் தான் வில்லனாக நடிக்க முடிவு செய்துள்ளார். தற்போது இவர் ...சின்ராசு, மம்முட்டி நடிக்கும் மக்கள் ஆட்சி படங்களில் பிரதான வில்லனாக நடித்து வருகிறார்.

...காத்திருந்தான், ராஜாதி ராஜா போன்ற வெள்ளிவிழாப் படங்களை இயக்கியவர் ஆர். சுந்தர்ராஜன். தற்போது இவருடைய கவனமெல்லாம் நடிப்பின் ...இயக்கத்தை சிறிது காலம் ஒத்திப் போட்டுள்ளார்.

...ஜோடியாக புதிய படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் ப்ரியா ராமன். அதற்கு முன்னர் மலையாளத்தில் ஹரிகரன் இயக்கும் படமொன்றில்...

...தெலுங்கில் முன்னணி நடிகையாக இருப்பவர் நக்மா. இவர் அதிசயப்பிறவி படத்தில் ஷீபா என்ற பெயரில் ரஜினிக்கு ஜோடியாக நடித்தவர். இவர் தமிழில் ...படத்திற்கு ஊதியமாக 25 இலட்சம் வாங்கியுள்ளார்.

...செவலைப்பத்தனா போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்து வரும் நாசர், பெயர் சொல்லக்கூடிய பாத்திரமாக இருப்பின் வில்லன் வேடங்களிலும் நடிப்பேன்...

...ராஜகாளியம்மன் என்டர்பிரைசஸ் நிறுவனம், எஸ்.ஏ. சந்திரசேகர் இயக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளது. கதாநாயகனாக மம்முட்டி நடிப்பார் என்று...

## இமயத்தின் கதை

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பற்றிய தொடர் ஒன்று தமிழ்நாட்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகப் போகிறது.

அந்த மாபெரும் நடிகரைப் பல கோணங்களில் அலசி தொடரைத் தயாரிக்கிறார்கள்.

'சிவாஜி' என்று தொடருக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சிவாஜி தன்னைப் பற்றிச் சொல்லும் சுய விமர்சனமும் தொடரில் இடம்பெறும். அடுத்த வருடம் ஜனவரியில் தொடர் ஒளிபரப்பாகும். 13 வாரங்கள் ஒளிபரப்பப்படவுள்ளது.

## ரகுமானின் கறுப்பு வெள்ளை

இலட்சியவாதிக்கும் சந்தர்ப்பவாதிக்கும் நடுவே வாழும் ஒரு இளைஞனின் வாழ்க்கைப் போராட்டமே "கறுப்பு-வெள்ளை". உழைப்பாளி படத்துக்குப் பிறகு விஜயா நிறுவனம் தயாரித்துள்ளது. மனோபாலா டைரக்‌ஷனில் வெளியாகியுள்ள, திருமணத்துக்குப் பிறகு ரகுமான் நடித்து வெளியாகியுள்ள முதல் படம் இது.

## பிரியாவின் பிடிவாதம்!

"நடிக்கிறது ரொம்ப ஈஸியா இருக்கும்னு நினைச்சேன். கல்லூரி நாடகங்களில் அது ஈஸியா இருந்தது. ஆனால் சினிமாவும் அதே மாதிரி இருக்கும்னு நினைச்சது தப்பாயிடுச்சு! சினிமாவிலே மேக்-அப் போட்டுட்டு நிற்கறதாலே மட்டும் புகழ் அடைய முடியாது! வி ஷுட் டேக் எ ஃபோர்ட்! எப்படியும் ஒரு ரவுண்ட் சினிமாவிலே வாரணும்" என்கிறார்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## பாப்பாமுரசு சிறுகதை

# பார்த்திபனின் விருப்பம்

பால்காரர் பரமசிவம் தன் பிள்ளை பார்த்திபனை நன்றாகப் படிக்க வைக்க விரும்பினார். அதனால் கடன் வாங்கி அந்தக் கிராமத்தில் உள்ள பள்ளியில் அவனைச் சேர்த்தார்.

அது தனியார் பள்ளி என்பதால் சற்று கட்டணம் அதிகம். என்றாலும் பரமசிவம் எப்படியோ சமாளித்து அவனுக்குப் பள்ளிக்கூட காசைக் கட்டி விடுவார்.

படிப்புடன் அப்பாவுக்கு உதவியாகவும் இருப்பான் பார்த்திபன். வாடிக்கையாளர்களின் வீடுகளுக்குப் பால் கொண்டு போய்க் கொடுப்பது அநேகமாகப் பார்த்திபனின் வேலையாகத்தான் இருந்தது.

பாடங்களைப் படிக்க விடாமல் தன்னுடைய அப்பா தனக்கு நிறைய வேலைகளைச் சொல்கிறாரே என்கிற மனக்குறை அவனுக்கு இருந்தது..

பால் கறக்கும் பின்கட்டிற்குப் போகாமல் பாடம் படித்துக்கொண்டிருக்கும்போது அப்பா குரல் கொடுத்தார்.

"பார்த்திபா இங்கே வா."

பார்த்திபன் அங்கே போனபோது அப்பா பாலுடன் சரிசமமாகத் தண்ணீரைக் கலக்கிக் கொண்டிருந்ததைக் கண்ணால் பார்த்துவிட்டான்.

நேர்மையும், நாணயமும் பார்த்திபனின் இயற்கைக் குணமாக அமைந்திருந்ததால் அப்பாவின் அச்செய்கை அவனுக்குப் பிடிக்கவில்லை.

"இந்தா, இந்தப் பாலை பண்ணையார் வீட்டில் கொடுத்து விட்டு போன மாத பால் பணம் கொடுப்பார் வாங்கி வா," என்றார்.

பால் குவளையை கையில் பெற்றுக் கொண்ட பார்த்திபனின் மனம் அந்தப் பாவப்பட்ட பால்மீதே சென்றது.

"அப்பா நீ செய்வது நியாயமா? பாலில் சரிபாதி நீரைக் கலந்து நீரைக் காசாக்குகிறாயே? அப்படியென்றால் என் உடம்பில்ஓடும் இரத்தத்தில் பாதி கள்ள இரத்தமா?" எனக் கேட்க வேண்டும் போல் அவனுக்குத் தோன்றியது.

சிறிய பையனாக இருந்தாலும் அவன் உள்ளத்தில் 'நியாயத்தராசு' நேராக முள்ளை நிமிர்த்திக்கொண்டு நின்றது.

சிந்தித்துச் சென்ற அவன் மீது 'கிரீச்' என்கிற சப்தத்துடன் ஒரு கார் வந்து மோதியது. பால்குவளை தூக்கி எறியப்பட்டுப் பாலெல்லாம் சிந்தியது. அந்தப் பாலோடு பார்த்திபனின் மண்டையிலிருந்து பீறிட்ட இரத்தமும் கலந்தது.

அவன் நினைவற்றுக் கிடந்தான்.

காரை ஓட்டியவர் கீழே இறங்கி வந்து பார்த்திபனைத் தன் காருக்குள் படுக்க வைத்தார். ஓடி வந்து விபத்தைப் பார்க்க வந்த கூட்டம் அவருக்கு உதவியது.

"யாரைய்யா நீ கண் மண் தெரியாமல் கார் ஓட்டி குழந்தை மேல் ஏற்றி விட்டாயே," எனப் பல குரல்கள் அவரைத் திட்ட ஆரம்பித்தன.

காரில் வந்தவர் பணக்காரர். ஈவிரக்கமுள்ளவர்.

"பெரியவர்களே! என்னை மன்னித்து விடுங்கள், நான் இந்தக் கிராமத்திற்கு வந்திருக்கும் புதிய டாக்டர். இச்சிறுவன் ஏதோ சிந்தனையில் வந்தான். பலமுறை 'ஹோண்' அடித்தும், அவன் காதில் ஏறவில்லை. தவறு என்னுடையது மட்டுமல்ல. எதற்கும் பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. குழந்தையைப் பிழைக்க வைப்பதுதான் என் முதல் வேலை இவனுடைய பெற்றோர்களுக்கு தகவல் கொடுத்து ஆஸ்பத்திரிக்கு வரச் சொல்லுங்கள்," என்று பதட்டத்துடன் சொல்லியபடியே காரில் ஏறிக் கொண்டார். உதவிக்கு இருவரை காரில் ஏறும்படி பணித்தார்.

ஆஸ்பத்திரியில் கவலை தோய்ந்த முகத்துடன் பார்த்திபனின் பெற்றோர்களும், உறவினர்களும் வெளியில் அமர்ந்திருந்தனர். அறையிலிருந்து வெளியே வந்த டாக்டர் "பையனுக்கு 'ஓ குறூப்' இரத்தம் தேவைப் படுகிறது. நானும் ஊருக்குப் புதுசு. யாரிடம் அந்த குரூப் இரத்தம் கிடைக்கும் என்பதைத் தெரிந்து அரைமணி நேரத்திற்குள் சொல்ல வேண்டும். இல்லையென்றால் பையன் பிழைப்பது கடினம். ரவுனுக்கு போய்க் கொண்டு வரத் தாமதமாகும். ம், என்ன செய்யலாம்? யாரை கேட்கலாம்? சொல்லுங்கள்," என்று அவசரப் படுத்தினார்.

"அந்த ஊரிலேயே படித்தவர் பண்ணையார் மகன் ஒருவன் தான். அவன் அப்போது லீவில் வந்திருப்பது அனைவருக்கும் தெரியும். பண்ணையாரிடமும் கார் இருப்பதால் அவசரமாகப் போய் டாக்டர் கேட்ட இரத்தத்தை எங்கிருந்தாவது வரவழைக்கலாம்," என்று யோசனை கூறினார் அந்த ஊர் வாத்தியார்.

உடனே டாக்டரிடம் அந்த குறூப் இரத்தத்தின் பெயரை எழுதி வாங்கிக் கொண்டு பால்கார பரமசிவம், பண்ணையார் வீட்டிற்குப் பறந்தார்.

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது என்பார்களே அந்த மாதிரி பண்ணையார் மகனே காரை எடுத்துக் கொண்டு எதிரில் வந்து கொண்டிருந்தார். கை நீட்டிக் காரை நிறுத்திப் பண்ணையார் மகனிடம் நடந்ததைச் சொல்லி டாக்டர் கேட்ட இரத்த குறூப் பெயரைக் காட்டினார்.

உடனே பண்ணையார் மகன், "பால்காரரே வண்டியில் ஏறுங்கள். உங்க பையனுக்கு நானே இரத்தம் கொடுக்கலாம். என் குறூப்பும் இதுதான் வாங்க போகலாம்," என்றார்.

பால்காரருக்குப் போன உயிர் திரும்பி வந்தது.

டாக்டர் அந்தச் சந்தோஷமான செய்தியைச் சொன்னார் "பையன் பிழைத்துக் கொண்டான். இந்தக் கிராமத்திற்கு முதன் முதலில் வந்த போது இப்படி ஒரு விபத்து நடந்து விட்டதே என நானும் பயந்து போனேன். என் முதல் நோயாளியையே பிழைக்கச் செய்து விட்டேன். பையனின் உடம்பிலிருந்து பாதி இரத்தம் வெளியேறி விட்டது. நல்ல வேளை பண்ணையார் மகன் சமயத்தில் உதவினார்," என்றார்.



நினைவு திரும்பிய பார்த்திபன் தனது தந்தையிடம் முதலில் வாய் திறந்து பேசியது; "அப்பா! பாலில் நீரைக் கலக்காதீங்க. அந்தப் பாவம் தான் என் உடம்பிலிருந்து இரத்தமாக வெளியேறியிருக்கிறது."

பரமசிவம் கண்களில் நீர் ததும்ப "சரிடா கண்ணு" என்றார்.

●

## ஆடிடுவோம்

சின்னச் சின்ன சிறுவர் நாம்
சேர்ந்து ஒன்றாய் ஆடிடுவோம்
சின்ன வண்ண பந்துகளை
அடித்து விளையாடிடுவோம்.

●

துள்ளித் துள்ளி ஓடிடுவோம்
குதித்து விளையாடிடுவோம்
கள்ளமிலா நெஞ்சுடனே
ஆனந்தமாய் ஆடிடுவோம்.

●

சோம்பல் நீக்கி ஆடிடுவோம்
பண்ணிசைத்துப் பாடிடுவோம்
விரும்பி எம்மை ஆதரிக்கும்
பெரியோரை மதித்திடுவோம்..


●

ஒற்றுமையாய்க் கூடி நாங்கள்

ஒன்று சேர்ந்து ஆடிடுவோம்
வேற்றுமையை விரட்டிடவே
என்றும் பாடு பட்டிடுவோம்.

முல்லைச் செல்வி ஹஸீனா ஸலீம்
அல்-ஹிரா ம.வி.
கொட்டராமுல்லை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு சிறந்த வர்ணம் தீட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் தீட்டப்பட்ட படம் ஒன்றுக்குப் பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. தபாலட்டையில் படத்தை ஒட்டி அனுப்பவும். அனுப்பவேண்டிய கடைசித்திகதி 06.11993.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 13
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல:10

**பரிசுக்குரியவர்:**
செல்வன் ஜோர்ஜ் பேனாட்.எம்.
புனித சூசையப்பர் கல்லூரி
திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**
எம்.எஸ்.எம்.கைஸ்
மத்திய மகா வித்தியாலயம்,
கிண்ணியா.
ஜே. சலாஹுதீன்
மட்/ அந்நூர் மகா வித்தியாலயம்,
வாழைச்சேனை.
சுவைறா
பாத்திமா முஸ்லிம் வி.-கொழும்பு.
செல்வன் வேல்முருகு ராமு
புனித மிக்கேல் கல்லூரி-
மட்டக்களப்பு.
செல்வி அஞ்சனா இரெங்கசாமி
வ/மகளிர் மகா வித்தியாயலம்
வவுனியா.
நஸ்ரினா பானு சித்தீக்
மட்/ மீராபாலிகா மகா வி.
காத்தான்குடி.
தர்சினி நாகலிங்கம்
புளூமென்டால் ஒழுங்கை,
கொழும்பு-13.

# விடுகதைகளும் விடைகளும்

1. தலைகருப்பு, உடல் வெள்ளை. தொட்டால் சீறும். பாம்பும் அல்ல. அது என்ன?
2. ஆடல் அழகியை கண்டால் உயிரோடு விடமாட்டார்கள். அவள் யார்?
3. நீரிலே பிறந்து நீரிலே அழியும். அது என்ன?
4. பத்து மாட்டுக்கு நெற்றியில் வெள்ளை. அது என்ன?
5. தாகம் தீர குடித்திடுவான். தயக்கமின்றி ஓடிடுவான், தலைவலித்தால் நின்றிடுவான். தள்ளிவிட்டால் புறப்படுவான் அவன் யார்?
6. அழையாத வீட்டில் நுழைவான். அடித்தாலும் போய்விட்டு வருவான். அவன் யார்?
7. என்னை விட சிறியவன். எங்கும் புகழ் பெற்றவன். அவன் யார்?
8. இறக்கை இல்லாத குருவி. இரும்பு மூக்குக் குருவி, இழுத்து இழுத்துச் செல்லும். பஞ்சுவால் குருவி. அது என்ன?

விடைகள்
1. தீக்குச்சி
2. பாம்பு
3. உப்பு
4. கைவிரல்கள், நகம்
5. மோட்டார்
6. காகம்
7. மின்சாரம்
8. ஊசி, நூல்.

ஏ.சீ.எம். முஸம்மில்
வட்டதெனிய.

1. ஊரெல்லாம் சுற்றுவான். ஒரு துளி நீர் அருந்த மாட்டான். அவன் யார்?
2. முத்துக்கல் மண்டபத்தில் முப்பத்ரெண்டு பேர். ஒருவர் பாட இருவர் ஆடுவர். அது எவை?
3. ஆயிரம் கைகள் மறைத்தாலும் மறைய மாட்டான். அவன் யார்?
4. தங்கப் பழம். தின்ன முடியாது. அது என்ன?
5. அச்சு இல்லா சக்கரம். அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
6. ஊர் எல்லாம் மூடிகிடக்கு. ஊறுகாப் பானை திறந்து கிடக்கு. அது என்ன?
7. அள்ள முடியும். கிள்ள முடியாது. அது என்ன?
8. கட்டிக் கிடந்த மகனை விட்டுப் பிரிந்து வந்தேன்? நான் யார்?
9. காட்டில் பிறப்பான். வீட்டில் சாவான். அவன் யார்?
10. சின்னச் சிட்டுக்கு எட்டு முழச் சேலை. அது என்ன?

விடைகள்
1. செருப்பு
2. பற்கள், நாக்கு, உதடுகள்.
3. ஆதவன்
4. தீ பிழம்பு
5. வளையல்
6. கிணறு
7. தண்ணீர்
8. உமி
9. விறகு
10 வெங்காயம்.

செல்வி. சந்திரிக்கா கிருஸ்ணன்
ஸ்ரேஸ் வீதி-கொழும்பு-14.

## இதில் என்ன கை?

1. நெருப்பில் இருக்கும் கை- புகை
2. தலையில் வளரும் கை- சிகை
3. ஆதி மனிதன் வசித்த கை- குகை
4. எதிரியிடம் வளர்க்கும் கை- பகை
5. பெண்கள் அணியும் கை- நகை
6. மயிலிடம் உள்ள கை- தோகை
7. வீரர்கள் சூடும் கை- வாகை
8. தமிழ்ப் பாட்டில் வரும் கை- எதுகை
9. காலில் அணியும் கை- பாதுகை
10. அண்ணனின் அன்புக் கை- தங்கை
11. உதட்டில் தவழும் கை- புன்னகை
12. நாடகத்தில் வரும் கை- ஒத்திகை.


ரா.கீதா ராஜு
எந்தளை-வத்தளை.

## அணுக்கதை

### மாற்றம்

இலேசான காற்று வீசியது.
அந்தப் பாரிய மரத்திலிருந்து பழுத்த இலைகள் உதிர்ந்து கொண்டிருந்தன.
உதிர்ந்து தரையிற் கிடந்த இலைகளைப் பார்த்து மரத்திலிருந்த தளிர்கள் கலகலவெனச் சிரித்தன.
சில நிமிடங்கள் ஓடி மறைந்தன.
இலேசான காற்றின் வேகம் அதிகரித்து சுழன்று வீசியது.
மரத்தின் கிளையொன்று முறிந்து தரையைத் தழுவியது.
தரையிற் கிடந்த கிளையின் தளிர்களைப் பார்த்து பழுத்த இலைகள் சிரித்தன.

ரத்தி
திருகோணமலை.



அவுஸ்திரேலியாவில் உள்ள ஈடென் என்ற இடத்தில் 1898ம் ஆண்டு மே 16ம் திகதி மிகப் பெரிய நிரூற்று கிளம்பியது. அதன் உயரம் 1.528 மீற்றர்.

## படத்தோடு செய்தி பார்

நியூசிலாந்து நாட்டில் மிகப்பெரிய வெட்டுக்கிளிகள் உள்ளன. இவற்றின் கால்கள் 10 செ.மீ. நீளமானவை. கால்களில் முட்கள் இருக்கும்.



அமெரிக்காவில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் 29ம் திகதி டிசவ்ரி பல்கலைக்கழகத்தில் ஒரு கோழி 364 நாட்களில் 371 முட்டைகள் இட்டது. ஆராய்ச்சிப் பிரிவில் இருந்த கோழி அது.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## (தமிழ்) இளைஞ கதறல்

நாங்கள்
தொட்டில்களிலேயே
சிறைக் கூடம்
கண்டதனால்
எம் சிந்தனைகளின்
நிறமும் சிவப்பாகி
போனது!

•

முதன் முதலில்
ரயர் வளையங்களிற்குள்
சிதைந்து போன
முகங்களை கண்டதில்
சிதிலமாகிப் போனது
எம் உணர்வுகள்!

•

எம் தெருவோரம்
குருதி கால்வாயாக
மாறிய போது
அதில் பயணித்து
போனது எம்
பசுமை உணர்வுகள்;
மீதமிருப்பதோ
விரக்தியின் ரணங்கள்!

•

வேதனையின் கரங்கள்
பிழிந்தெடுக்கையிலும்
முறுவலிக்க முயன்று
தோற்றுப்போய்,
துவண்டு விழ்கையிலும்
ஒரு கை முடிபற்றி,
இழுத்தெடுத்து
கேள்வி கேட்கும்
விசாரணை என்று!

•

ஒவ்வொரு நிகழ்வும்
எமக்குள் புகுந்து
எம் மனிதத்தை
வேரறுத்து...வேரறுத்து
இன்று மனிதம்
இன்றிய மானுடர்களாக,
மனித முகம் போர்த்திய
மிருகங்களாக...
நாம்!

•

வேள்வி தொடங்குகிறோம்
என்றவர்கள்
எம்மை கேள்விக்
குறியாக்கியதால்
முற்றுப் புள்ளி
தேடி எம் உயிர்
அலைகிறது.

•

இல்லாமை,
இயலாமை,
கல்லாமை,
என வரிசைப்பட்ட
சுமைகளிற்குள்
அமிழ்ந்துபோய்
மூச்சுவிட
விருப்பின்றி
உயிர்(?)வாழ்கிறோம்.

**அ. றஜீசன்.**

## -காலங்காலமாய்-

என்னவளே!
நினைவுகளைச்
சுமந்து கொண்டு
நீ-வந்திருந்தாயாம்.
வந்திருப்பேன்,
வாசலில்-சத்தியம்
இடறிவிட்டது.
நெஞ்சமே,
கடைசிமுறையாய்
நீ-தந்த
சக்கரைப்
பொங்கலைவிட
உன் வரவு
எனக்கு
இனித்தது.
என்ன செய்வது!
நாம்,
சந்திக்காதிருப்பது
சமூகத்தின்
சம்பிரதாயமல்லவா?
பிரியமே,
இறந்தது
காலங்கள்தான்
கனவுகளல்ல.
நிசப்தமில்லா-உலகில்
நிதர்சனமான
அன்பு இது.
காத்திருப்பதும்
கஷ்டமல்ல.
மீறினால்-நாளை
நானும்,
நீயும்-சந்திக்கலாம்
உன்
குழந்தைகளுடனும்
நம்-கனவுக்
குழந்தைகளுடனும்.

**ஸ்ரீவரணி
வாழைச்சேனை.**

## யுத்தம்

என் தேசமே
தீப்பற்றி எரிகிறது

• •

இந்த யுத்த தீயின்
சிவப்பிற்காய்- பெண்கள்
குங்குமத்தை தந்துவிட்டு
சமாதானத்தை
உடைகளிலாவது
அணிந்து கொண்டனர்.

• •

இத்தீயில்
கூந்தல் பூக்கள்
மரணித்தாலும்
அநாதை மொட்டுகள்
ஜனனிக்கின்றன.

• •

இந்த தீயின்
வெப்பத்திலே-என்
கவிதை கருக்கூட
கருகி கலைகிற...

• •

கண்ணுக்கு குளிரான
நீலவானமே
சற்று விலகி நில்
என் தேசத்தீயின்
வெப்பம் உன்னையும்
சிவப்பாக்கி விடக்கூடும்.

• •

என் தேசமே
தீப்பற்றி எரிகிறது.

**மட்டுநகர் நர்மி.**

சூரியன்
கிழக்கில்
ஜனனம்!
மேற்கில்
மரணம்!
மாணவர்கள்
இன்றைய
விதைகள்!
நாளைய
பயிர்கள்!

**பண்குடாவெளி
ஆ. ரவிசங்கா**



## தேன் கிண்ணம்

**"தெற்குக் காதலிக்கு (மாஜி) வடக்கிலிருந்து......"**

அன்பே!
காசையும் வாங்கி
பெண்ணையும்
வாங்கும் விபச்சாரம்
என்னையும் விடவில்லை
'எயிட்ஸா'கத் தொற்றிக்
கொண்டது...

நான் ஆடிய
ஆட்டத்துக்கெல்லாம்
என் மகன் பழிவாங்குகிறான்!
மாட்டின் லூதர்
ஏபிரகாம் லிங்கன்
புத்தர்
காந்தி
இயேசு
அவனுக்குக் கசப்பான
மருந்துகள்.
ஏ.கே.47உம்
எம். 16உம்
அவனுக்குச் சுப்பிரபாதம்...

உன்னோடு
பயணத்தைத்
தொடர்ந்திருக்கலாம்
விதி...
எனது இனத்தின்
விதி...
இங்கே
நம்பிக்கை தவிர
வேறெதுவும்
கைவசமில்லை
பீனிக்ஸாய்
மாறிவிட்ட ஜீவிதம்...

உன்னை மணந்திருந்தால்
என் பிள்ளை
என்ன மொழி
பேசியிருப்பான்?
சிங்களம்...?
தமிழ்...?
இல்லை
புதிய இனவாத மொழி
மட்டுமே
அவன் பிழைத்துக்கொள்ள
உதவியிருக்கும்.

**-அஸ்வதி-**

## யார் இவள்?

யார் இவள்....?
புன்னகை மறந்த
பூமியின் மைந்தர்களுக்கு
புத்துயிர் ஊட்ட
புதிதாக வந்தவள்?

கண்ணில் நிறையும்
கவர்ச்சியினூடே,
எண்ணில்லாத எழில் சுமந்து
தன்னில் உள்ள
தரமான படைப்பினால்
எவரெஸ்ற் ஏறுபவள்?

இங்கு அழிந்து போன
அமைதியும்
ஆனந்தமும்- உன்னில்
ஆழ்ந்து மீளும் போது,
மீண்டும் பிறக்கின்றதே
அது உனக்கு தெரியுமா?

ஆயுத ஆர்ப்பரிப்பும்,
அநியாய உயிர்ப்பலியும், என்று
மறந்துவிட்ட மனிதாபிமானத்தை
மறைமுகமாய்
அறைந்து சொல்கின்றாய்
அது உனக்கு தெரியுமா?

மனதின் ஓட்டங்களை,
பிரதி எடுக்கின்றாய்.
மறைத்து வைப்பவையை,
மதிப்பிடுகின்றாய்!

நலிந்து போனவர்
நியாயங்களுக்காய்,
நடுவராகிறாய்.
தீர்ப்பின் தாழ்ப்பாளுக்கு
திறப்பு நீட்டுகிறாய்!

இந்த நடப்புக்கள்
தந்து சென்ற
இதய ரணங்களை
இதமாய் வருடுகிறாய்,
இன்பமூட்டுகிறாய்.

ஆயுதங்களும்,
ஆதிக்க வெறியும்,
சாதிக்க முடியாத
சாதனையை,
போதிக்கின்றாய்!

பேனாமுனையால்
நீ
புதிதாக பேசுகிறாய்!
யார் நீ....?

ஓ...
திகட்டும் சுவையுடன்
செந்தமிழ் நயமுடன்,
எம்மை திருட வந்தவளோ,
'தினமுரசு'-இவள்
எந்த சாம்ராஜ்யத்து
பேரரசு?

உண்மையில் நீ ஒரு உலக அதிசயம்!!
சந்தேகமேயில்லை
நீதான் நாளைய
சரித்திர காவியம்!!!

**திருமதி. சாந்தினி சந்திரன்
வத்தளை.**



## அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:**

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஜம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



**இலக்கம்-14**
**சுப்பர் ஸ்டார் சந்திப்பு**
காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................
படத்தின் இயக்குநர் பெயர்:-..............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................
இப்படம் வெளியான ஆண்டு:-..............................

*பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.*

## மனைவி!

மண்ணகத்தில் மனைவியென வந்தாள்!- எனை
மகிழ்ச்சியிலே குளித்திடவே வைத்தாள்!
கண்ணெனவே எனை நன்கு காப்பாள்!- தினம்
கட்டுடலைத் தந்து முகம் வேர்ப்பாள்!

அத்தானே என்று நிதம் அணைப்பாள்!- தன்
அழகிதழால் என்னிதழை நனைப்பாள்!
சொத்தென்று நான் தழுவச் சிரிப்பாள்!- அந்த
சுகமெல்லாம் இராமுழுதும் அளிப்பாள்!

இறைபக்தி கொண்ட அவள் நல்லாள்!-தூய
இல்வாழ்வில் வளம் சேர்க்கும் இல்லாள்!
குறைகாணா இதயத்தைக் கொண்டாள்!- தன்
குடியிருப்பு என் இதயம் என்பாள்!

சுற்றத்தை நன்றாக மதிப்பாள்!- என்
சொல்"வேத வாக்காக துதிப்பாள்?"

கற்றவர் முன் கன்னியமாய் நடப்பாள்!- நாளும்
கைச்சிறையில் குழந்தையென கிடப்பாள்!
அறுசுவைசேர் அடி சில்களைப் படைப்பாள்!- அவள்
அன்பான வார்த்தைகளை விதைப்பாள்!
பொறுமையெனும் ஆழியிலே குளிப்பாள்!- மழலை
பூமுத்தம் அளிக்கையிலே களிப்பாள்!
காதலித்துக் கைப்பிடித்த மங்கை!- காதற்
கணைவீசும் ரதிக்கு அவள் தங்கை!
மோதலில்லா வாழ்க்கைக்குத் துணைவி!-எழில்
"மோகனமென் உளம் கொண்ட மனைவி!"

**அ. கௌரிதாசன்- ஆலங்கேணி.**

## அகதி முகாம்

சிட்டுக்கள் -பாடும்
என்னூரில்
இப்பொழுதெல்லாம் -துப்பாக்கி
வேட்டுக்களின்-சத்தங்களே!

மரண ஓலங்களின்
மௌன கீதங்கள்
இருளை சுமந்திடும்
மனித ரணங்கள்

அருவி-ஒலிகளில்
புலர்ந்திடும் பொழுதுகள்
இரத்தக் களரியில்
மாண்டிடும்-கனவுகள்

நேத்துக் குலுங்கிடும்
நெல் மணிகள்
இன்று காய்ந்து-கிடக்கும்
வயல் வெளிகள்

வசந்தங்கள் -வீசிய
என்னூருக்கு
இப்பொழுது-புதியபெயர்
அகதிமுகாம்.

**ஆர். அருணா
கிண்ணியா.**

## இந்த வாரம் உங்கள் பலன்

**(31.10.93 முதல் 06.11.93 வரை)**

**சோதிட மாமணி 'தில்லை'**

### நவக்கிரக சஞ்சாரம்

துலாம் - சூரியன், செவ்வாய், புதன், வியாழன்
விருட்சிகம் - இராகு
மகரம் - சனி
இடபம் - கேது
கன்னி - வெள்ளி

01.11.93ல் மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் சந்திரன் சஞ்சாரம்.

### மீனம்:

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்கலக்கம், பணக்கஷ்டம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, மனஆறுதல். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, பணவரவு. | காலை 9 மணி |
| புதன்- | பொருள் நஷ்டம், வீண் பிரயாசம். | காலை 11 மணி |
| வியாழன்- | புதிய முயற்ச்சி, செலவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | உயர்ச்சி, வெற்றிவாகை. | காலை 10 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், மனக்கலக்கம். | காலை 11 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்- 5

### மேடம்:

(அச்சுவினி, ப்ரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தன இலாபம், இனசனக் கொண்டாட்டம். | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, பணச் செலவு. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, தூரஇடப்பயணம். | காலை 9 மணி |
| புதன்- | திடீர் பிரயாணம், செலவு மிகுதி. | காலை 11 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, மனக்கவலை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | செல்வாக்கு மேன்மை, மகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| சனி- | கடன் பயம், காரியக்கேடு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 2

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ச்சி, தொழில் சிறப்பு. | காலை 9 மணி |
| திங்கள்- | வீண் முயற்ச்சி, அதிகார மேன்மை. | காலை 11 மணி |
| செவ்வாய்- | பணவரவு, புகழ் கீர்த்தி. | காலை 8 மணி |
| புதன்- | எடுத்த காரியத்தடை, செலவு அதிகம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | உறவினர் தொல்லை, பிரயாசமிகுதி. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | கருமங்களில் வெற்றி, வீண் தாமதம். | பி.ப 1 மணி |
| சனி- | கடன் தீர்தல், காரியசித்தி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 11 மணி |
| திங்கள்- | பயணம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வீண் பிரயாசம், கருமங்களில் தடை. | காலை 10 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, மனஆறுதல். | பி.ப 3 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், கீர்த்தி. | காலை 10 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, பணவரவு. | காலை 9 மணி |
| சனி- | மனமகிழ்வு, உறவினர் சேர்க்கை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, தீமை விலகல். | பி.ப 2 மணி |
| திங்கள்- | தனஇலாபம், குடும்ப சுகம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | அதிகார விருத்தி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப 1 மணி |
| புதன்- | வாக்குக்கலகம், பயணம். | காலை 11 மணி |
| வியாழன்- | முன்னேற்றம், வீண் அலைச்சல். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், புதிய முயற்ச்சி. | காலை 11 மணி |
| சனி- | பயணத்தில் வெற்றி, உயர்ச்சி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் சகவாசம், காரியானுகூலம். | பி.ப 1 மணி |
| திங்கள- | மறைமுக எதிர்ப்பு, தொழில் பிரச்சனை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | பணவரவு, கவலைகள் மறைதல். | காலை 11 மணி |
| புதன்- | பூமியால் இலாபம், புதிய முயற்சி. | பி.ப 2 மணி |
| வியாழன்- | பெரியோர் சகவாசம், மனமகிழ்ச்சி. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | செல்வாக்கு அதிகம், அதிகாரவிருத்தி. | காலை 9 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன்படல். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்- 1

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் தொல்லை, வீண் சஞ்சலம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, பெண்களால் கலக்கம். | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | தனலாபம், காரிய வெற்றி. | பி.ப 4 மணி |
| புதன்- | பணக்கஷ்டம், வீண் பழி கேட்டல். | காலை 11 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மனமகிழ்வு. | காலை 10 மணி |
| வெள்ளி- | மனக்கவலை, பிள்ளைகளால் தொல்லை. | பி.ப 1 மணி |
| சனி- | எடுத்தகாரியம் வெற்றி, மகிழ்ச்சி. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்- சனி, அதிஷ்ட இலக்கம் - 8

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | நடைக்கஷ்டம், வீண் பிரயாசம். | காலை 8 மணி |
| திங்கள்- | துயர் அதிகம், திடீர் சுகயீனம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | நீடித்த கவலை நீங்கல், மகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| புதன்- | அந்நியரால் உதவி, பணவரவு. | காலை 9 மணி |
| வியாழன்- | உயர்ச்சி, எதிர்ப்பு நீங்கல். | காலை 11 மணி |
| வெள்ளி- | மனமகிழ்வு, காரியானுகூலம். | பி.ப 3 மணி |
| சனி- | பெரியோர் சகவாசம், உதவி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்- 5

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, வீண் தொல்லை நீங்கல். | காலை 7 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, உயர்ச்சி. | காலை 11 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, தனலாபம். | பி.ப 1 மணி |
| புதன்- | வீண் அலைச்சல், காரியத்தடை. | பி.ப 2 மணி |
| வியாழன்- | உயர்ந்த நிலை, அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| வெள்ளி- | கல்வி மேன்மை, வெளியிடப்பயணம். | பி.ப 2 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் - 9

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், தாரசுகம். | காலை 11 மணி |
| திங்கள்- | வீண் முயற்ச்சி, பண விரயம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | நடைக்கஷ்டம், துயர் அதிகம். | பி.ப 3 மணி |
| புதன்- | எண்ணிய காரியம் வெற்றி, மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| வியாழன்- | செல்வச் சிறப்பு, பிறர்உதவி. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | தெய்வ அனுகூலம், பெரியோர் நட்பு. | பி.ப 7 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், துயர் நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 2

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | எடுத்த கருமம் வெற்றி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மனமகிழவு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | மறைமுக எதிர்ப்பு, காரியசித்தி. | பி.ப 4 மணி |
| புதன்- | பணக்கஷ்டம், வீண் முயற்சி. | காலை 10 மணி |
| வியாழன்- | உயர்ச்சி, பெரியோர் நட்பு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | அதிகார விருத்தி, மன மகிழ்வு. | பி.ப 1 மணி |
| சனி- | துயர் நீங்கும், நீடித்த மகிழ்ச்சி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் கலக்கம், பொருள் தடை. | காலை 6 மணி |
| திங்கள்- | தனஇலாபம், உயர்ந்தோர் நட்பு. | காலை 11 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, அதிகார சித்தி. | பி.ப 2 மணி |
| புதன்- | எடுத்த காரியத்தடை, வீண் பிரயாசம். | பி.ப 4 மணி |
| வியாழன்- | பணவரவு, காரிய மேன்மை. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | கௌரவம், புகழ். | காலை 9 மணி |
| சனி- | துயர் நீங்கும், பொருள் மேன்மை. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மறைந்து கிடந்த மருத்துவ சாதனை! குரங்கின் இருதயத்தோடு இன்றும் வாழும் மனிதன்!!




ரஷ்யாவில் உள்ள மிருகக் காட்சிச் சாலைக்கு ஒரு அவசர அழைப்பு.

"நல்ல நிலையில் உள்ள, தேக ஆரோக்கியம் அட்டகாசமாக இருக்கக்கூடிய குரங்கொன்றை உடனே அனுப்புக."

"எங்கே அனுப்ப வேண்டும்?"

"ரஷ்ய மருத்துவமனைக்கு!"

"என்ன மருத்துவமனைக்கா? ஏதாவது ஆராய்ச்சி செய்யப் போகிறார்களா?"

"இல்லையப்பா இல்லை. இருதய நோயாளி ஒருவர் இறக்கும் நிலையில் இருக்கிறார். உயிரைக்காக்க குரங்கு தேவை. அதுவும் உடனே தேவை."

"குரங்கு என்ன செய்யமுடியும்?"

"குரங்கு எதுவும் செய்யாது. குரங்கின் இருதயம் செய்யும். ஆம், குரங்கின் இருதயத்தை அந்த மனிதனுக்குப் பொருத்தப் போகிறோம்."

கேட்டவர்கள் வியந்தார்கள். நம்மூர் சந்தேகப் பேர்வழிகள் சிலர் போல பொய்தானே என்று சிரித்தார்கள்.

விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது. விந்தைகளுக்கும் பஞ்சமில்லை.

ரஷ்ய மருத்துவமனையில் வைத்து இறக்கும் நிலையில் இருந்த துறைமுகத் தொழிலாளிக்கு குரங்கின் இதயம் பொருத்தப்பட்டது.

இதய சிகிச்சை நிபுணரான பிரிட்டனைச் சேர்ந்த டாக்டர் ஜெரால்ட் ஹின்ரன், இத்தகவல் இப்பொழுதுதான் வெளியுலகுக்குத் தெரிய வந்திருப்பதாகத் தெரிவிக்கிறார்.

ரஷ்யா கொம்யூனிசத்தை நழுவ விடுவதற்கு முன்னர் திரை மறைவில் நடைபெற்ற பல சம்பவங்களைப் போல், இதுவும் மூடி மறைக்கப்பட்டிருந்தது. இதனை ஒரு ஒழுக்கமற்ற செயல் என்று சுட்டிக்காட்டிப் பிரசாரம் செய்யப்படும் என்பதனால் இந்த அபூர்வ சாதனை உலகின் கண்களுக்கு மறைக்கப்பட்டது. அத்துடன் உலகளாவிய மிருக- கருணைச் சங்கங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தவும் முற்பட்டிருக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக அலெக்சாண்டர் சக தொழிலாளர்களினதும் ஏனை யோரினதும் பழிப்புக்கும், இகழ்ச்சிக்கும் ஆளாகியிருக்கக்கூடும் என்றும் நிபுணர்கள் கருதியமையினால் இதனை மிக அந்தரங்கமாகவே வைத்திருந்தனர்.

14 வருடங்களுக்கு முன்னர் மனிதக் குரங்கின் இருதயத்தைப் பெற்ற அலெக்சாண்டர் இன்று 47 வயதுடையவராக- நல்ல



சுகதேகியாகவிருக்கிறார். துறைமுகத் தொழிலாளி என்பதனால் பாரங்களைத் தூக்க வேண்டிய பல சந்தர்ப்பங்கள் அவருக்குண்டு. இன்று எத்தகைய தாக்கமு மில்லாமல் தன் தொழிலை அவர் சர்வ சாதாரணமாகச் செய்து வருகிறார்.

தன்னைப் போல் உலகின் பல பாகங் களிலும் இருதய நோயினால் துடிக்கும் பலர் இதே போன்று குரங்கின் இருதயங் களால் பயன்பெறலாம் என்பதற்காகவே, இந்த இரகசியம் வெளியாவதை தான் ஆட்சேபிக்கவில்லை என்கிறார் அலெக்சாண்டர்.

ரஷ்ய மருத்துவர்களும் தாங்கள் குரங்கு இருதய மாற்று சிகிச்சைக்குப் பயன்படுத்திய முறைகளை இன்று உலக மருத்துவ நிபுணர்களுடன் பகிர்ந்து கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள், என்று டாக்டர் ஜெரால்ட் ஹின்ரன் கூறுகிறார்.

## சாம்பிராணிப் புகையால் தீங்கு வருமா?



சாம்பிராணியில் சல்பர் இருப்பதால் உடலுக்குக் கெடுதல் என்று சமீபத்தில் ஒரு மருத்துவ ஆய்வு தெரிவித்தது. இந்த ஆய்வு சரியானதா என்று தென்னிந்திய பிரபல சித்த, ஆயுர்வேத யுனானி மருத்துவர் ஒருவர் கூறியது

நிச்சயமாகச் சாம்பிராணிப் புகை கெடுதல் தராது. சுத்தமான சாம்பிராணியில் சல்பர் சேர்ப்பது கிடையாது. அப்படியே சேர்த்தாலும், சாம்பிராணியில் உள்ள மற்ற வாசனைப் பொருட்களால் சல்பரின் தீமை அழிந்து விடும். சாம்பிராணிப் புகை மிக மிக உயர்வானது. இதனை "தெய்வீகப் புகை" என்று சித்தர்களும் கூறி இருக்கிறார்கள். அப்படி சாம்பிராணியில் மனித உட்லுக்குக் கெடுதல் தருபவை இருந்திருந்தால் தெய்வ வழிபாட்டில் சித்தர்கள் அதனைச் சேர்த்தே இருக்க மாட்டார்கள். குறிப்பாக எண்ணெய் தேய்த்துக்குளித்த பின் பெண்கள் கூந்தலை சாம்பிராணிப் புகை போட்டு உலர வைக்கத் தவறுவதில்லை. அதனால் எந்தப் பெண்ணிற்கும் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டதில்லை. சாம்பிராணியில் மருத்துவ குணங்கள் நிறைய இருக்கிறது. தடிமன், தலைவலியை சாம்பிராணிப் புகை தீர்த்து வைக்கிறது. சிறு குழந்தைகளுக்குக்கூட குளித்ததும், சாம்பிராணிப்புகை போடுவது வழக்கம். ஆஸ்பத்திரிகள் முதல் அலுவலகங்கள் வரை காற்றில் உள்ள கிருமிகள் அகல, சாம்பிராணிப் புகை போடுகிறார்கள். சாம்பிராணி நுளம்புகளையும் இல்லாமற் செய்கிறது. சித்த மருத்துவ முறையில் சாம்பிராணியோடு நல்லெண்ணை, கஸ்தூரி மஞ்சள் போன்றவற்றைச் சேர்த்து முறைப்படி செய்து சாம்பிராணி தைலம் தயாரித்து நாள்பட்ட தலைவலியைத் தீர்த்து வைக்கிறார்கள். எந்தப் பொருளிலும் கலப்படம் வந்துவிட்ட இந்தக் காலத்தில் சாம்பிராணியிலும் கலப்படம் செய்து விற்கிறார்கள். அதுதான் கெடுதலை உண்டாக்கும். தூய சாம்பிராணி என்றும் எந்தக் கெடுதலும் செய்யாது.

## வயோதிபர்களுக்கு வசதியான யோசனைகள்

*விபத்துக்களைத் தடுக்க:*

1. பாதையைக் கடக்கும் போது, கவனமாகக் கடந்து செல்லுங்கள். உங்களுக்கு சரியான உடல் பலமும் இல்லை. உறுப்புக்களும் உங்கள் இஷ்டத்திற்கு இப்பொழுது இயங்க மாட்டாது. இவைகள் நடுரோட்டில் உங்களை அனாதையாக விட்டுவிடலாம். எனவே கவனமாக நடவுங்கள். வழியில் மேடு பள்ளம் உள்ளதா என்பதைக் கவனிக்கத் தவறாதீர்கள்.
2. ஏணி, உயரமான நாற்காலி, மேசை ஆகியவற்றில் ஏறுவதைத் தவிர்த்தல் நலம்.

*உடல் பருமனைக் குறைக்க:*

1. உடல் பருமனால் விபத்துக்கள் ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு.
2. நீரிழிவு, உயர்ரத்த அழுத்தம், முட்டுவலி போன்றவை உடல் பருமனால் ஏற்பட வாய்ப்பு உண்டு.
3. அதிகமான உடல் பருமன் ஆயுளுக்கு எதிரி.

*நாள்தோறும் செய்ய வேண்டியது:*

மதியம் சாப்பிட்டவுடன் சிறிது நேரம் தூங்குங்கள்.

*திட்டமிடுதல்:*

1. உங்கள் நாட்களைத் திட்டமிடுங்கள்.

2. உங்கள் வாரம், மாதம், ஆண்டு இவைகளைத் திட்டமிடுங்கள். அடுத்த பத்தாண்டுகளில் நீங்கள் சாதிக்க விரும்புவதையும் திட்டமிடுங்கள்.

6. மற்றவர்களிடமிருந்து பெறுவதை விட மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற பழக்கத்தைக் கைக்கொள்ளுங்கள்.




## தேன் தரும் சுகங்கள்



புதிதாகத் திருமணமான இளம் தம்பதிகள் தேன்நிலவுக்குப் போய் வந்தார்கள் என்கிறார்கள். புதுமணத் தம்பதிகளின் வாழ்க்கை தேனைப் போல இனிப்பாகவும், நிலவைப் போல குளிர்ச்சி யாகவும் இருக்க வேண்டும் என்பதற் காகத்தான் தேன் நிலவு என்கிறார்கள்.

ஒருவர் இனிக்கப் பேசினால் "பார்த்தாயா, என்னமாதிரி தேன் மாதிரி பேசுகிறான்" என்கிறார்கள்.

ஆக, தேன் என்பது மிகவும் இனிப்பான பொருள் என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. ஆனால் நம்மவர்கள் தேன் உடம்புக்குச் சூடு. அது தலையில் பட்டால் உடனே தலைமுடி நரைத்துவிடும் என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்தத் தேனில் பல அரிய மருத்துவக் குணங்கள் உள்ளன என்பதைத் தெரிந்து கொள்ளும் போது நம் மனம் தேனைப் போலவே இனித்துத்தான் போகிறது.

கொம்புத் தேனாக இருந்தாலும் சரி, மலைத் தேனாக இருந்தாலும் சரி, தேன் எளிதில் ஜீரணமாகி நம் ரத்தத்துடன் கலந்து விடக்கூடிய தன்மைகொண்டது.

மே, ஜூன் போன்ற கடுமையான கோடை மாதங்களில் உடல் அதிகமாக வியர்த்துக் களைப்பு ஏற்படுகிறது. அப்போது எலுமிச்சம்பழச் சாற்றுடன் மூன்று கரண்டி தேனைக் கலந்து ஒரு சிட்டிகை உப்பையும் சேர்த்துக் குடித்தால் உடலுக்குப் புத்துணர்ச்சியும் தெம்பும் நொடியில் வந்துவிடும்.

காலையில் எழுந்ததும் காலைக்கடனை எளிதாக முடிக்க முடியாமல் திணறுப வர்கள் வெந்நீரில் கொஞ்சம் தேனைக் கலந்து பருகினால் மலச்சிக்கலிலிருந்து விடுபட்டுக் கொள்ளலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—18



# கண்ணே மதுமிதா

ரசிகன் எழுதுவது

எதிரே குரோட்டன் செடிகளுக்குள் யாரோ அசைவது தெரிய குலாம்ஷா உஷாரானார்.

கண் இமைக்கும் நேரத்துக்குள் குலாம்ஷாவின் கரம் இருந்த ஏ.கே.47 உயர்ந்தது. குரோட்டன் செடி மறைவு நோக்கி தோட்டாக்களைப் பொழிந்தது.

குரோட்டன் செடி மறைவுக்குள் தீனமாய், அலறலாய் இரு குரல்கள் எழுந்தமை கேட்டது.

குலாம்ஷா சுடுவதை நிறுத்தி- பின் மீண்டும் ஒரு முறை தோட்டாக்களை பொழிய வைத்தார்.

ரம்யா குரோட்டன் செடி மறைவு நோக்கி ஓடினாள். ஓடும்போது கரத்தில் கத்தியையும் தயாராக எடுத்து வைத்தபடி ஓடினாள்.

"ரம்யா- கவனம்" என்று குலாம்ஷா உரத்துச் சொன்னார். குரலில் அக்கறை அப்பட்டமாகத் தெரிந்தது. இனிய உயிர் ஒன்றை இழந்துவிடக்கூடாது என்ற தீவிர கரிசனம் தெரிந்தது.

ரம்யா குரோட்டன் செடி விலக்கிப் பார்த்தாள். பின் குனிந்தாள்.

இரத்த வெள்ளத்தில் இருவர் கிடந்தனர். நூறுவீதம் உறுதியான சாவு.

நாய்களை முன்னே அனுப்பிவிட்டு தொடர்ந்து வந்தவர்களாக இருக்க வேண்டும்.

ரம்யாவுக்கு ஆட்களைத் - தெரியும். ஒருவன் ஜேம்ஸ். மற்றது கபூர். சாக வேண்டியவர்கள்தான்.

குரோட்டன் செடிகளுக்குள் இருந்து விலகி வெளியே வந்தாள்.

"என்ன, போய் விட்டார்களா உரிய இடத்திற்கு?" ஷா கேட்டார்.

"படு நிச்சயமாக" என்றாள் ரம்யா. இருவரிடமும் இருந்து எடுத்த அடையாள அட்டைகளை ஷாவிடம் நீட்டினாள்.

வாங்கி, ஒரு முறை பார்த்துவிட்டு பத்திரப்படுத்திக் கொண்டார் ஷா.

ரம்யா விரைந்து உயரமாய், கறுப்பு அரக்கன் போல நிமிர்ந்து நின்ற வாயில் கேற்றின் பக்கம் சென்றாள். பிரமாண்ட மான கேற்றின் வயிற்றில் ஒரு சிறிய கதவு இருந்தது. வாகனங்கள் வரும்போது மட்டுமே கேற் விலகும். ஆட்கள் சென்று வர சிறிய கதவு போதும்.

ரம்யா சிறிய கதவின் தாழ் விலக்கினாள். குலாம்ஷாவைத் திரும்பிப் பார்த்தாள். குலாம்ஷா போகலாம் என்று தலையசைத்தார். கதவின் வயிற்றால் ரம்யா வெளியே இறங்கினாள். குலாம்ஷா அவள் பின்னால் இறங்கினார்.

வெளியே பரந்த வெளி தெரிந்தது. இந்த வெளி தாண்டித் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டிருக்க முடியாது. வெளியைச் சுற்றி ஒரு ஆள் உயரத்திற்கு மதில் கட்டப்பட்டிருந்தது.

"தாண்டினால் பிரதான தெரு வரும். குயிக்" என்றாள் ரம்யா. முன்னே ஓடினாள் ரம்யா. ஓடினார் குலாம்ஷா.

■

எதிரே மஞ்சள் கோட்டில் மாணவிகள் கடந்து கொண்டிருக்க படு வேகத்தில் வந்த பியட் இடித்துவிடுவது போல நெருங்கி பிறேக் அடித்து நின்றது.

மாணவிகள் கோபமாய் பார்த்துவிட்டு தமக்குள் ஏதோ சொல்லிச் சிரித்தபடி நடந்தார்கள்.

"பார்வையை பாரடா? காரோடு எரித்து விடுவார்கள் கண்ணகிகள்."

லால், பி.எம்.லால் சொல்லிச் சிரித்தான். ஒரு மாணவியைப் பார்த்து கையசைத்துச் சிரித்தான். அவள் போடா என்பதுபோல தலையால் பாவனை காட்டினாள்.

மாணவிகள் மஞ்சள் கோடு கடந்தார்கள். ஆறு நிமிடம் கரைந்தது.

"எந்த நேரம் பார்த்து குறுக்கே வந்தார்கள் பார். கரடிகள்"

சாரதி ஆசனத்தில் இருந்தவன் வெறுப்போடு சொல்லி மீண்டும் பியட்டுக்கு உணர்ச்சி ஊட்டினான்.

"கரடிகள் என்று சொல்லாதே முட்டாள்" லால் சொல்ல, ஏன் என்பதுபோல திருப்பிப் பார்வையால் கேட்டான்.

"நாம் என்ன தினமும் கரடிகளோடு தான் கூத்தடிக்கிறோமோ?"

சாரதி ஆசனத்தில் இருந்தவன் தெருவில் பார்வையை அழுத்தியபடியே சிரித்தான். காரே சிரித்தது. லால் மணிக்கட்டைத் திரும்பி மணிக்கூட்டில் நேரம் பார்த்தான்.

"இன்னும் மூன்று நிமிடங்களில் தளத்துக்குச் சென்றுவிடலாம். இன்னும் கொஞ்சம் அமுக்கு."

அக்ஸிலேட்டரில் காலால் அமுக்கினான். பியட் இசைந்து கொடுத்து உச்ச வேகம் காட்டியது.

■



பரந்த வெளியை ஓடிக் கடக்க 2 நிமிடங்கள் பறந்தன.

ஏ.கே.47ஐ தோளில் மாட்டினார் குலாம்ஷா. ஒரே தாவாய் சுவரில் தொற்றி மறுபுறம் குதித்தார் குலாம்ஷா. ரம்யாவும் அவர் பின்னால் குதித்தாள்.

பிரதான தெரு பரபரப்பாக இருந்தது. வாகனங்கள் தெருவின் மேலே ஊர்ந்து கொண்டிருந்தன. ஏ.கே.47 தோளில் இருக்க, நின்றிருந்த குலாம்ஷாவை வாகனங்களுக்குள் இருந்து அச்சம் கலந்த வியப்பான பார்வைகள் மேலும் கீழும் தடவினார்கள்.

ஒட்டோ ஒன்றை கைநீட்டி மறித்தாள் ரம்யா. சவாரி கிடைத்த சந்தோசத்தில் மலர்ந்த சாரதியின் முகம், குலாம்ஷாவின் தோற்றம் பார்த்து மறுநொடி சுருங்கியது. திடீரென்று வேகம் எடுத்து விலகிப் பறந்தது.

"சே. மடையன்"

"ஏன் ரம்யா அவனைப் பேசுகிறாய். நாட்டு நிலமை அப்படி." என்று சொல்லி எதிரே வந்த கார் பார்த்து ரோட்டின் குறுக்கே போய் நின்று கை காட்டி மறித்தார் குலாம்ஷா. அதிர்ந்து போய் நின்றது அந்த கறுப்புக் கார். நிசான் சன்னிக்கார்.

சாரதியின் பக்கமான கதவு நெருங்கி தனது அடையாள அட்டையை எடுத்து நீட்டினார் குலாம்ஷா.

காருக்குள் சாரதி ஆசனத்தில் இருந்தது ஒரு பெண். உள்ளே வேறு யாரும் இல்லை.

அழகாக இருந்தாள். உதட்டிலே நிறைய சாயம் பூசி, புருவங்களுக்கு அதிக பட்சமாய் மைதீட்டி.... அழகு காட்ட அதிக நேரத்தை சாப்பிட்டுவிட்டு வந்திருப்பாள் போல இருந்தாள். கன்னங்கள் இரண்டும் கொழு கொழு என்றிருந்தன, அப்பிள் பழம்போல.

ரோஸ் நிற கிறீம் ஏதாவது தடவியிருக்க வேண்டும். இந்த அதிக பட்ச ஒப்பனைகள் இல்லாவிட்டால் இன்னும் ஒரு முப்பது சதவீதம் அழகாக இருப்பாள் போல் தெரிந்தாள். எதுவும் அளவோடு இருந்தால்தான் சிறப்பு.

பயத்தில் உறைந்து போய் இருந்தவள் அடையாள அட்டையைப் பார்த்ததும் நிம்மதியாய் பெருமூச்சு விட்டாள். மார்புகள் உயர்ந்து இறங்கின.

"மேடம் எங்கள் இருவருக்கும் உங்கள் உதவி தேவை."

குலாம்ஷா சொன்னார்.

என்ன உதவி என்பதுபோல முகம் திருப்பி மை தீட்டிய புருவம் உயர்த்தி பார்வையால் கேட்டாள்.

"எங்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் இறக்கி விட்டால் போதும். பொலிஸ்துறையே உங்களுக்கு நன்றி சொல்லும்."

பின்னால் வந்து நின்ற வாகனங்கள் ஹோன் அடித்து அவசரம் காட்டின. சிலர் தலையை வெளியே நீட்டி குலாம்ஷாவை அதிர்ச்சியோடு பார்த்தார்கள்.

"நல்லது. உதவுவதில் மகிழ்ச்சி. ஏறுங்கள்."

குரலில் இனிமை வழிந்தது.

பின் கதவு திறந்து ஏறினார். ரம்யாவும் ஏறினாள். நிசான் சன்னி வேகம் எடுத்தது.

■

வாகன நெரிசலுக்குள் சிக்கி, நெரிசல் விலக சீறிவந்த வெள்ளை பியட் மூச்சை நிறுத்தியது. கதவு திறந்து லால் குதித்தான். காற்சட்டைப் பையில் திறப்பு எடுத்து கேற் திறந்து, மறுபடி வந்து காருக்குள் அமர பியட் மீண்டும் உயிர்பெற்று உள்ளே பறந்தது.

பிரதான வாசல் கேற் அருகே பியட் சென்று ஓய, லால் குதித்து இறங்கினான். பின் ஆசனத்தில் இருந்த மூவரும் ஆயுதம் நீட்டியபடி ஒரு மோதலை எதிர்பார்த்து தயாராய் குதித்தார்கள்.

சின்னக் கதவு திறந்திருக்க லால் சந்தேகம் கொண்டான். வேகத்தை குறைத்து பூனைபோல் நடந்து உள்ளே தலை நீட்டிப் பார்த்தவன் அதிர்ந்து போனான். தலையிலே அடித்தபடி உள்ளே ஓடினான்.

தரையிலே கிடந்த உடல்கள் குலாம்ஷா தப்பிவிட்டதை தடங்கல் இன்றி அறிவித்துக்கொண்டிருந்தன.

■

இன்பராஜின் கரத்தில் இருந்த பிஸ்டல் கண்டதில் நீட்டா பாம்பு கண்டதுபோல பயந்தாள்.

தொலைபேசியில் பேசியது காதில் விழுந்து அதனால் முந்திக்கொள்ள நினைக்கிறானோ என்று நினைத்தாள்.

இன்பராஜ் நீட்டிய பிஸ்டலை மடக்கி, சட்டை விலக்கி இடுப்பிலே செருகியபடி கேட்டான்.

"யார் நீட்டா போனில்?"

இன்னும் பயம் விலகாத நீட்டா வறண்டுபோன நாவை ஈரப்படுத்திக் கொண்டு "யாரோ ஒரு இடியட்" என்று சொன்னாள்.

சொன்னபோது குரல் திக்கியது.

இன்பராஜ் நிதானமாய் நடந்து வந்தான். நீட்டாவின் முகத்தை கரத்தில் தாங்கினான்.

"நீ பயந்திருக்கிறாய். என்ன சொன்னான்?"

என்று கேட்டு நீட்டாவின் கண்களை உற்று நோக்கினான்.

உண்மையைச் செல்லிவிடலாமா என்று நீட்டா நினைத்தாள். வேண்டாம். இன்பராஜ் போனால் இன்னும் நூறு இன்பராஜ் கிடைக்கலாம். ஆனால் இப்போதுள்ள வசதிகள் போய்விட்டால், அதற்கும் மேலாக உயிரே போய்விட்டால்..... வேண்டாம். உண்மை உதவாது. பொய்தான் பயன்தரும்."

"என்ன நீட்டா யோசிக்கிறாய்?"

கேட்டபடியே அவளை தன்னோடு சேர்த்து இறுக அணைத்தான். மார்புச் சேலை விலக நிமிர்ந்து நின்ற அழகுகள் நிலை குலையவைத்தன. இன்பராஜின் மார்பில் பதிந்தன. இன்பராஜின் உள்ளே ஆசைப்புறா சிறகடித்து கிளர்ந்தது.

"நீட்டா... ஏன் பயப்படுகிறாய்?"

என்று கேட்டகுரலில் இன்பராஜின் பலவீனம் முத்திரை குத்தப்பட்டிருந்தது.

நீட்டா நிம்மதியானாள். துணிந்து பொய் சொன்னாள்.

"வைத்தியைப் பற்றிக் கேட்டான். எனக்கும், வைத்திக்கும் உள்ள தொடர்பு எப்படிப்பட்டது என்று தனக்குத் தெரியும் என்று சொன்னான். பின்னர் தொடர்பு கொள்வதாகச் சொன்னான்."

"குரலை வைத்து யார் என்று அடையாளம் தெரிகிறதா நீட்டா?"

"இல்லை. புதிய குரல்."

"என்ன எதிர்பார்க்கிறான். நோக்கம் தெரிந்ததா நீட்?"

"இல்லை ராஜ். மீண்டும் தொடர்பு கொள்வான் என்றுதான் நினைக்கிறேன்."

"வைத்திக்கு இது தெரிய வேண்டாம் நீட்டா. அவன் உசாராகிவிட்டால் நமது திட்டங்களும் மட்டம் ஆகிவிடும்."

தான் நினைத்ததையே அவன் சொன்னதால் நீட்டா மகிழ்ந்தாள்.

"பிரச்சனையாகிவிடுமா ராஜ்? எனக்கு நடுக்கமாக இருக்கிறது."

சொல்லியபடியே இன்பராஜின் முதுகை கரத்தால் இறுக்கினாள்.

"பார்க்கலாம். அவன் யாரென்று முதலில் பார்க்கலாம். அதற்கு முன்"

"முன்" மயக்கமாய் கேட்டாள்.

"உன்னைப் பார்க்க வேண்டும். முழுமையாகப் பார்க்க வேண்டும். அதற்கு இந்தத் தடைகள் வேண்டாம்."

சொல்லியபடியே அவன் கரம் நீட்டாவின் மார்பிலே பதிந்து, பின் சட்டையை விலக்குவதில் தீவிரமாய் முயன்றது.

நீட்டா விட்டுக்கொடுத்தபடி மனதிலே ஒரு திட்டம் வகுத்தாள்.

விபரீதமான திட்டம்.

■

வைத்திலிங்கத்தின் காற்சட்டைப் பொக்கற்றில் இருந்து பறந்து வந்து விழுந்த துண்டுக் காகிதம் டைப் செய்யப்பட்ட எழுத்துக்களை அணிந்திருந்தது.

நான்கு வரிகளில் ஒரு செய்தி இருந்தது.

செய்தியைப் படித்த இன்ஸ்பெக்டர் அரவிந் திகைத்தார்.

துண்டுக் காகிதம் பறந்தது தெரியாமல் வைத்திலிங்கம் டி.ஐ.ஜி டென்சிலுடன் பேசிக்கொண்டே நடந்து வீட்டின் முன் ஹோலுக்குள் புகுந்தார்.

"மதுமிதா.....டியர்"

குரல் கொடுத்தார். பதில் வரவில்லை.

"மதுமிதா உள்ளே அறையில் இருக்கிறாள் மிஸ்டர் வைத்தி"

சொல்லிக்கொண்டே மதுமிதா இருந்த அறைக்கு முன் நின்று- 'மதுமிதா' என்று குரல் கொடுத்து எட்டிப் பார்த்தார் டி.ஐ.ஜி டென்சில்.

பதில் இல்லை.

மதுமிதா இருந்த கட்டில் காலியாக இருந்தது.

உற்றுப் பார்த்ததில் பாரம் வைக்கப்பட்ட கடிதம் ஒன்று மின்விசிறியின் காற்றுப்பட்டு படபடத்துக் கொண்டிருந்தது.

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ச. கருணா
வயது: 23
முகவரி: SEEFELD. STR. 40
8008. ZURICH, SWITZER LAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: பீ. யசோதா.
வயது: 23
முகவரி: இல.45, கந்தசாமி கோயிலடி வீதி, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், கதைகள் எழுதுதல்.



பெயர்: ஏ.யூ.எல். கலாம்.
முகவரி: P.O.BOX- 224
GIZAN, K.S.A.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம் வாசிப்பது, தொலைக்காட்சி பார்த்தல், நண்பர்களுடன் அரட்டையடித்தல், புகைப்படங்கள் எடுத்தல்.



பெயர்: எம்.ஐ.எம். மௌபூல்
வயது: 29
முகவரி: இல.98/3, ராஸிக் மரிக்கார் மாவத்தை, பேருவளை.
பொழுதுபோக்கு: கிரிக்கெட் விளையாடுதல், நாவல்கள் படித்தல்.

பெயர்: எஸ். சந்திரசேகர்
முகவரி: SPEICHER STR.19, 9000 ST. GALLEM, SWITZERLAND (CH)
பொழுதுபோக்கு: கவிதை எழுதுதல், பலதரப்பட்ட சமூக மக்களுடன் தொடர்பு வைத்தல்.

பெயர்: ஏ.எல்.எம். அஷ்ரப்
வயது: 15
முகவரி: 91, ஆதம் போடியார் ஒழுங்கை, காத்தான்குடி.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். நந்தினி
முகவரி: 126, மட்டக்களப்பு வீதி, கல்முனை-01
பொழுதுபோக்கு: பட்மின்டன் விளையாடுதல், பத்திரிகை வாசித்தல்

பெயர்: எம்.ஐ. பரீஸா
வயது: 14
முகவரி: ஹமீதியா மு.வி. கும்பலங்கை, இப்பாகமுவ.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், முத்திரை சேகரித்தல்.

இளமை - புதுமை - இனிமை
காதல் - திரில் - திகைப்பூட்டும் திருப்பங்கள்!
ரசிகன் வழங்கும்
கொல்லாமல் சாகாதே
வெற்றிகரமான 25வது வெற்றிவிழா முரசோடு
இலவச இணைப்பு
உங்கள் பிரதிகளுக்கு முன்கூட்டியே உங்கள் முகவர்களிடம் பதிவு செய்யுங்கள்!

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# புன்னகைக்கு அர்த்தம் காதல் அல்ல....!

-கோட்டைமுனை "முத்துமணி"-

ஏராளமான அழகுகளோடு அவள்! காணாமல்போன பார்வைகளோடு அவன்! அவள் சிரித்தாள்! கூடவே முகம் முழுக்கப் பூக்கள்!

அவன் சிந்தித்தான்....கூடவே வழக்கம் போல கவிதை வந்தது.

"நீ சிரித்தாலே இந்த அழகு.
நீ கதைத்தால் என்ன அழகு?".....

வரிகளை மனசுக்குள் எழுதினான்.

அவன் நினைத்துப்பார்த்தான்.... அவனது நினைவுப்பறவை சிறகை விரித்தது....

ஆம்! கரங்களில் புத்தகக்கட்டுக்களோடு; வழக்கமாக தனது தோழிகள் சகிதம், நட்சத்திரங்களுக்குள் ஜொலிக்கும் வெள்ளை நிலாவாக அவள்.

ஒரு நாள்- ஒரு எதேச்சையாக, இல்லை அவனுடைய அதிஷ்டவசமாக அவள் கடைக்கு வந்தாள்.

பார்த்தாள், பிடித்தது. எடுத்தாள்; பார்சல்பண்ணச் சொன்னாள். வெள்ளைக் காரி மாதிரி பணத்தை எடுத்தவிதம்....... டீஸன்ட்டாக சிரித்துக்கதைத்த விதம்!... போகும் போது முகம் முழுக்கப் பூக்களை வைத்து சிரித்துவிட்டுப் போன விதம்....

ஓ! அந்த பேரழகு ரதம்...... அன்றிலிருந்து அவன் மனம்... அவள்தம் அழகில், காணாமல் போனவன் போனவன் தான்!....

• • •

அவள் வழக்கம்போல், தோழிகள் சூழ உலாவந்துக்கொண்டிருந்தாள். அவள்தம் வசந்தவரவில் வீதிகூட வசீகரமடைந்துகொண்டிருந்தது! விசேஷ மான, அந்த அழகுமிகுந்த வித்தியாசமான நடையை ரசித்தான்...

"நீ நடக்கும் நிலா.
தேன் சுரக்கும் பலா
நான் ரசிக்கும் உரு
பண் வடிக்கும் கரு"

மகா மகிழ்ச்சியில் கவிதை படித்தான். கூடவே சந்தோஷித்தான். அவள் திரும்பி வரும்போது தோழிகள் காணாமல் போயிருந்தார்கள். தனித்த நிலவாக, அழகு மயிலாக ஒரு ஒயிலோடு அவள் வந்து கொண்டிருந்தாள்.

ஏராளமான மகிழ்ச்சிகளோடும்... ஆவலோடும் ஏற்கனவே அவள் தரிசனத்திற்காக அவன் நேரம் பார்த்துக் காத்திருந்தான்.

வழக்கம் போல கடைப்பக்கம் பார்த்தவள், அவனைப் பார்த்து... புன்னகைத்து.... பூக்களைப் பூத்துவிட்டுப் போனாள்.

அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது.

'இன்றைக்கு எப்படியாவது கதைக்க வேண்டும். மௌனராகம் பாடியது போதும். அதைப்பற்றிக் கேட்கவேண்டும்' தீர்மானித்தான். மறுவினாடி வேறு எதைப் பற்றியும் சிந்திப்பதற்கு சிந்தை இருக்க வில்லை.

முன்னாடி சென்று தூரமாகிக் கொண்டிருந்தவளை, பின்னாடி சென்று பின் தொடர்ந்தான்.

அந்த சந்தியில் வைத்து அந்த சுந்தரியை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

வந்த வாய்ப்பை நழுவவிடாமல் அவன் வேகமாக முன்னேறினான்.

"மண்ணில் இந்தக் காதலன்றி-
யாரும் வாழ்தல் கூடுமோ?"

அவனது அபிமானப் பாடகரின் தேன்குரலில் அந்த ஜங்ஷன் ஹோட்டல் களைகட்டிக்கொண்டிருந்தது.

தன் முன்னம் திடீரென்று எதிர்ப் பட்டவனை, அவள் வினாக்குறிகளோடு நிமிர்ந்து நோக்கினாள்!

அவள் மெல்லச் சிரித்தாள். அவன் நல்லாகவே சிரித்தான்.

கூடவே கதைத்தான்.

"மிஸ் எங்க போறீங்க?... புன்னகைத்த வண்ணம் கேட்டான்.

"வீட்டுக்குப் போறன்" அவள் குயிலாய் கூவினாள்.

"கிளாஸுக்குப் போனீங்க போல?" தொடர்ந்தான்.

"ஓம்" அவள் இரண்டெழுத்துக்களோடு கச்சிதமாய் நிறுத்தினாள்.

"ம்" -அவன் இழுத்தான்.

அவள் ஆச்சர்யம் கலக்கப் பார்த்தாள்.

"இந்த......வந்து....வந்து" அவன் மீண்டும் இழுத்தான்.

அவள் விழிகள், அவன் மீது வினாக்கணைகளைத் தொடுத்தன.

"உங்கட்ட,... நான் ஒண்டு கேப்பன். கோவிச்சுக்கொள்ள மாட்டீங்களே?"

தயக்கத்தோடு தொடர்ந்தான்.

"என்ன விஷயம்"? விழிகளால் வினாத் தொடுத்த வண்ணம் அமைதி கலந்த சிரிப்போடு நிமிர்ந்தாள்.

"இந்த...இந்த"- அவன் சிறிது நேரம் தலைகுனிந்தான்.

"மிஸ் நீங்க யாரையாவது விரும்பு றீங்களா"?

பளீரென்று கேட்டான்.

அவளுக்கோ சுளீரென்றிருந்தது. கூடவே அதிகமாய் அதிர்ந்தாள்.

எதிர்பார்க்காத அந்தக் கேள்வியால் அவள் தடுமாறிப் போனாள்.

கொஞ்சம் சமாளித்தாள், பின்னர் தன்னை சுதாகரித்தவண்ணம்

"அப்படி ஒண்டும் இல்லை." மோனாலிசாவாய் தலைகுனிந்தாள்.

"அப்ப.....அப்ப" -தயங்கித் தயங்கி இழுத்தான்.

"அப்படி எண்டா என்ன விரும்பு வீங்களா"? திடீரென்று கேட்டான்.

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவள் எதிர்ப்பார்ப்புகள் அதை எதிர்பார்க்கவேயில்லை.

அவளுக்கு 'என்ன சொல்வது? எப்படிச் சொல்வது?' என்று தெரியாமல் கொஞ்சம் தடுமாறினாள்.

ஒரு கணம்தான்; வேகமாய்ச் சொன்னாள்.

"ம்....நாளைக்குச் சொல்றனே."

அதில் சிரிப்பும் இருக்கவில்லை, கோபமும் இருக்கவில்லை.

அதில் அவனுக்கு கொஞ்சம் திருப்தி கரமாக இருந்தது.

"ம், வாறன் மிஸ்" அவன் நெஞ்சம் நிறைந்த நன்றிகளோடு அவளிடமிருந்து விடை பெற்றான்.

• • •

அன்றிரவு, அவனுக்குத் தூக்கம் போர்க்கொடி காட்டிக்கொண்டிருந்தது. நெடுநேரம் விழித்திருந்தான்.....

மனமோ கடும் சஞ்சலத்தில் ஆழ்ந் திருந்தது.

'என்ன சொல்லுவாள்? ஏது சொல்லுவாள் எப்படிச் சொல்லுவாள்-' சந்தேகத்தோடு சிந்தித்தான்.

'காதல் கவிதை எழுதுவோமா இல்லை, சோகக் கவிதை எழுதுவோமா?' கவிதைச் சிந்தனையில் மூழ்க நினைத்தான்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அவனுக்கு எதுவுமே எழுதவரவில்லை.

அடுத்த நாள் விடியலை அவன் வெகு ஆவலோடும் ஆசையோடும் எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

அதோ அவள். அவள் அவளேதான்.

வழக்கம் போல் அந்த வீதியால் வந்துகொண்டிருந்தாள்....

அவன் மனமோ குளிரால் நனைந்து கொண்டிருந்தது.

கடைக்கு அண்மித்தாக வந்தும் முல்லைப் பற்களைக் காட்டாமல் ஒரு புன்னகையைப் பூத்தாள்...

ஆம்... அவனை அவள்மீது பைத்திய மாக்க காரணமாகவிருந்த அதே புன்னகை.

புன்னகையை உதிர்த்தவண்ணம் திடீரென்று அவனை நெருங்கினாள். அவள் செய்கையை அவன் எதிர்பார்க்க வேயில்லை.

ஆம். வந்த வேகத்தில், அவன் கையில் அதைத் திணித்தாள்.

"இந்தாங்க! இத பிறகு ஆறுதலாப் படிச்சுப் பாருங்க. போயிட்டு வாறன்". முகத்தில் பூக்களைப் பூத்தவண்ணம் ஒரு எழிலாய் மனதை சரிக்கும் வண்ணம், தலையை சரித்துவிட்டுப் போனாள்.

அவன் கையை விரித்தான். வெள்ளைக் கவர் ஒன்று வெட்கமில்லாமல் சிரித்துக் கொண்டிருந்தது.



வீதிப்பக்கம் கொஞ்சம் நோட்டமிட்டான். ஜேம்ஸ் பொண்ட் கண்களோடு யாராவது தன்னை நோக்குகிறார்களா என்று பார்த்தான். அப்படி யாரும் தன்னை அவதானித்ததாகத் தெரியவில்லை. வாசலி லிருந்தவன், கடைக்குள்ளே போனான். திருப்திப்பட்ட மனதோடு கடிதத்தை எடுத்தான். பிரித்தான். ஒரு பரபரப்போடு படிக்கத் தொடங்கினான்.

மணி மணியான எழுத்துக்களில், மிக அழகாக எழுதப்பட்டிருந்தது அக்கடிதம். அவன் ஆரம்பித்தான்.

**அன்புடன் எழுதிக்கொள்வது!**

**அன்று நீங்கள் என்னைச் சந்தித் தீர்கள். உங்களது எண்ணம் பற்றி என்னுடைய விருப்பத்தைக் கேட்டி ருந்தீர்கள். அதற்கு என்னால் அந்நேரம் உடன் பதில் அளிக்க முடியவில்லை. மன்னிக்கவும்.**

**அன்று நீங்கள் என்னிடம் கேட்ட விஷயத்தை நன்றாக சிந்தித்துப் பார்த்தேன். எனது தீர்க்கமான நியாயமான முடிவை கடிதமாக உங்கள் முன்வைக்கிறேன்.**

**நான் மூன்றாம் முறை A/L எடுப்பதற்காக பதுளையிலிருக்கும் எங்கட ரிலேஷன்ஸ் வீட்ல தங்கியிருந்து கிளாஸ் போகிறேன்.**

**என்னுடைய நோக்கம், நான் இங்கு வந்திருப்பது, படிப்பதற்காக. நன்றாகப் படித்து நல்ல முறையில் சித்தி பெற வேண்டுமென்பதற்காக என்னுடைய பெற்றோர்களின் நோக்கமும் கூட, நான் படித்து, பாஸ் பண்ணி, கெம்பஸ் போய், நல்ல ஜொப் ஒன்று எடுத்து சீரும் சிறப்புமாக இருக்க வேண்டுமென்பதே.**

**எனது பெற்றோர்களின் ஆசைகளை நான் நிராசையாக்கவும் விரும்பவில்லை. எனது காலத்தையும், நேரத்தையும் நான் அநியாயமாக செலவழித்து வீணடிக்கவும் விரும்பவில்லை. எனது நோக்கமும் படிக்கவேண்டும், நன்றாக பாஸ்பண்ண வேண்டும் என்பதே.**

**எனக்குக் கிடைத்த பொன்னான சந்தர்ப்பத்தை நழுவ விடவும், மற்றது எனது பெற்றோர்களின் நம்பிக்கைக்கு, மாறு செய்வதற்கும் எனது மனம் இடம் கொடுக்கவில்லை.**

**ஆம். காரணம், அந்தளவுக்கு நல்லதோர் நம்பிக்கையை என் பெற்றோர்கள் என்மீது வைத்திருக் கிறார்கள். நான் சின்ன வயதிலிருந்தே பெற்றோர் சொற்படி பணிந்து நடப்பவள். அவர்களின் கட்டளைகளுக்கு எதிர்ப்பாக நடக்காதவள்.**

**ஆனால் அதேசமயம் என் விருப்பத்தை அவர்கள் நிறைவேற்றாமல் இருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட உத்தமர்களுக்கு நான் மாற்றமாக நடப்பதற்கு என் மனம் ஒருபோதும் நாடவில்லை.**

**அதனால் இப்போதைக்கு இந்த விஷயத்தில் என்னால் முழுமையாக ஈடுபட முடியாமைக்கு வருந்துகிறேன். நான் சொல்வது- சொல்லவருவது, தற்போது உங்களுக்கு தீர்க்கமாகப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். நம்புகிறேன்.**

**வேண்டுமானால் நாம் எப்போதும் போல அன்பு நண்பர்களாக இருப்போம். சந்திப்போம். கதைப்போம். இதில் எனக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை.**

**ஆனால் நீங்கள் கேட்ட விஷயத்தில் மட்டும் என்னால் மிகுதமாக ஈடுபாடு காட்ட முடியவில்லை. அதற்கு சந்தர்ப்பமும் இல்லை. நேரமும் இல்லை. ஆதலால் இது விஷயத்தில் என்னை மன்னிக்கவும்.**

**என் கடிதத்தில் ஏதும் பிழைகள், தவறுகள் இருந்தால் தயவு செய்து மன்னிக்கவும்.**

**வேறு விசேடமில்லை. இத்துடன் இம்மடலை முடிக்கிறேன். நன்றி.**

அழகாக கையெழுத்திட்டு, முடிக்கப் பட்டிருந்தது அக்கடிதம்.

கடிதத்தை படித்துக்கொண்டிருக்கும் போது அவனது கைவிரல்கள் வேகமாக டைப் அடித்துக் கொண்டிருந்தன. அதைவிட அதிகமாக, அவனது இதயம் வெகுவேகமாக படபடத்துக்கொண்டி ருந்தது.

மூச்சுவிடாமல் கடிதத்தைப் படித்தவன் பெருமூச்செறிந்தான். அவனது முகத்தில் முத்துக்களாய் வியர்வைத் துளிகள். அதை தனது கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான்.

அவன் அதிகபட்சமாக ஆச்சர்யப் பட்டான். "அட அந்த அழகு முகத்தாளிடம், அமைதிகலந்த எளிமையான குணத்தாளிடம் இத்தனை சிந்தனைச் சுரங்கமா?"- அவன் இப்படிக் கடிதம் எழுதப்படும் என்பதை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

அவளை நினைந்து நெஞ்சம் நிமிர்ந்தான். கூடவே பெரிதும் பெருமைப் பட்டான்.

தனது தவறுக்காக, பிழைக்காக அவளிடம் போய் மன்னிப்புக் கேட்பதற்கு தீர்மானித்தான்.

"ஒரு பெண்பிள்ளை பார்த்து புன்னகைத்தால்.... சிரித்தால்... அதை வேறு விதமாக -வித்தியாசமாக நினைத்தது எவ்வளவு பெரிய மடத்தனம்." தன்னைத் தானே நொந்து கொண்டான். தனக்குத் தானே வருத்தப்பட்டுக்கொண்டான். கூடவே, வேதனைப்பட்டுக்கொண்டான்.

"இனிமேல் யாரையும் பார்த்து தானாகச் சிரிப்பதில்லை, அப்படி யாராவது அவனைப் பார்த்துச் சிரித்தால் அதை வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்ப்பதுமில்லை. கட்டாயமாக முடி வெடுத்தான்.

அடுத்தநாள் அந்தி, அவளை அவன் சந்தித்துக் கதைத்த அதே சந்தி.

"மிஸ். என்ன... மன்னிச்சுக் கொள்ளுங்க. தெரிஞ்சோ, தெரியாமலோ தவறு செய்திட்டன். பிழையா நினைச் சிட்டன். உங்கள இனி டிஸ்டேர்ப் பண்ணமாட்டன். சொரி மிஸ்."

அவனது குரலில் அமைதியும், பணிவும் கலந்திருந்தன.

"பரவாயில்லை இதெல்லாம் நீங்களும் பெரிசா எடுக்காதீங்க. இதுக்காக் கவலைப் படாதீங்க. இத நானும் பெரிசா நினைக்கல்ல. பொதுவாக யாருக்கும் இப்படி ஏற்படுறது சகஜம்தானே?"

"போயிட்டு வாறன்" அதே புன்னகை யோடு அவனிடமிருந்து விடைபெற்று போய்க் கொண்டிருந்தாள் அவள்.

அவளுடைய அந்தப் பேச்சில், மூச்சுப் பேச்சின்றி அட்டகாசமாக அதிர்ந்து கொண்டிருந்தான். அவன்.

(நிழல்+நிஜம்) ●

# 'ஷெல்'லரித்த நினைவுகள்!

-எம். சுரேஷ்-

...அதனால் பலதடவை பொலிசாரிடம் தர்ம அடிவாங்கியதை மறுக்கமுடியுமா?



இந்த சூட்சும உலகின் சில நிகழ்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தேவையற்ற யுத்தம், தேவையற்ற குருதிக் குளியல்.... பிரச்சனைகளோடு சம்பந்தப்பட்ட வர்கள் பிரச்சனை தொடர்பாக நேரத்திற்குநேரம் விடும் முரண்பட்ட அறிக்கைகள் விசனத்தை மூட்டின, அதிலும் சிலர் இடைக்கிடை "இங்கு பிரச்சனையே இல்லை" எனக் கூறுவது கிட்டத்தட்ட கெட்ட வார்த்தை போலத்தான்.

கிழிந்த ஓலைப்பாயில் அண்ணாந்து படுத்திருந்த நான் திரும்பிப் படுக்கிறேன். இரண்டு தினங்களாக தொடர்ந்து பெய்த மழையினால் சுவரிலும் ஈரலிப்புத் தன்மை. எறும்புகளின் இருப்பிடங்களுக்குள் நீர் நிறைந்திருக்க வேண்டும். மீட்பு நடவடிக்கையில் கறுத்த எறும்புகளும், சிகப்பு எறும்புகளும் ஒன்றாகத்தான் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. வரிசை வரிசையாய் வாயில் எதையோ கவ்விக் கொண்டு சடுதியாய் இருப்பிடத்தை மாற்றும் முயற்சி.... அங்கே தான் எத்தனை ஒற்றுமை!

யுத்தத்தில் ஈடுபடும் தரப்பினரைவிட, யுத்த காலத்தில் சாதாரண வாழ்க்கை வாழமுயலும் பொதுமக்கள்தான் ரொம்பப் பாவம் செய்தவர்கள்! அவர்களுக்கும் விட்டில் பூச்சிகளுக்கும் எனக்கு வித்தியாசம் தெரியவில்லை. மரண பயத்தோடு பாடசாலை செல்வதும், பிரசவசாலைக்குச் செல்வதும் எத்தனை கொடுமையானது... இங்கே தொண்டைக்குள் இறங்கும் உணவுகூட சந்தேகத்தோடுதான் இறங்குகிறது!

இந்தப் பிரச்சனை இலகுவில் தீரப் போவதில்லை. ஆனாலும் எனக்கு இதில் ஒரு மேலதிக ஆர்வம். போராட்டத்தில் பலர் ஈடுபட்ட போதும் நான் ஒதுங்கிக் கொண்டேன். ஆயுதம், யுத்தம், கொலை.... இவற்றில் எனக்கு நம்பிக்கையில்லை. காந்தீயத்தை மிகவும் நேசித்தேன். நேர்மையாய் சிந்தித்தேன். அதனால் பல தடவை பொலிசாரிடம் தர்ம அடிவாங்கியதை மறுக்க முடியுமா? இருப்பினும் காந்தீயத்தின் மீது எனக்கு மதிப்புக் குறையவில்லை ஆனால் நம்பிக்கைதான்.....

இப்போது (ஏனோ தெரியவில்லை) கறுத்த எறும்புகளும், சிகப்பு எறும்புகளும் வேறு வேறாகப் பிரிந்து சென்று•கொண்டிருந்தன.... பிரிவு தெரிந்தது. குரோதம் தெரியவில்லை. இருப்பினும் அங்கே திரிந்த ஒரு சில கட்டெறும்புகளின் நடவடிக்கை எனக்குப் புதிராய் இருந்தது. அதில் நல்ல நடத்தைகளும் தீய நடத்தைகளும் உள்ளடங்கியிருந்தன. நான் தீய நடத்தைகளை சுட்டிக்காட்ட விரும்பவில்லை. காரணம் அது கட்டெறும்புகளுக்குப் பிடித் திருந்தது. நல்ல நடத்தைகளை புகழவும் விரும்பவில்லை காரணம் அது கட்டெறும்பு களுக்கும் பிடித்திருந்தது!

அரிப்பெடுத்த பரட்டைத் தலையை சொறிந்த படியே திரும்பிப் படுக்கிறேன். இந்தத் தலையை பரட்டையாக வைத்திருப்பதிலும் ஒரு நன்மை இருக்கிறது.... அதாவது அடிக்கடி சொறிவதன் மூலம் நமக்கும் ஒரு தலை இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளலாமல்லவா?

பக்கத்து வீட்டு வானொலியில் பக்கத்து நாட்டு பூகம்பம் பற்றிய செய்தி. 34 ஆயிரம்பேர் சாவாம். அங்கே அது படுபயங்கர சோகம். ஆனால் அதுவே இங்கு நடந்திருந்தால் எவ்வளவு சந்தோஷமாய் இருந்திருக்கும்!..... இந்தப் பிரச்சனையை யாருமே தீர்க்கப் போவதில்லை. ஆதலால் இப்படியொரு பெரிய பூகம்பம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டு முற்று முழுதாக யாழ்ப்பாணம் அழிந்துபோனால் எவ்வளவு நிம்மதியாய் இருக்கும்! அதே போல் இருந்த இடம் தெரியாமல் எல்லா நகரமும் அழிந்து போனால் எத்தனை மகிழ்ச்சியாய் இருக்கும். அதே போல் ஒரு பெரிய பூகம்பத்தால் இந்த முழுத்தீவும் சிதறி கடலுக்குள் மூழ்கிப் போனால் எத்தனை பேரானந்தமாக இருக்கும்! ..... ஆனால் இது நடக்குமா?..... "அமைதி வரும்" என நம்பிக்கை வைத்திருப்பதைவிட, "பூகம்பம் வரும்" என நம்பிக்கை வைத்துக் காத்திருப்பது நடைமுறை சாத்தியம்தானே?

இந்தக் கட்டெறும்புகளின் புத்தி ஏன்தான் இப்படிப் போனதோ தெரியவில்லை. நான் கவனயீனமாய் இருந்த போது அல்லது அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த போது, சந்தடியின்று பாய்க்குள் ஊடுருவிய நாலைந்து எறும்புகள் தாறுமாறாய் காலிலும், தொடையிலும் கடித்து விட்டு ஓட, நான் பதறிப்போய் படுத்துக்கொண்டே நோட்டமிடுகிறேன். எறும்புகள் வெகுதூரத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. நான் சடுதியாக எழுந்து நின்று பார்க்கிறேன். ஆகாய மார்க்கமாகப் பார்க்கும் போது அவை இன்னும் என் கால்களுக்குள் மிதிபடும் தூரத்தில்தான்.... இருப்பினும் மிதிக்கவில்லை! அவை தரையில் ஓடும்போது நான் ஆகாய மார்க்கமாய் தாக்குவது கோழைத்தனமல்லவா? அதுவுமல்லாது அந்த குறிப்பிட்ட எறும்புகளை மிதித்தால் நிச்சயம் என்னைக் கடிக்காத எறும்புகளும் மிதிபடும் எனத் தெரிந்து கொண்டும் மிதிப்பதற்கு நான் என்ன மிதிப்பவர்களைப் போல் பேடியா? அல்லது முட்டாளா?

எறும்புப் புற்றில் மனிதர் வாழமுடியா தென்பது உங்களுக்கும் தெரியும். ஆகவே அந்த எறும்புகளின் இருப்பிடத்தை கைப்பற்றவோ, அல்லது அழிக்கவோ நான் முயலவில்லை! நான் நிம்மதியாய் இருக்கவேண்டும். என் நித்திரையை யாரும் குழப்பக்கூடாது... எனக்கு அதுதான் வேண்டும்.

இன்னும் தபால்காரன் வரவில்லை. வல்வையிலிருந்து வனிதையின் மடல் கண்டால்தான் எனக்கு நிம்மதி. காத்திருக்கிறேன்- சென்ற இரு மாதங்களைப் போல்!...,.உயிரை கையில் வைத்துக்கொண்டு உடலைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று எழுதும் அவளின் மடலுக்குப் பதிலாய் ஒரு தந்தி!..... இரு மாதங்களுக்கு முன்பு விழுந்த "ஷெல்" அவளுக்குள் இருந்த என் உயிரை.....

கறுத்த எறும்புகளும், சிகப்பு எறும்புகளும் ஏதேச்சையாக பாதையில் சந்தித்து ஏதோ பேசிக்கொள்கிறதே தவிர, நிரந்தரமாய் இணையும் அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

சோகம்தான்.... எனக்குப் பலவிசயங்கள் புரிவது போல் இருந்தாலும் புரியவில்லை! பல சந்தர்ப்பங்களில் பிரச்சனைகளை நன்கு விளங்கிக் கொண்டதைப்போல் நடித்ததால் ஏனையவர் களுக்கு பிரச்சனைகளைப் புரிய வைக்க நான் முயலவில்லை. இருப்பினும் எனக்கு அதில் அதிக பட்ச நாட்டம்!

"ஷெல்"லரித்த நினைவுகளைத் தவிர ஒன்றுமே இல்லை..... இனியும் எதற்காகக் காத்திருப்பது? ஒன்றில் பூகம்பத்தைப் பற்றிப் பேசவேண்டும். அல்லது கட்டெறும்புகளைப் பற்றியாவது சிந்திக்க வேண்டும். அதைத்தவிர ஆக்க பூர்வமான யோசனைகள் ஏதாவது இருந்தால் உடனே தெரிவித்துவிடுங்கள். நான் மறுப்பறிக்கை விட உதவியாக இருக்கும்!!

நன்றி.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# மன்னிப்பாயா என்னை மனமிரங்கி?

-முகில்வண்ணன்-




"சிறி இந்தப் பக்கமா வந்திட்டுப் போ" என்றாள்.

வெளிக்களப் பரிசோதகர் சிவம் என்னும் பரமசிவம். அவருடன் இரண்டு நாட்களாக வெளியூர் பரிசோதனைகளுக்கு சென்றுவிட்டு வந்திருந்தான் சிறியும். சிறி கூலிவேலை செய்பவன். ஐயாவுக்கு உதவியாக எப்போதும் கூடவே செல்பவன். இன்றும் அப்படித்தான் சென்றுவிட்டு வந்திருந்தான். வழமை போல் இன்றும் வழியில் சந்தித்த தேங்காய், வாழைக்குலை, பலாப்பழம் என்றெல்லாம் வாங்கி வந்தவற்றை 'குவாட்டர்ஸ்' கேற்றடியில் இறக்கிவிட்டு அவற்றை எடுத்து வீட்டில் கொடுத்து விட்டுக் காரியாலயத்துக்கு வரும்படி சென்றிருந்தார் சிவம். ஜீப்பை கொண்டுபோட்டு விட்டு 'றண்ணிங் சாட்' எழுதிக்கொடுத்துவிட்டு வரவேண்டும்!

சிறி இவற்றை எடுத்து வீட்டில் கொண்டு வைக்கும் போதுதான் முன்பக்கம் இருந்து குரல் கொடுத்தாள் பரிசோதகரின் மனைவி பாமினி.

"சரிம்மா இதோ வந்துடுறேன்" என்று கூறிய சிறி பொருட்களை எல்லாம் குசினியில் வைக்க வேண்டிய இடத்தில் வைத்துவிட்டு, கை கால் பைப்பில் அலம்பிக்கொண்டு முன்னால் வந்தான்.

முன்னால் வரும்போது 'அம்மா' என்று அழைக்கும் ஐயாவின் மனைவி மீது இருந்த அபிமானம் காற்றில பறந்துகொண்டிருந்தது. 'ஏன் தான் இந்தம்மாவுக்கு இந்தக் குணமோ?' என்று எண்ணியவனாக வந்து சேர்ந்தான் சிறி. அவனுக்குத் தெரியும் அம்மா அழைத்தது எதற்கென்று. ஆகவே வேண்டா வெறுப்பாக வந்து நின்றான். வழமையாக ஐயாவுடன் வெளியே சென்று வந்ததும் நடைபெறும் விசாரணைதான் இது.

"ஐயா எங்கெல்லாம் போனவர்?"

அவன் வழமை போல் ஒப்புவித்தான்.

"இரவு தங்கல் ஓவசியர் வீட்டிலா, சேர்கியுட் பங்களாவிலயா?"

"சேர்கியூட் பங்களாவிலதான் ஓவசீயரும் கூட நின்றவர்."

"நல்ல தண்ணிப் பாட்டி போல..."

தலையை ஆட்டினான் அவன்....

"வேற ஒருவரும் வரவில்லையா? ஐயாவைச் சந்திக்கல்லையா? வேறெங்கயும் போனவரா? உன்னை விட்டு விட்டு தனியே எங்கயும் போனவரா?"

சுற்றி வளைத்து எதைக் கேட்கிறாள் என்று அவனுக்குத் தெரியும்.

"பொம்பிளை ஒருவரையும் சந்திக்கல்லம்மா. நீங்க ஏன் ஐயாவில இப்படிச் சந்தேகப்படுறீங்க?" - நீண்டநாட்களாக கேட்க இருந்ததை இன்று கேட்டுவிட்டான்.

"அவரைப்பற்றி எனக்கல்லவோ தெரியும்? அவரில கவனமாக இல்லா விட்டால் என் வாழ்க்கைதான் பாழ..."

"போற வார நேரத்தில எவளையும் சந்திச்சா என்னிட்ட வந்து சொல்லிப் போடவேணும் தெரியுமா? நீயும் ஐயாவோட சேர்ந்து மூடி மறைச்சா உன்னை எப்படி வேலையில் இருந்து நீக்குவதென்று எனக்குத் தெரியும். ருசி கண்ட பூனையல்லவா அவர். அதுதான்..."

"நில் ரீ போட்டுத் தாறன் குடிச்சுத்துப் போ!"

"இல்லம்மா ஒப்பீசுக்குப் போயிட்டு ஐயாவோட வாறன்..." என்று பதிலுக்குக் காத்திருக்காமல் ஓடினான் அவன்.

சிவம் ஐயா கந்தோர் வேலையை முடித்துவிட்டு குவாட்டர்ஸ் நோக்கி நடையில் பாதிவழி வந்து விட்டதைச் சிறி கண்டான்.

அப்படியே தலைகுனிந்து நின்றவனை நோக்கி

"என்ன இன்றைக்கும் ஏதும் விசாரித்தாளா?" என்று கேட்டபடி வந்தார்.

தலையை ஆட்டியவன் "ஏன் ஐயா அம்மாவுக்கு உங்கள்ல இத்தனை சந்தேகம்?" என்ற கேள்வியில் 'இப்படிப் பட்டவளுடன் எப்படிக் குடும்பம் நடத்துகிறீர்கள்?' என்று அவன் கேட்காமல் கேட்டதாகப்பட்டது அவருக்கு.

"எல்லாத்துக்கும் நான்தான்டா காரணம். யானை தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டது போல, நானும் போட்டுக்கொண்டன்' என்று தன்னையே நொந்து கொண்டார்.

"என்னையா சொல்றீங்க? எனக்கு விளங்கல்ல" என்றான் சிறி.

மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாத நிலையில் அவனிடம் சொல்லாமல் நடந்தார். கடந்த கால நிகழ்வுகள் 'றீவைன்ட்' பண்ணப்பட்டு 'பிளே'யில் ஓடிக் கொண்டிருந்தது அவரது மனத் திரையில்.

•

கல்யாணம் ஆன புதிதில் ஒருநாள் இருவரும் ஓய்வாக அறைக்குள் இருந்த நேரம். பலதையும் கதைத்துக்கொண்டிருந்தனர். இருவரது கல்யாணமும் பேசிச் செய்தது. காதல் கல்யாணம் அல்ல. ஆகவே ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து வைக்க வேண்டியது அவர்களாகவே இருந்தது. அது தினமும் கட்டம் கட்டமாக நிறைவேறிக்கொண்டிருந்தது.

அப்படித்தான் இன்றும். அவளது மடியில் படுத்துக்கொண்டு இடுப்பை இரு கைகளாலும் சுற்றிப்பிடித்துக் கொண்டிருந்தான். அவளது கை அவனது தலையை நீவிக்கொடுத்துக்கொண்டிருந்தது.

"பாமினி நேற்று நான் எனக்கு விருப்பமானவை, விருப்பமில்லாதவை எல்லாம் சொன்னேன். அதுபோல் நீயும் உனக்கு விருப்பம், விருப்பமில்லாதவற்றைக் கூறினாய். இப்படி நமது ஒவ்வொரு கோணத்தையும் நாம் ஒருவருக்கொருவர் அறிந்து- புரிந்து பழகினால் நமக்குள் எந்தப் பேதமும் எற்படாது. வாழ்க்கை இன்பமாக அமையும்.

"இன்று நான் என் வாழ்க்கையில் சந்தித்த பெண்களைப் பற்றிச் சொல்கின்றேன். அதுபோல் நீயும் உன் வாழ்க்கையில் நடந்தவற்றைக் கூறிடு. அப்படி இருந்தால் பிறர் சொல்லி-அறிந்து மனதில் எழும் சந்தேகங்கள் வாழ்க்கையை பாழ்படுத்தாது அல்லவா?"

பாமினி மௌனமாய் இருந்தாள்.

அவளுக்கு அபாய அறிவிப்பு இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் இருந்து கேட்டது. ஏதோ ஒரு சினிமாப் படத்தில் பார்த்த ஞாபகம். இப்படித்தான் நாயகன் கேட்கிறான். நாயகியும் நம்பித் தான் காதலித்து ஏமாந்ததைக் கூறிவிடுகிறாள். அதன் பின்னர் அவள் வாழ்க்கையில் ஏற்பட்ட அனர்த்தங்கள்-கொடுமைகள் இப்போது எண்ணவே பாமினிக்கு கண்ணீர் வருகின்றது.

எந்த ஆணும் தான் இராமனாக இருக்க வேண்டும் என்று எண்ணுவதில்லை. நான் இராமனாக இல்லாவிட்டாலும் அவள் கண்ணகியாக இருக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர் என்ற எண்ணம் அவளை எச்சரித்தது.

அவன் இவளிடம் இருந்து பதில் எதையும் எதிர்பாராமல் தன் கதையைக் கூறிக்கொண்டிருந்தான்.

"சாந்தி என்றொரு பெண்ணை நான் பாடசாலை நாட்களில் விரும்பியிருந்தேன். அவளும் என்னை விரும்புவதுபோல் நடித்து பாடசாலை இறுதி வரை நடித்துவிட்டுப் பின்னர் என்னை ஏமாற்றிவிட்டாள். அதிலே நெஞ்சுடைந்து போன நான் பின்னர் எந்தப் பெண்ணையும் பார்க்கவில்லை. ஆனால் வேலைகிடைத்த பின்னர், எத்தனையோ பெண்கள் என்னை நாடி வந்தனர். இப்பவும் தான். நான் விரும்பியிருந்தால் நிரந்தரமாக அன்றி தற்காலிகமாகவும் வைத்து இருக்கலாம். ஆனால் நான்தான் விரும்ப வில்லை. இப்பவும் நான் உன்னை மணம் முடித்து இருப்பது தெரியாது, பலர் என்னை நாடி வருவதுண்டு. உன்னைப் பார்த்த கண்ணால வேறு பெண்ணைப் பார்ப்பேனோ? நான் விரும்பி இருந்தால் ஒன்றென்ன இரண்டென்ன விதவிதமாக ருசி பார்த்து இருக்கலாம். எனக்கெதற்கு நீ இருக்கும் வரை?......"என்று அவளை இறுக்கிப் பிடித்தான்.

இனி அவள் முறை. அவள் தயாராக இருந்தாள்.

"உனக்கெப்படி?" என்றான்.

"நான் படித்ததோ பெண்கள்கல்லூரி. ஆண்களைச் சந்திக்கச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. படிப்பு முடிந்ததும் வீட்டோடு நிற்பாட்டி விட்டார்கள் ஓ.எல். போதும். படித்து என்ன வேலையா பார்க்கப் போகிறாய்? என்று. வெளி ஆண்களுடன் பழகும் சந்தர்ப்பம் எற்படவில்லை. உங்களை பேசிப் பெண் பார்க்க வந்த போதுதான் பார்த்தேன்" என்றாள்.

'சப்' என்றிருந்தது அவனுக்கு. கதை வேறுபக்கம் திரும்பி விட்டது. ஆனால் பாமினியின் மனம் விழித்துக்கொண்டது. தனது கணவன் காணும் பெண்கள் ஆசை கொள்ளும் அழகன் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கவில்லை. அப்படிப் பட்டவனை தான் கவனமாகப் பேணிப் பாதுகாக்க வேண்டும். இன்னும் இவரைப் பெண்கள் சுற்றி வலை வீசலாம். ஆகவே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டாள்.

அன்றிலிருந்து அவள் கவனமாக இருந்தாலும் இப்போது அவன் தீவிரமாக இருப்பதை அவளால் அறிய முடிந்தது. இப்போது அவள் சிறியை வெளிப் படையாகவே விசாரிக்கத் தொடங்கிவிட்டாள். தான் 'நைற் அவுட்' போகத்தொடங்கியதில் இருந்து அவளுக்கு சந்தேகம் வந்துவிட்டது.

இனியும் பொறுக்க முடியாது. இன்று ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று எண்ணியவனாக வீட்டை அடைந்தான் சிவம்.

பாமினி, இருவரும் தூரத்தே வருவதைக் கண்டு தேனீர் தயாரித்து வைத்திருந்தாள்.

"பாமினி நீ பெரிய அகதா கிறிஸ்டி மாதிரி என்னை துப்பறிய வேண்டும் என்று முயற்சி எடுக்கிறாய். ஆனால் நீ அறிந்தோ, அறியாமலோ நமது குடும்ப இரகசியங்களை, மானத்தைக் கப்பல் ஏற்றுகிறாய். கேவலம். ஒரு கூலிக்காரனிடம் எனது நடத்தையைப் பற்றி விசாரிக்க உனக்கு வெட்கமாக இல்லை? சிறி நல்ல பையன் என்றபடியால் தப்பினோம். வேறு யாரும் என்றால் இந்நேரம் கந்தோர் முழுவதும் பரவி மரியாதை போறது மட்டுமல்ல, உன்னையும் தேடி யாரும் வந்திருப்பார்கள்...."

"நான்.... நான்......" என்று தடுமாறினாள் பாமினி.

"எனக்கு விளக்கம் தேவை இல்லை. உனது இந்தச் செயலை நான் பல மாதங்களாக அவதானித்து வருகின்றேன். தனிக்கட்டையாக இருந்த போதே ஒரு பெண்ணையும் நாடாதவன் நான். இப்போது உன்னை மணந்த பின்னர் இன்னொருத்தியை நாடவேண்டிய அவசியம் எனக்கில்லை. அந்தளவுக்கு நீ எனக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை. நானும் காமுகன் அல்ல.....

நீ என்னைச் சந்தேகப்படுவது போல் நான் உன்னைச் சந்தேகப்பட்டால் எப்படி இருக்கும் என்று எண்ணிப்பார். குடும்பம் குலைவதற்கு இவ்வாறான சந்தேகம் தான் காரணம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இதுதான் உனக்கு கடைசி எச்சரிக்கை. உணர்ந்து திருந்தினால் நமது குடும்பப் பயணம் தொடரும். அல்லது பிரிவில்தான் முடியும்." என்று கடகட வென்று பேசிவிட்டு அறைக்குள் சென்றான் சிவம்.

பாமினி தலைகுனிந்த வண்ணம் நின்றிருந்தாள்.

சிறி மெல்ல எப்போதோ நழுவி இருந்தான்.

தேனீர் கோப்பைகள் ஆறிக்கிடந்தன.

அன்று இரவு வரை அந்த வீட்டில் நிசப்தம் குடிகொண்டிருந்தது. இரவுச் சாப்பாடு கூட மௌனமாகவே இடம் பெற்றது.

இரவு படுக்கை அறையிலே புலம்பல் கேட்டது. 'என்னை மன்னித்து விடுங்கள்" என்று அவன் நெஞ்சில் கிடந்து அழுதாள் பாமினி.

ஆதரவோடு அணைத்துக்கொண்டான் சிவம்.

# மனப் புகைச்சல்

-ஸ்ரீவரணி வாழையூர்-

என்னால் லாவண்யாவை புரிந்து கொள்ள முடியாதிருந்தது. சில கணங்கள் சந்தோஷமாயிருப்பவள், பலநேரங்களில் எதையோ பறிகொடுத்தவள் போன்ற நிலையிலிருப்பாள்.

இக்கல்லூரிக்கு ஆசிரியையாக நான் மாற்றலாகி வந்து. ஒன்பது மாதங்கள் கடந்து விட்டிருந்தன. கடந்துபோன காலங்களில் என்னுடன் எட்ட நின்று பழகியவள் லாவண்யா மட்டும்தான். என்னுடன் மட்டுமல்ல எல்லா சக ஆசிரியைகளுடனும் இதே நிலைதான். ஆனால் சில காலமாக லாவண்யா என்னுடன் அணுகுவதில் ஒரு அதீத விருப்புத் தெரிந்தது, என்றாலும் பல சமயங்களில் எதையோ பறிகொடுத்தவள் போன்ற நிலைதான், எனக்குள் கேள்விக்குறி.

லாவண்யா, என்னைவிட இரு வயது இளமையாக இருப்பாள். என்றாலும் என்னைவிட உயரம் அதிகம். நெற்றியில் திருநீற்றுப்பூச்சு எப்போதும் இருப்பது அவளது விசேஷத்தன்மை.

பாட இடைவேளை நேரத்தில் எல்லோரும் 'ரெஸ்ட்ரூம்' இனுள் வரும்போது அவள் மட்டும் வகுப்பில் தனித்திருப்பாள். காரணம் மட்டும் எவருக்கும் புரியாது. அவளது தனிமையை விரட்ட எத்தனித்த எத்தனையோ பேர் அவள் வார்த்தைகளால் அடிபட்டே வந்திருக்கிறார்கள். மாணவர்களிடையே 'கொதிதண்ணி' எனும் செல்லப் பெயரும் அவளுக்குண்டு.

இவற்றிற்கெல்லாம் ஏதேனும் அடிப்படை இருந்தேயாக வேண்டுமென்பது எல்லோர் கணிப்பும். கூடவே, அவளது ஆளுமையே அப்படித்தானோ? என்ற சந்தேகமும். இருப்பினும் இது அவளது ஆளுமை இல்லையென்பது எனக்குப் புரிந்தது. என்றாலும் இதற்கெல்லாம் காரணம் தெரிய ஆசை, கூடவே அவளை கொடிய தனிமையிலிருந்து மீட்டுவர ஆசை.

இன்று எப்படியாவது இதற்கான காரணத்தை கேட்டுவிட வேண்டும் என்ற எண்ணத்தின் இறுதியில் பாட இடைவேளைக்கான மணி ஒலித்தது. எழுந்து அவளிருந்த வகுப்பினுள் புகுந்தேன்.

"என்ன லாவண் இன்றும் தனிமை தானோ?"

ஏதோ சிந்தனையிலிருந்து திடீரென விடுபட்டவள்,

"ஓ....அக்காவா? இல்ல கொஞ்சம் பேப்பர்ஸ் திருத்த வேணும் அதுதான்" சமாளித்தவள், "இருங்கள்" எதிரேயிருந்த கதிரையைக் காட்ட அதில் அமர்ந்தேன்.

"லாவண் உன்னிடம் ஒன்று கேட்பேன். ஒளிவில்லாமல் உண்மை சொல்ல வேண்டும். சொல்வாயா?" நேரடியாக விஷயத்திற்கு தாவினேன்.

"என்ன கேட்கப் போகிறீர்களென்று தெரியுமக்கா, ஏன் இப்படி இருக்கிறாய்? , எவரோடும் நன்றாக பழகுகிறாயில்லை, எப்போதும் தனிமையிலேயே இருக்கிறாய்?, இதுதானே?"

"ம்...சரி, புரிந்து கொண்டாய். அதுதான் கேள்வி, பதில் என்ன?"

"பிடிக்கவில்லை அக்கா, சூழவுள்ள மனிதர்களில் எவர் உண்மையானவர்கள்? எவர் போலியானவர்கள்? என்று தெரிகிறதில்லை. தெரிந்து கொள்ளும் அவசியமும் எனக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக, எனக்கு நானே போட்டுக் கொண்ட வட்டம் இது."

"அப்படிச் சொல்லாதே லாவண், எல்லா விரல்களும் ஒரே மாதிரி இருக்குமா? அப்படித்தான் மனிதர்களும். சில நேரங்களில் சில மனிதர்கள்..!"


"இல்லையக்கா, இந்தச் சமூகத்தால் நிரம்பவும் பாதிக்கப்பட்டவள் நான். அந்த வேதனை உங்களுக்குப் புரியாது."

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும், லாவண்."

"அந்த இதயமே என்னிடம் இல்லையே அக்கா." என்றவளை வியப்புடன் நிமிர்ந்து பார்க்க, சொல்லத் தொடங்கினாள்.

"எனக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்த சமயம், பெரிய எதிர்பார்ப்புக்களுடன், கனவுகளுடன் கல்வி கற்க உட்புகுந்தேன். படித்து பெரிய ஆளாக வேண்டுமென்ற ஆவலில் சதா படித்துக் கொண்டிருப்பதில்தான் எனக்குப் பிரியமே.

படிக்கப் படிக்க நிறைய விடை தெரியா சந்தேகங்கள். சந்தேகங்களை நிவர்த்திக்க 'சீனியர்' மாணவர்களின் உதவி நிறையத் தேவைப்பட்டது.



அதில் கூடியளவு உதவி புரிந்தவன், "அன்வர்."

அன்வரின் விளக்கங்கள், சொல்லின் தெளிவு, விளக்கமளிக்கும் முறை எல்லாமே எனக்கு கற்பதற்கு இலகுவாயிருந்தது. இதனால் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் நிவர்த்திக்க அன்வர் அவசியப் பட்டான்.

ஆனால் அதுவே, பலரின் நெஞ்சில் 'தீ' மூட்டியிருக்க வேண்டும்.

ஒருநாள் மாலை வகுப்பு முடிந்து வரும்போது, என் சக மாணவர்களுடன் சீனியர் மாணவர்கள் சிலர் என்னை வழிமறித்தனர், அதில் ஒருவன் சொன்னான்,

"லாவண்யா , நீ அன்வரோடு பழகுவது, சுத்துவது எல்லாம் எங்களுக்கெல்லாம் இஷ்டமில்லை. அவன் வேறமதம், நாம வேறமதம். உனக்குள்ள இருக்கும் எண்ணங்களை அழித்துப் போடு."

என்ன எண்ணங்கள்? யோசித்தபோது பிடிபட்டது. அன்வரோடு உள்ள உறவை தப்பிதமாக நினைத்திருக்கிறார்கள்.

சிரித்துக்கொண்டே சொன்னேன்,

"எந்த எண்ணங்களோடும் பழகவில்லை நான். பழகினாலும் அதற்கு உங்களெல்லோரினதும் இஷ்டம் எனக்கு அவசியமில்லை. ஆனா உங்களுக்கு சேர்த்துவைக்கும் எண்ணமிருந்தால் சொல்லுங்கள்."

"உனக்கு நிறையத் திமிரடி, உன் திமிரை அடக்குகிறோமா? இல்லையாவென்று பார்." சொல்லிவிட்டுப் போனார்கள்.

ஆனால் அவர்களே அறியவில்லை எனக்குள் 'காதல்' விதை விதைத்தவர்கள் அவர்கள்தானென்று. அப்போதும் இவ் விடயத்தை பெரிதாக எடுக்கவில்லை நான். ஆனால் எனக்கு நேர்ந்த இதே நிலை அன்வருக்கும் நேர்ந்தபோதுதான் நான் ரொம்பவும் நொந்து போனேன். காதலில்லா ஒரு உறவை களங்கப்படுத்த அவர்கள் நினைத்த போது விதை விருட்சமாக வளர்ந்து காதலாகிப் போனது. அடக்குமுறையில்தான் புரட்சி வெடிக்குமாமே, வெடித்தது இருவருக்குமே- காதல் என்ற உறவுமுறை.

வேற மதமாயிருந்தாலென்ன? மனமொன்று பட்டால்தானே வாழ்க்கை.

'மதம்' கொண்டதா காதல்? 'மனம்' கொண்டதல்லவா?

'மனம்' ஒன்றுபட்ட நிலையில் எங்கள் காதல் பரிணமித்த போது, மீண்டும் எச்சரிக்கைகள், வற்புறுத்தல்கள், மிரட்டல்கள். எல்லா எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் வளர்ந்தது எம்காதல். அச்சமயத்தில்தான், அங்கு 'கலவரம்' வடிவில் விதி விளையாடியது.

பிரச்சனைகளுக்கு 'இன' வடிவம் கொடுக்க 'இனப்பிரச்சனை' ஆகியது.

இதுவே, என்னை எச்சரித்தவர்களுக்கும் சந்தர்ப்பமாய் மாறியது.

அன்றைய நிகழ்வில், அங்கிருக்க அஞ்சி மற்றைய மாணவர்கள் சிலருடன் அன்வரும் வேறு பல்கலைக்கழகம் சென்றுவிட்டான். நீண்டகாலத் தொடர்பில்லாமல் அண்மையில் அன்வர் வீட்டிற்கு கடிதம் போட்டிருந்தான். அதை வீட்டார் பார்த்து, வானுக்கும், மண்ணுக்குமாய் குதித்து, வேறு இனம். வேற மதம்.... என்ற பழைய பல்லவியைப் பாடியே எம்மைப் பிரித்த போது..... வன்மமாய் மனசினுள் மூண்டதுதான் இந்த முடிவு.

சாதி, மதம், இனமென்று வேறுபட்டு வேறுபட்டே குரோதம் புரையோடிப்போன இந்தச் சமூகத்திற்கு எக்காலத்திலாவது மாறுபாடு வராமலா போய்விடும்? என் ஆயுளில் இவ் 'வேறுபாட்டில்' ஒரு மாறுபாடு வந்தால் அன்வரை மணப்பேன். அல்லது நானும், தமிழ் மண்ணில் பிறந்தவள்தான். மனங்கொண்டவனுக்கு முந்தானை விரிப்பேன். இன்னொருவனோடல்ல."சூடாக சொல்லி முடித்த போது...... குழம்பிப் போயிருந்தேன் நான். இதற்கு என்ன சொல்வது? எனக்குப் புரியவில்லை. மனசினுள் ஆயிரம் போராட்டங்கள். வார்த்தைகள் குழம்பிப் போயிருந்தன. வந்த வார்த்தைகளை வரிசைப்படுத்தியபோது ஒன்றுமட்டும் நிச்சயமாகப் புரிந்தது.

இது காலங்கள் போட்ட கோலம். காலங்கள் மாறுகின்றன, போட்டுவிட்ட கோலங்களில் பாதிப்புக்கள் சில அழியாமல் "வேறுபாடு" எனும் வன்முறையில் வாழ்ந்து கொண்டுதானிருக்கின்றன. லாவண்யாவிற்கு காலம் கனியாமல் போகலாம். ஆனால் காதல்?....மௌனமாய் எழுந்து போகின்றேன் நான்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## பதில் சொல்கிறார் ஐஸ்வர்யா

உங்கள் வாழ்க்கையின் இலட்சியம் என்ன?

எஸ். சங்கரதாஸ்-கண்டி.

பெரிதாக ஒன்றும் இல்லை சார். நல்ல நடிகை என்று பெயர் எடுத்து விட்டேன். ஒரு நல்ல மனைவியாக நடந்துகொள்வேன். தன்வீரின் முன்னேற்றத்தில் துணையாக இருக்க வேண்டும்.

•

திருமணமானபின் கொழும்புக்கு வந்திருந்தீர்களே. நமது இரசிகர்கள் பற்றி சொல்லுங்கள்?

என். மகுறூப்-புத்தளம்.

முதலில் அங்கு வரப் பயமாகத்தான் இருந்தது. சரி ஒரு சேஞ்சாக இருக்கட்டுமே என்று வந்தோம். ரசிகர்களின் வரவேற்பு ரொம்பவும் உற்சாகமாக இருந்தது. தன்வீர் கூட உனக்கு இத்தனை ரசிகர்கள் இருக்கிறார்களே என்று பாராட்டினார்.

•

உங்கள் தாயார் லட்சுமி நடித்த படங்களில் உங்களுக்கு விருப்பமான படங்கள்?

வி. பாயிட்-நீர்கொழும்பு.

சாரி- நினைவில் இல்லை.

•

உங்களைப்பற்றி பத்திரிகைகளில் தாயாரும், பாட்டியும் பேட்டிகள் கொடுத்து வருகிறார்கள். அதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

எ.ராஜேஸ்வரன்-கனடா.

இந்த விசயத்திலாவது அவர்கள் இருவரும் ஒருவிதமாய் பேசுகிறார்களே என்று சந்தோஷப்படுகிறேன்.

### இலங்கை இரசிகர்கள் வியக்க வைத்தனர்!



•

அடுத்து தாங்கள் நடிக்கப் போகும் படங்கள் எவை?

மு. தவரஞ்சனி-பண்டாரவளை.

பாண்டியராஜன் சாருடன் ஒரு புதிய படம் பண்ணுகிறேன். என்றாலும் முன்பு போல அதிக படங்களில் நடிக்க மாட்டேன். பாத்திரம் பிடித்திருந்தால் மட்டும் ஓ.கே.

•

உங்கள் திருமண வாழ்க்கை எப்படியிருக்கிறது?

ஆ.இந்திரமலர்- குருநாகல்.

அட்டகாசமாய் ஆரம்பித்திருக்கிறது. ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது.

•

இணைந்து நடித்த நடிகர்களில் தங்களை கவர்ந்த நடிகர் யார்?

உ. பாக்கியநாதன்-நுவரெலியா.

என்னை வம்பில் மாட்டிவிடப் பார்க்கிறீர்கள். எல்லோருமே ஒவ்வொரு விதத்தில் கவர்ந்தவர்கள்தான்.

•

சொந்தமாகப் படம் தயாரிக்கும் ஆசை இருக்கிறதா?

எஸ்.எம்.நௌசாத்-கல்முனை.

கிடையவே கிடையாது.

•

இன்றைய திரையுலகின் குறை-நிறைகள் பற்றிச் சொல்வீர்களா?

மா.சதீஸ்வரன்-கொழும்பு-7.

நிறைகள் நிறைய இருக்கின்றன. திரையுலகைச் சேர்ந்தவள் நான். குறைகளை பெரிதாக வெளியே பேச விரும்பவில்லை.

•

இலங்கை இரசிகர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?


ஆர். ஜெகஜோதி-திருகோண்மலை.

உங்கள் அன்பும், ஆதரவும் என்றும் இருக்க வேண்டும்.

•

ஐஸ்வர்யாவின் பதில்கள் இத்தோடு நிறைவு. பதில் சொன்னதற்கு வாசகர்கள் சார்பில் ஐஸ்வர்யாவுக்கு நிறைந்த நன்றிகள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—22



**இடமிருந்து வலம்**

1. சிக்க வைப்பதற்கென்றே வீசப்படுவது.
2. ஆரணங்குகள் அணிந்து கொள்வது.
4. இது பறக்கும்.
6. எதிரி என்பது இன்னொரு பெயர்.
7. சூரியனிடமும் இருக்கிறது. (வலமிருந்து இடமாக உள்ளது)
9. குளத்திலே குடியிருக்கும்.
10. இதை அணிந்த கையால் குட்டுப்பட வேண்டும் என்று சொல்வார்கள். (வலமிருந்து இடமாக உள்ளது)
11. வள்ளல் என்று பெயரெடுத்த மன்னன்.

**மேலிருந்து கீழ்**

1. இவரும் ஒரு கௌரவமான பிரதிநிதிதான்.
2. இதன் சங்கமம் கடலில்.
3. கையில் இருந்து காலம் காட்டும்.
5. பகட்டாகக் கட்டப்பட்டிருக்கும்.
7. இது மனநோயாளியின் கையில் இருந்தால் ஆபத்துத் தான்.
8. நீதி தேவதையின் கையில் இருப்பது.
9. வருடத்தில் இதுவும் ஒரு பகுதி.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 06.11.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-22
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல-20க்கான சரியான விடைகள்:**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தொ | லை | பே | சி | ■ | 2 ம | தி |
| ட் | 3 தே | ங் | 4 கா | ய் | ■ | ழு |
| டி | ■ | 5 உ | வ | ர் | ப் | 6 பு |
| ல் | ■ | 7 ப | ல | சா | லி | ■ |
| ■ | 8 ம | கா | ன் | ■ | 9 கோ | ■ |
| டை | 10 கு | ர | ■ | 11 ப | யி | ர் |
| ■ | டி | ம் | ■ | 12 அ | ல் | லி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.20இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. என். றொஷான் மட்டக்களப்பு.
2. எச்.எம்.எம். மஸ்னாவி புத்தளம்.
3. பர்ஹானா இஸ்மத் இஹான் புத்தளம்.
4. பெ. ஜீவராணி நுவரெலியா
5. எம்.சி.எம். சித்தீக் கஹடோவிட்ட.
6. திருமதி து. சரஸ்வதி அம்மாள் கொழும்பு 06.
7. எம். சக்திவேல் பண்டாரவளை.
8. ஏ.அசோக்ராஜா மட்டக்களப்பு.
9. ஏ.எம். இப்திகார் புத்தளம்.
10. கு. பிரகாஷ் திருகோணமலை.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா50/= வழங்கப்படும்.

# பெண்களும் சிறுவர்களும் பிடித்தமான உணவு! மிருக குணம் கொண்ட கொடிய மனிதன்!!

### நம்பமுடியாத நடந்த கதை

அவனது பெயர் ஆன்ட்றி சிக்காட்டிலோ. ரஷ்யாவைச் சேர்ந்தவன்.

மனிதனை தின்னும் கொடிய பசி கொண்டவன்.

நர மாமிச பட்சணி.

அவனது முதலாவது மனித வேட்டைக்கு விருந்தாக கிடைத்தது 9 வயது கொண்ட சிறுமி லேனா.

1978ம் ஆண்டு அந்த சிறுமியை துடிக்கத் துடிக்கக் கொலை செய்து திருப்தியோடு சாப்பிட்டான்.

அன்று தொடங்கிய வேட்டை 1990 வரை தொடர்ந்தது.

அதுவரை அந்த மனித மிருகம் சாப்பிட்ட மனிதர்களின் எண்ணிக்கை-

ஒன்றல்ல, இரண்டல்ல-

ஐம்பத்தி மூன்று!

பார்க்கும் போது ஒரு அப்பாவி போல இருப்பான்.

அதனால் எவரும் இலகுவில் சந்தேகப்படவில்லை.

அவனுக்கு மிகவும் பிடித்தவை இளம் பெண்களின் உடல்கள்தான். சிறுவர்களின் உடல்களும் அவனுக்கு நொறுக்குத் தீனி.

தனக்கு விரும்பியவர்களை தந்திரமாக அழைத்துச் செல்வான்.

ஓர் அடி நீளமான கத்தியால் அவர்களை குத்திக் கொலை செய்துவிடுவான்.

பின்னர் ஆறுதலாக இருந்து உடலின் பாகங்களை கத்தியால் வெட்டி வேகவைத்தும், சமைத்தும் சாப்பிடுவான். மர்ம உறுப்புக்களை உண்பதில் அந்த கொடியவனுக்கு பெரிய திருப்தி ஏற்படும்.

1984இல் ரஷ்யாவைக் கலக்கியது அவனது கொலை வெறி.

32 பேரை அப்போது கொன்று தின்று விட்டான்.

திருடும் பழக்கமும் இருந்ததால் இடையே சில காலம் சிறையில் இருந்தான். பின் வெளியே வந்து மீண்டும் இரை தேடும் படலம்.


1990ல் அந்தக் கொடியவனின் சுயரூபம் தெரிந்தது.

விசாரணைகளின் போது தான் செய்த கொலைகளை ஒப்புக் கொண்டான்.

விசாரணையின் போது அவன் சொன்ன தகவல்கள் திடுக்கிட வைத்தன.

"எவரும் காண முடியாத இடங்களுக்கு அழைத்துச் சென்று கொலை செய்வேன். அவர்கள் துடிக்கும் போதும், உடலில் இருந்து இரத்தம் பெருகும் போதும் ஆனந்தப்படுவேன். முதலில் கண்களைக் குத்திக் குருடாக்கிவிட்டு மூக்கையும், உதடுகளையும் வெட்டி எடுப்பேன்." என்று தன் கொலைவெறியை கூசாமல் ஒப்புக்கொண்டுள்ளான்.

இப்போது தூக்கில் ஏறும் தினத்துக்காக அந்த மனித மிருகம் சிறையில் காத்திருக்கிறது.




கொடியவனால் கொன்று தின்னப்பட்டவர்கள்






தவறு செய்யாத கவிஞன் யார்?

பெ. சந்திரசேகரன்-பூண்டுலோயா.

தவறு செய்யாத மனிதனே கிடையாது. பின்னர் கவிஞன் எப்படி இருக்க முடியும்? தவறுகள் திருத்தப்படுவதே முக்கியம்.

•

எனக்கு 24 வயது. இரவு 2 மணியில் இருந்து காலை 5 மணிவரை உறக்கம் வருவதில்லை. இதற்கு என்ன செய்யவேண்டும்.

எம். அஸரப்-கொழும்பு-02.

தகுந்த மருத்துவரை நாட வேண்டும். அல்லது தகுந்த மணமகளைத் தேடவேண்டும்.

•

கேள்வி கேட்பவன் சிறந்தவனா? பதில் சொல்பவன் சிறந்தவனா?

அஹமட் முபாறக்-ஒட்டமாவடி-3.

அது கேட்கப்படும் கேள்வி, சொல்லப்படும் பதில் என்பவற்றைப் பொறுத்து தீர்மானிக்க வேண்டிய விசயம்.

•

நம் நாட்டு கிரிக்கெட் அணியில் உள்ள முத்தையா முரளிதரனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இரா. சிவராஜா-இங்கிரிய.

மலையகத்தையும், முழு இலங்கையிலும் உள்ள தமிழ் பேசுவோரையும் பெருமைப்பட வைத்திருக்கிறார்.

•

தற்போது வெளிவரும் சினிமாப் பாடல்கள் வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு படிப்பினை ஊட்டுகிறதா?

இரா. பத்மசீலன்-செங்கலடி.

### அன்பு எப்படிப்பட்டது?

சில பாடல்கள் மட்டும். பெரும்பாலானவை என்ன பாடுகிறார்கள் என்று புரிவதேயில்லை. படிப்பினை எப்படி வருமாம்?

•

உலக சமாதானம் என்பது கேள்விக் குறிதான். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இந்து- இரத்தினபுரி.

அப்படித்தான் நானும் நினைக்கிறேன்.

•

அன்பின் சிந்தியா! அன்பு என்னும் விளக்கு அணைந்தால்?

எம்.பிரதாப் சந்திரன்-உடபுசல்லாவ.

வாழ்வில் இருள் சூழும்.

•

இசையமைப்பாளர் ஏ.ஆர் ரகுமான் இசை அமைக்கும் பாடல்கள் பற்றி?

எஸ்.எம்.பாறூக்-மன்னார்.

எல்லாமே ஓ.கே என்று சொல்லிவிட முடியாது. ரகுமானின் தென்கிழக்குச் சீமையிலே பாடல்கள் கேட்டேன். கிராமிய இசையில் ராஜா ராஜாதான் என்றே தெரிகிறது. ரகுமான்.....

•

நண்பன் போல் நடித்துக்கொண்டு துரோகம் செய்பவனை எப்படிக் கூறலாம்?

என்.வை. சத்துரு-மொரட்டுவை.

முதுகிலே குத்தும் பேடி.

•

மனைவி கணவனிடம் எதிர்பார்ப்பது என்ன?

எம். ஏ.எம்.லாபீர்-கிண்ணியா.

இன்பத்தையும்- துன்பத்தையும் பகிர்ந்து கொள்ளும் அன்புள்ளம்.

•

அகதிகளாக இருப்பவர்கள் பற்றி?

எம்.ஐ.அப்துல் காதர்-அக்கரைப்பற்று-07.

யுத்தம் உற்பத்தி செய்து குப்பைத் தொட்டியில் வீசியுள்ள எதுவுமறியாக் குழந்தைகள்.

•

அன்பு எப்படிப்பட்டது?

எஸ். நிர்மலா-வவுனியா.

அதுவே சுகம். அதுவே சுமை. இதம் தருவதும் அதுவே. சோகம் தருவதும் அதுவே.

•

சில திரைப்படங்கள் தோல்வியடையும் போதும் வெற்றிகரமாக ஓடுவதாக விளம்பரங்கள் வருகிறதே?

ஆ.பார்த்திபன்-மட்டக்களப்பு.

உண்மையைத்தானே சொல்கிறார்கள். தியேட்டர்களை விட்டு வெற்றிகரமாக ஓடுவதால் தானே தோல்வி.

•

நல்ல நண்பனை எப்படி அறிந்து கொள்வது?

ஏ.எம். நளிம்-இக்கிரி கொள்ளாவ.

அது ஒன்றும் சுலபமல்ல. நல்ல நண்பர்களை பெறுவது அபூர்வமாகிவருகிறது. வேசம் போடுவோர் அதிகமாகும் காலமிது.

•

மகளிர் மட்டும் படத்தில் கமலஹாசனும் நடிக்கிறாரா?

எம்.எஸ்.எம். முபாறக்-காங்கேயனோடை.

நடிக்கிறார். கௌரவ வேடத்தில்.

•

மனிதன் எப்போது மிருகமாகிறான்?

நி.சிறீரங்கன்-சிலாபம்.

மனிதனாக இருப்பதை பலவீனமாகக் கருதும் சிலர் அவனை ஏறி மிதிக்கும் போது.

## ஆன்மீகம்

# தரம் புரிந்து நெருங்குக

வைணவ மதத்திற்குப் புத்துயிர் கொடுத்தவர் ஆச்சார்யா ஸ்ரீராமனுஜர். அவர் திருவரங்கத்துக் கோவிலை நிர்வகிக்கும் அதிகாரியாகவும் இருந்தார். அவ்வமயம் அங்கு நடக்கும் ஊழல்களைக் கண்டு பிடித்தார். ஊழல் செய்பவர்களைக் கண்டித்தார்.

ஊழலிலேயே ஊறிந்து தேய்ந்து கொண்டிருந்த கோவில் பரிசாரகர்களுக்கு இது பெரிய தொல்லையாக இருந்தது. இந்த ராமானுஜரைத் தீர்த்துக் கட்டினால் தவிர தங்களால் விருப்பப்படி வாழ முடியாது என்று முடிவு செய்தனர். அவரை முடிக்க வழியும் கண்டு பிடித்தனர்.

தினமும் பிச்சை எடுத்துச் சாப்பிடும் சந்நியாச தர்மத்தைக் கடைப்பிடிக்கும் ராமானுஜருக்கு விஷ-அன்னத்தைப் பிச்சையிட்டு விடுவதே அந்தவழி. அப்படி ஒரு முயற்சி நடந்த போது ராமானுஜர் சூழ்நிலை உணர்வால் தப்பித்துக் கொண்டாலும் மனிதர்களின் ஈனப் புத்திக்கு மனம் வெதும்பி உணவையே துறந்து விட்டார்.



காவிரிக்கரை...மதிய நேரம். எதிரே வந்த குருவைக் கண்டு சுடும் மணலில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார் ஸ்ரீராமானுஜர்.

'எழுந்திரு' என்ற சொல் அந்தக் குருவிடமிருந்து வரவில்லை. அந்தச் சீடரும் எழுந்திருக்கவில்லை. நேரம் கடந்து கொண்டே இருந்தது.

சுற்றி நின்ற சீடர் கூட்டத்திடையே பலவகை உணர்ச்சிகள். ஆனால் ஒருவரும் பேசவில்லை.

பொறுக்க முடியாமல் கூட்டத்தை விலக்கிக் கொண்டு பாய்ந்து வந்து "கருமுகை மாலையைக் கடும் வெய்யிலிலேயிட்டுக் கனக்க மகிழ்ந்திருப்பதும் சிரமந்தானோ" என்றபடி ராமானுஜரைத் தூக்கினார் சீடர் கிடாம்பி ஆச்சான்.

அதுவரை கற்சிலைபோல் நின்றிருந்த திருக்கோஷ்டியூர் நம்பிகள் முகம் மலர்ந்தது. "இன்று முதல் ராமானுஜருக்கு உணவு தயாரித்துக்கொடுக்க வேண்டிய பொறுப்பு உன்னுடையது," என்று கூறினார்.

ராமானுஜரைப் பார்த்து "நன்மையைச் செய்ய நினைப்பவர், நடுவில் வரும் இன்னல்களால் மனம் சோரக் கூடாது" என்று கூறிச் சென்றார்.

மேலுக்குத் தேனொழுகப் பேசுவோர் நம்மைச் சுற்றி நிறையப் பேர் இருப்பார்கள். நம்மைச் சுற்றி இருப்பவர்களில் இன்னார், இனியர் என்று தரம் பிரித்தறிந்து வாழ்ந்தால் 'நீயும் இப்படியா?" என்று ஒரு கால கட்டத்தில் பதைக்கும் நிலை வராமல் தடுக்கலாம். வாழ்வில் வெற்றியும் பெறலாம்.

பிரகலாதன் -கண்டி.

# காவல்காரரின் நேர்மை

அரசைத் துறந்த ஆத்ம ஞானியான இப்றாகீம் தம்மைத் தெரியாத ஓர் ஊருக்கு போய் அங்கு பழத்தோட்டக்காவலாளியாக பணியாற்றிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு நாள் தோட்ட சொந்தக்காரர் அங்கு வந்து இப்றாகீமை அழைத்து எமது தோட்டத்தில் உள்ள திராட்சை மரங்களில் நல்ல திராட்சை பழங்களாக பார்த்து கொஞ்சம் பறித்து வாரும் என்று கட்டளையிட்டார்.

எஜமானின் ஆணைப்படி இப்றாகீம் தோட்டத்திற்குள் நுழைந்து சில பழங்களைப் பறித்து வந்து அவரிடம் கொடுத்தார்.

பழத் தோட்ட சொந்தக்காரர் அப்பழங்களில் ஒன்றை எடுத்து வாயில் வைத்தார். வாயில் வைத்தவரின் முகம் சுளித்தது. தூ, தூ எனத் துப்பினார். இன்னொரு பழத்தை எடுத்துச் சுவைத்துப் பார்த்தார். அதுவும் அப்படித்தான் புளித்தது. எஜமானுக்கு கோபம் வந்து விட்டது. "நல்ல பழங்களாப் பறித்துவரச் சொன்னால் இப்படித்தான் பறித்து வருவதா? எல்லாம் ஒரே புளிப்பு. எந்த மரத்துப் பழம் புளிக்கும், எந்த மரத்து பழம் இனிக்கும் என்று கூட உமக்குத் தெரியாதா?" என்று அவர் கேட்டார்.

"எஜமானே! நான் தோட்டக் காவலாளி மட்டும்தானே" என்று அமைதியாக பதில் கூறினார் இப்றாகீம்.

இதைக் கேட்ட தோட்டச் சொந்தக்காரர் இப்படிப் பதில் சொல்லும் மனிதர் அவராகத்தானே இருக்க வேண்டும் என எண்ணி ஏறிட்டுப் பார்த்தார். அவர் தாம் பக்தீரிய சுல்தானாயிருந்த இப்றாகீம் என்று தெரிந்து விட்டது.

தன்னை யார் என்பதை எஜமான் புரிந்து கொண்டார் என்று அறிந்து கொண்ட இப்றாகீம், இன்னும் இங்கிருப்பது நல்லதல்ல என்று தெரிந்து, அவ்வூரை விட்டே போய் விட்டார்.

கல்முனை எம். சி. கலீல்.

# பாகிஸ்தான் வீரர்களுக்குத் தடை! மீறினால் கடவுச்சீட்டு முடக்கம்!

துபாயில் கடந்த செப்டம்பர் மாதம் பாகிஸ்தானின் வாசிம் அக்ரம் லெவன் அணிக்கும், இந்தியாவின் அசாருதீன் லெவன் அணிக்கும் இடையில் காட்சி கிரிக்கெட் போட்டி நடைபெறவிருந்தது.

இந்தப் போட்டியை துபாயைச் சேர்ந்த இரண்டு பெரிய நிறுவனங்களும், இந்திய கிரிக்கெட் வீரர் அர்சாத் அயூப் தலைமையிலான அல்முபாரக் ஸ்போர்ட்ஸ் பவுண்டேசனும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.



ஆனால் நடைபெறவிருந்த போட்டி எதிர்பாராத விதமாக தள்ளி வைக்கப்பட்டுவிட்டது.


போட்டியை ஏற்பாடு செய்த வியாபார நிறுவனங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனையே தள்ளி வைப்புக்குக் காரணமாகும்.

துபாயில் உள்ள இரண்டு நிறுவனங்களும் சார்ஜாவில் உள்ள நீதிமன்றத்தில் ஒரு உத்தரவை வாங்கியிருக்கின்றன.

மறு அறிவிப்பு வரும் வரை பாகிஸ்தான் வீரர்கள் ஐக்கிய அரபு எமிரேட்டில் (யு.ஏ.ஈ) நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளக்கூடாது. மீறினால் அவர்களது கடவுச் சீட்டுகளை முடக்கி வைக்க வேண்டும் என்பதே நீதிமன்ற உத்தரவாகும்.'

தடைவிதிக்குள் சிக்கிய பாகிஸ்தான் வீரர்களின் விபரம்: கப்டன் வாசிம் அக்ரம், உதவி கப்டன் வாக்கர் யூனுஸ், ஜாவித் மியாண்டாத், அமீர் சோஹைல், முஸ்தாக் அகமது, அக்யூம் ஜாவித், சோயப் முகமது, மற்றும் இன்சமாம் வுல் ஹக்.

# தங்க மங்கை மீண்டும் தடகளத்தில்! தங்கம் வெல்வதே இலட்சியம்!!



'தங்க மங்கை' என்று அழைக்கப்பட்டவர் பி.டி. உஷா.

உலக விளையாட்டு அரங்குகளில் தனது அதிவேக ஓட்டத்தால் இந்தியாவுக்காக தங்கப்பதக்கங்களை வென்று வந்தவர்.

கடந்த சில காலமாக உஷா ஒதுங்கியிருந்தார்.

திருமணம் செய்து கொண்டதோடு விளையாட்டுலகத்தை விட்டு ஒரேயடியாக ஒதுங்கிவிட்டார் என்றே கருதப்பட்டது.

கடந்த மே மாதம் உஷாவுக்கு ஆண் குழந்தை ஒன்றும் பிறந்தது.

தனது கணவர் வி.சீனிவாசனுடன் இந்தியாவின் கேரள மாநிலத்தில் தங்கியுள்ள உஷாவை கடந்த இரண்டு வருடமாக விளையாட்டுலகம் மறந்துபோய் இருந்தது.

இப்போது மீண்டும் 'தங்க மங்கை' செய்திகளில் சிறப்பிடம் பெறத் தொடங்கி விட்டார்.

கேரளாவின் அழகான கடற்கரைகளில் ஓடிப்பயிற்சி செய்து தன் ஆற்றலை வளர்த்துக் கொள்கிறார். ஓயாத கால்கள்.

நவம்பர் மாதம் மணிலாவில் நடைபெறவுள்ள ஆசிய தடகளப் போட்டியில் பி.டி.உஷா பங்குகொள்ளப் போகிறார்.

அது 400 மீற்றர் ஓட்டப் பந்தயம். அங்கு தங்கம் வென்று வருவதே உஷாவின் இன்றைய கனவு.

திருமணமாகி குழந்தை ஒன்றுக்குத் தாயாகவிருப்பதனால் இவ்வாறு ஓட்டப் பந்தயங்களில் ஈடுபடுவது சங்கடமாக இருக்காதா என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

"ஒரு தாய்க்குரிய சில பணிகள், அதற்கான கால ஒதுக்கீடுகள் குறிக்கிடத்தான் செய்யும். அதே போல் குடும்ப வாழ்க்கையிலிருப்பதனால் கணவனுக்குச் செய்யும் பணி விடைகளுக்கும் இடம் தந்தாகத்தான் வேண்டும். எனது கணவரின் பூரண சம்மதத்துடன்தான் நான் இன்று, மீண்டும் விளையாட்டு அரங்கில் நுழைகிறேன்.

இன்று என்னுடைய பழைய ஆற்றலை மீண்டும் பெறுவதில் 85 வீதம் முன்னேறியுள்ளேன். விரைவில் முழுமையான சக்தியைப் பெற்றுவிடுவேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என்று கூறினார் உஷா.

பள்ளிச் சிறுமியாக, 12 வயதில் ஓட்டப்பந்தயங்களில் ஈடுபட ஆரம்பித்த உஷா 16 வயதாகும் போது, 100மீட்டர், 200 மீட்டர் மற்றும் 400 மீட்டர் ஓட்டங்களிலும் தடைதாண்டி ஓடும் பந்தயங்களிலும் முதன்மை நிலையினைப் பெறத் தொடங்கினார்.

இதனால் தேசிய மட்டத்தில் ஒரு சிறந்த வீராங்கனையாகக் கருதப்பட்ட உஷா, 1984ல் லொஸ் ஏஞ்சல்ஸில் இடம் பெற்ற 'ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தடைதாண்டி ஓடும் போட்டியில் மயிரிழையில் தவறினார். ஆனால் இரண்டு வருடங்களின் பின்னர் சியோலில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் போது மூன்று பந்தையங்களில், ஏற்கனவே நிலைநாட்டப்பட்ட சாதனைகளை முறியடித்து, 4 தங்கப்பதக்கங்களை வென்று இந்தியாவின் புகழை நிலைநாட்டினார்.

1990ல் பெய்ஜிங்கில் ஆசிய விளையாட்டு போட்டிகளின் போது, மூன்று வெள்ளிப் பதக்கங்களை மட்டுமே பெற்றார். இதன் பிறகு விளையாட்டுத்துறையினை விட்டு விலகிக்கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டார். நிரந்தரமாக விளையாட்டுலகை விட்டே ஒதுங்கி விடுவாரோ என்றே எல்லோரும் கருதினர். ஆனால் உஷாவின் மறு பிரவேசம் விளையாட்டுலக அவதானிகளுக்கு நம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது.

## ஸ்போர்ட்ஸ்

# வெற்றிப் போதையில் திளைக்கவேண்டுமானால் மரடோனா மறுபடி ஆடவேண்டும்!

உதைப்பந்தாட்டக் களத்தில் ஒரு கலக்குக் கலக்கியவர் மரடோனா. போதை மருந்து உட்கொண்ட விவகாரத்தில் அவர் மாட்டியபோது ஆர்ஜென்டினா அரசு அவரை ஒரு கலக்குக் கலக்கியது.

விருதுகள் பெற்ற கரங்களில் விலங்கு மாட்டி பொலிஸ் நிலையம், நீதிமன்றம் என்று அவரை இழுத்தடித்தது.

இந்நிலையில் உலகக் கோப்பை தகுதிச் சுற்றுக்கான போட்டி ஒன்று ஆர்ஜென்டினாவின் தலைநகரில் நடைபெற்றது.



ஆர்ஜென்டினா அணியும், கொலம்பியா அணியும் மோதிக்கொண்டன. அப்போட்டியைக் காண 60 ஆயிரம் இரசிகர்கள் குழுமியிருந்தனர். மரடோனாவும் பார்வையாளராக இருந்தார்.

போட்டியில் 5-0 என்ற கோல்கணக்கில் ஆர்ஜென்டினா கொலம்பியாவிடம் வாங்கிக்கட்டியது. பார்வையாளர்கள் தோல்வியைத் தாங்கமுடியாமல் 'மரடோனா, மரடோனா' என்று கூவினார்கள்.

மீண்டும் மரடோனா ஆர்ஜென்டினாவுக்காக ஆடவேண்டும் என்பதே பார்வையாளர்களின் கோரிக்கை.

மரடோனா அனைத்தையும் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். ரசிகர்களின் கோரிக்கை வெற்றி பெற்று விட்டது.

மரடோனா மீண்டும் ஆர்ஜென்டினா அணியின் கப்டனாக்கப்பட்டுள்ளார்.



# கத்தரித்த கடி ஜோக்ஸ்

- "சேர்- உங்களைப் பார்ப்பதற்கு யாரோ வந்திருக்கிறார்கள்."
- "நான் இல்லை என்று சொல்லிவிடு"
- "அது முடியாது. உங்கள் குறட்டைச் சத்தம் அவருக்குக் கேட்டுவிட்டது."

கணவன்- குடித்திருக்கும் போது நீ அழகாக இருக்கிறாய்.
மனைவி- சேச்சே நான் எங்கே குடித்தேன்?
கணவன்- அதாவது நான் குடித்திருக்கும் போது நீ மிகவும் அழகாக இருக்கிறாய்.

ராமு- நீ ஏன் கண்ணை மூடிக் கொண்டு சாப்பிடுகிறாய்?
கோபு- கண்டதையும் சாப்பிடாதே என்று அப்பா சொல்லியிருக்கிறார்.

அவள்- இந்த உடையில் நான் அழகாக இருக்கிறேனா?
அவன்- இந்த உடை இல்லாவிட்டாலும் அழகாக இருப்பாய்.

மிஸ்- நான் செய்த குற்றத்தை மன்னிக்க முதலில் என்ன செய்யவேண்டும்?
மாணவன்- குற்றம் செய்ய வேண்டும்.

அவர்- இருபது ஆண்டுகளாக என் செருப்பு தேயவே இல்லை.
மற்றவர்- அது எப்படி?
அவர்- அதை நான் போடுவதே இல்லையே.

நண்பர்- உங்க வீடு கூப்பிடும் தூரத்தில் என்று சொன்னீர்கள். நீண்ட நேரமாக நடக்கிறோமே இன்னும் வீடு வரக் காணோம்.
மற்றவர்- தொலை பேசியில் கூப்பிடும் தூரம்.
நண்பர்- ???

நீதிபதி- அடிக்கடி நீதிமன்றத்துக்கு வருகிறாயே உனக்கு வெட்கமாக இல்லையா?
திருடன்- தினமும் வரும் ஐயா நீங்களே வெட்கப்படாத போது, நான் எதுக்கு வெட்கப்பட வேண்டும்.

அவள்- பாஸ்கர் நீ சொன்னபடி எல்லாம் கேட்கிறானே. மெஸ்மரிசம் ஏதாவது பண்ணி விட்டாயா?
மற்றவள்- ம்ஹீம்.... கிஸ்மரிசம் பண்ணி விட்டேன்.

அவன்- நான்தான் உன்னுடன் முதலில் தூங்கும் ஆண்மகனா?
அவள்- உண்மையாகவே நீங்கள் தூங்குவதானால் அப்பித்தான்.

- "வெடி வெடித்ததும் ஏன் எல்லோரும் அழுகிறார்கள்?"
- "வெடித்தது வெங்காய வெடியாச்சே"

ரகீம்- காந்தித்தாத்தா எந்த பற்பசை உபயோகித்திருப்பார்.
நதீம்- எதுவுமே இல்லை.
ரகீம்- ஏன்?
நதீம்- அவருக்குத்தான் பல்லே கிடையாதே.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

தீர்ந்த நேர்த்தில் நடை முடித்துத் தருவது
எங்கள் தனிச்சிறப்பு.
அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு–11.
தொ.பேசி: 436331

## முஸ்லிம்கள்!

பொஸ்னியாவில் செர்பியர்களும், குரோஷியர்களும் மோதிக் கொள்ளுகின்றனர். அவர்கள் தமக்குள் மோதிக் கொள்ளும் போதும் முஸ்லிம்களை அழித்துக்கட்டும் விடயத்தில் மட்டும் ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

ஏற்கனவே செர்பியர்களால் நிர்மூலமான முஸ்லிம்கள் இப்போது குரோஷியர்களால் வேட்டையாடப்படுகின்றனர்.

இருபுறமும் உதைபடும் பந்தாக மாறியுள்ள முஸ்லிம்களை ஐக்கிய நாடுகள் சமாதானப் படை கூட காப்பாற்ற முடியவில்லை. திகைத்துப் போய் நிற்கிறது.




நன்றி- ஏசியா வீக்

# கோர யுத்தமும் சோகம் சுமக்கும் மக்களும்!

உள்நாட்டுப் போர் உருக்குலைத்துப் போட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் ஒன்று அங்கோலா.

கடந்த 18 வருட காலமாக தீராத யுத்தம்.

யுத்தத்திற்கு இரையாக மடிந்தது ஒரு இலட்சம் மக்கள்.

ஐக்கிய நாடுகள் தலையீட்டினால் இடையிலே சிறு அமைதி ஏற்பட்டது.

அது புயலுக்கு முந்தைய அமைதி. இப்போது மறுபடி யுத்த மேகங்கள் அங்கோலாவை இருளாக்குகின்றன.

வழக்கம் போல யுத்தம் அங்கும் அகதிகளை உருவாக்கியிருக்கிறது.

அகதிகளுக்கு அனுப்பப்படும் நிவாரணப் பொருட்களை அதிகாரிகள் சுருட்டிக் கொள்கிறார்கள்.

எரியும் வீட்டில் பிடுங்குவதே லாபம் என்று கள்ளச் சந்தை வியாபாரிகள் கொழுத்து வருகிறார்கள்.

எங்கும் மரண ஓலங்களே எதிரொலிக்கின்றன.

மருத்துவமனைகளில் மருந்துப் பொருட்கள் இல்லை.

பசியும் பிணியும் தினமும் மரணம் விதைத்து அங்கோலாவை அலங்கோலப்படுத்தி வருகின்றன.


30 இலட்சம் மக்கள் போரின் கரங்களுக்குள் வாழ்க்கையை தொலைத்துவிட்டு விரக்தியின் வாசலில் நிற்கின்றனர்.

கொடியது யுத்தம். இதற்கு முடிவு எப்போது. விடிவது எப்போது என்பதுதான் சோகம் சுமக்கும் மக்களின் எதிர்பார்ப்பு.

அங்கோலாவில் மட்டுமல்ல. நம் நாட்டிலும் அதுதானே எதிர்பார்ப்பு?

யுத்தமும் எங்கும் ஒரே விதமாகத் தான் கோரம் செய்கிறது.

யுத்தத்தின் சுமை தாங்கும் மக்களும் எங்கும் ஒரே விதமாகத்தான் சோகம் தாங்கி நிற்கின்றனர்.



## பலமுள்ளவன் வாழ்வான்

படத்தில் உள்ளவர் உலக ஆணழகன் பட்டத்தைத் தட்டிக் கொண்டவர்.

பெயர்-டொல்ப் லண்ட்கிறென்.

ஆணழகன் பட்டம் பெற்றவரை திரையுலகம் தேடி வந்தது.

"மாஸ்டேர்ஸ் ஒப் தி யுனிவேர்ஸ்" படத்தின் கதாநாயகனாகத் தோன்றினார்.

6 அடி 6 அங்குல உயரம் கொண்ட இந்த ஆணழகன் மேற்கொண்ட பயிற்சிகள் ஏராளம்.

எதற்கும் முயற்சிகள் முக்கியம். பயிற்சிகள் அவசியம். உள்ளத்தின் பலமும், உடலில் வலுவும் சாதிக்கும் திடமும் இருந்தால் வாய்ப்புகள் தேடி வரும்.

இந்த ஆணழகனைத் தேடியும் வாய்ப்புகள் வந்து குவிகின்றன.



வாரமலர் தினமுரசு





## கண்மூடி பின் செல்ல வேண்டாம்

ஆள் பாதி, ஆடை பாதி. இப்போது அந்த பாதி ஆடையும் பாதிக்கு பாதியாக குறைந்து வருகிறது.

நாகரிகம் வளர்வது நல்லதுதான். ஆடைகள் எப்படி கூட தேவைக்கேற்ப வேலை நிலைகளுக்கு ஏற்ப, சூழலுக்கு ஏற்ப அணியப்படுவதில் தவறு ஒன்றுமில்லை.

ஆனால் ஆடைகளே கூடாது என்பது நிர்வாணத்தை வியாபாரமாக்கும் விசயம்.

மறைக்கப்பட வேண்டியவை மறைந்திருப்பதே அழகு. அந்த அழகை அறிவித்துவிடுவதே சுவாரசியம்.

ஆணுக்கு பெண், பெண்ணுக்கு ஆண் ஒருவரை ஒருவர் கவர்தலில் காட்டும் தீவிரம் வாழ்க்கைக்கு வலுவூட்டும்.

ஃபாசன் என்ற போர்வைக்குள் நிர்வாணத்தை விற்று விளம்பரம் தேடும் யுக்தி மேலைநாடுகளில் பரவிவிட்டது.

இப்போது வானத்தை சந்திரனாக்கிவிடுதல் வாலை வழியே நம் வீடுகளுக்குள்ளும் அந்த விளம்பரங்கள் முகம் காட்டுகின்றன.

அதற்காக கண்ணை மூடிக் கொண்டா இருக்க முடியும்?

வேண்டாம்! ஆனால் மேலை நாகரிகம் அனைத்தையும் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றாமல் இருப்போம். அது போதும்.

## பணம் விளையாடுகிறது வீரம் தரம் இழக்கிறது!

குத்துச் சண்டைக் காட்சிகளை நேரடியாகக் கண்டுகளிக்கும் இரசிகர்கள் தொகை உயர்ந்து வருகிறது. உயிரைப் பணயம் வைத்து நடைபெறும் மோதல்கள் பார்ப்பவர்களை பரவசமூட்டுகின்றன.



பணம் குவிகிறது. பரிசில்கள் சேருகின்றன. விருதுகள் குவிகின்றன. இப்போது குத்துச் சண்டை பணம் கறக்கும் விளையாட்டாகி விட்டது. தொலைக்காட்சி நிறுவனங்கள் பெருந்தொகைப் பணம் கொடுத்து குத்துச் சண்டைப் போட்டிகளை ஒளிபரப்பும் உரிமை பெறுகின்றன. பெருந்தொகையான இரசிகர்கள் கண்டுகளிக்கும் நிகழ்ச்சி என்பதால் விளம்பரங்கள் குவியும். தொலைக்காட்சி நிறுவனங்கள் போட்ட பணம் பல மடங்காய் பெருகும்.

பெரும் வர்த்தகர்கள் தமது பணத்தை குத்துச்சண்டைப் போட்டிகளில் முதலீடு செய்கின்றர். லாபமே குறி. குத்துச்சண்டை வீரர்களுக்கும் பணமே குறி.

ஆக, வீர விளையாட்டு இப்போது பணமோகத்தில் தன் சிறப்பை இழக்கத் தொடங்கிவிட்டது.



## ஒரே பாய்ச்சல்

உயரம் பாய்தலில் ஒரு உலக சாதனை. 1993ல் ஜூலை 30இல் 2.45 மீற்றர் உயரத்தை இந்த வீராங்கனை தாண்டிவிட்டார். [illegible]



[illegible] ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.